# வீரன் வேலாயுதம்
## நினைவு வெளியீடு

30.10.49

T020184
Saraswathi Mahal Library. Thanjavur

வெளியிட்டது :

# எரிமலைப் பதிப்பகம்

துறையூர், திருச்சி மாவட்டம்.

# நல்ல தீர்ப்பு

D. சுந்தரம்

விற்பனை உரிமை:

ஔவை நிலையம்

காரை அஞ்சல்,

திருவானைக்கோயில் வழி, திருச்சி மாவட்டம்.

எரிமலை வெளியீடு
முதல் பதிப்பு
ஜூன் 1949
விலை ரூ. 1—8—0

சகலஉரிமையும்
ஔவை நிலையத்தாருக்கே

சென்னையில்
பிரதிகள் கிடைக்குமிடம்:
எம். சூரி,
14-எ குப்பையர் தெரு,
ஜி. டி. சென்னை.

ஸ்டார் பிரஸ், துறையூர்.
பிரதிகள் 1000

# வீரன் வேலாயுதம்

வீணர்களின் சதியால் வீழ்த்தப்பட்ட வீரன் வேலாயுதம் உடையார்பாளேம் தாலூகாவில் உள்ள காடிகுளம் என்னும் ஊரில் படையாச்சி மரபினராம் சாமிநாதருக்கும் பொன்னுச்சியம்மைக்கும் பராபவ ஆண்டு புரட்டாசித் திங்கள் 10ம் நாள் பிறந்தார்.

அவர் முறையே ஜெயங்கொண்டம் ஆரம்பப்பள்ளி, உடையார்பாளேயம் மத்தியதரப் பள்ளி ஆகியவற்றில் பயின்று தேர்ச்சிபெற்று, திருச்சி போதனுமுறைப் பள்ளியில் பயின்று 1928—29ம் ஆண்டு போதகாசிரியராகத் தேர்ச்சி பெற்ருர். பின் முதலாவதாக ஆண்டிமடம் என்ற ஊரிலும், முறையே சிறுகையூர், மீன்சுருட்டி, புதுச்சாவடி இராங்கியம் ஆகிய ஊர்களிலும் உள்ள திருச்சி நகராண்மைக் கழக பள்ளிகளில் ஆசிரியராக வேலேபார்த்தார். அக்காலங்களில் தனக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களில் தன்மான இயக்கத்தால் தான் அறிந்தவற்றை மக்களுக்கு மேடைப் பேச்சுகள் மூலம் எடுத்துரைப்பது, தமிழ்த் திருமணங்களே நடத்திவைப்பது ஆகிய பொதுப்பணிகளேச் செய்து வந்தார். இப்போக்கு மதவெறி பிடித்த மனித குலக் கரையான்களுக்கும், கள்ள மார்க்கெட் பிரபுக்களுக்கும், மாறுபட்ட கருத்துள்ள சில அரசியல்வாதிகளுக்கும் அவர்பால் வெறுப்பூட்டிற்று.

தன்மானத்தைக் கைவிட மறுக்கும் ஆசிரியர்களுக்கு நகராண்மைக்கழகம் அளிக்கும் பரிசு ஊர் மாற்றம். அதற்கும் நமது ஆசிரியர் விலக்காகவில்லே. ஆகவே லால்குடி தாலூகாவில் உள்ள சாளப்பட்டி என்ற ஊருக்கு மாற்றப்பட்டார். அடிக்கடி ஏற்படும் ஊர் மாற்றங்கள், மதவாதிகள், பணமூட்டைகள் ஆகியோரால் ஏற்பட்ட தொல்லேகள் ஆகியவற்றுக்கு மாற்றம்காண மற்ருெரு தோழருடன் பட்டாளத்தில் சேர முயன்று தோல்விபெற்ருர். எனவே சாளப்பட்டியிலேயே ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

திருச்சி நகராண்மைக் கழகம் ஜனுப் உஸ்மான் அவர்கள் தலைமையின்கீழ்வந்தபோது, தோழர் வேலாயுதம் உடையார்பாளையம் பள்ளிக்கு மாற்றப்பட்டார். இக்காலத்தில் 20—5—48ல் நிறுவப்பட்ட உடையார்பாளையம் தாலூகா கல்வி வளர்ச்சிக் கழகத்தின் செயலாளராகவும் பணியாற்றிவந்ததோடு திராவிடர் கழக அனுதாபியாகிய அவர் பல பொதுக்கூடங்களிலும் சொற்பெருக்காற்றி மக்களின் உள்ளத்திலே இடம் பெற்ருர்.

அவரின் இந்த வெற்றி வாழ்வுக்கு உறு துணையாக விளங்கியவர் அவரது அருமை மனைவியார் ஜெகதாம்பாள் அம்மையார் ஆவார். இருவருக்கும் உதித்த புதல்வியர் மங்கையர்க்கரசி, மணிமேகலை ஆகிய இருவர். மங்கையர்க்கரசி உடையார்பாளையம் உயர்நிலைப் பள்ளியில் நான்காவது பாரத்திலும், மணிமேகலை ஆரம்பப் பள்ளியில் நான்காம் வகுப்பிலும் பயின்று வருகின்றனர்.

அருமை மனைவியும் மக்களும் பரிதவிக்க — ஏன் தமிழ் நாடே பரிதவிக்க தோழர் வேலாயுதம், உடையார்பாளையத்தில் வீணர்களின் சூழ்ச்சிக்கு இரையானுர். அந்தோ நாட்டுக்கு நல்லது செய்து வந்த ஒரு உத்தமனின் ஆவி பிரிக்கப்பட்டது.

பிரிக்கப்பட்ட வேலாயுதத்தின் ஆவி நாட்டைப் பார்த்து, நாட்டு மக்களைப் பார்த்து, நீதியைப் பார்த்து, நீதி தேவனைப் பார்த்து கேட்கிறது; "நாட்டிலே உள்ள நலிவை நீக்க, நயவஞ்சகர்களின் நடிப்பை வெளியாக்க, உழைப்பை உறிஞ்சும் உலுத்தர்களின் ஒய்யாரத்தை ஒழிக்க உழைத்தேன். நீதிக்காகவும், நேர்மைக்காவும் போராடினேன். அதற்கு கிடைத்த பரிசு உயிர் நீக்கம். இது நீதியா" என்று.

இந்தக் கேள்வியைக் கேட்ட மக்கள் கூறுகின்றுர்கள் அவரின் வழக்கை விசாரிக்கும் நீதிமன்றத்தை நோக்கி "தேவை ஒரு நல்ல தீர்ப்பு" என்று. நின்று இருந்து காண்போம் நீதியின் முடிவை.

## படித்துப்பாருங்கள் ★

நேர்மையும், நன்மையும்
நிறைந்த மக்கள் உலகைக்
காட்ட வழிகூறும்

ரா. தணலன் எழுதிய

# பதில் கூறுங்கள்

விலை எட்டணா தான்

★ ★ ★ ★

நாரா நாச்சியப்பன் எழுதிய
இனிய கவிதைகள்

# இன்பத் திராவிடம்

விலை 0—4—0 விற்பனை கழிவு 25%
செலவு இனாம்

தனிப்பிரதி வேண்டுவோர் விலையுடன்
ஒரு அணா ஸ்டாம்பு அதிகம் அனுப்பவும்

விவரங்களுக்கு :-

# எரிமலைப் பதிப்பகம்

துறையூர், திருச்சி மாவட்டம்.

# நல்ல தீர்ப்பு நாடக நூலைப்பற்றி அறிஞர்களின் மதிப்புரைகள்

மா. இளஞ்செழியன் B. A. Hons.
ஆசிரியர், "போர்வாள்"
சென்னை.

தன் குகையை விட்டு வெளியே வந்து கர்ஜிக்கும் சிங்க ஏறு போல, தமிழகம், இந்நாளில், பழமைக் கருத்து களையும் பத்தாம் பசலித் தத்துவங்களையும் உதறி எறிந்து விட்டு, புத்தம் புதிய புரட்சி முழக்கம் புரியத் தொடங்கி விட்டது புதுமையில் ஆர்வமும், புரட்சியில் நாட்டமும் செந்தமிழிடம் புதிய பற்றும் தமிழகம் எங்கணும் பொங் கித் ததும்புகின்றன. தமிழர் உள்ளமெல்லாம் மறுமலர்ச்சிக் கட்லிலே குதித்துக் குதித்துக் கூத்தாடத் தொடங்கி விட்டன. "சாயினும் கிழாய்ச் செந்தமிழ் நாட்டார் நலிவதை நான்கண்டும், ஓயுதல் இன்றி அவர் நலம் எண்ணி உழைத்திட நான் தவறேன்" என்னும் பண் தமிழகத்தில் வீதிதோறும் வீடுகள்தோறும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டன.

தமிழர் தம் வாழ்க்கைத்துறை ஒவ்வொன்றிலேயும் புதியதோர் எழுச்சியும் கிளர்ச்சியும் முகிழ்த்தெழுந்து விட்டது இன்பத் திராவிடமே நமது இலட்சியம் என்னும் கீதம், சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு என்னும் நாதம், அமைத்தே தீருவோம் பொதுவுடமை சமுதாயம் என்ற பேரொலி—இவை மூன்றும் எழாத இடமில்லை இன்று தமிழகத்தில்! ஆம்! தமிழ்நாடு இன்று, புரட்சியின் தொட்டிலாக, சுயமரியாதை எரிமலையாக, திராவிடர் இயக்கப் பாசறையாகத்தான் காட்சி அளிக்கின்றது!

இந்த நல்ல உண்மையை உங்கட்கு எடுத்துக்காட்டும் நல்லதோர் நாடக நூல்தான், இதோ உங்கள் கரத்திலே தவழ்ந்து விளையாடும் இந்த "நல்ல தீர்ப்பு" தமிழகத்திலே தோன்றியுள்ள மறுமலர்ச்சியின் வேகத்தையும் விறுவிறுப்பையும் மட்டுமல்ல, அதன் எழிலையும் இன்பத்தையும், அதனால் விளையக்கூடிய பயனையும், நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய வலிவையும்கூட இந்த நாடகம் எழிலுற எடுத்துக் காட்டுகிறது. நாடகக் கதையும், கதைசெல்லும் முறையும் நன்கு அமைந்துள்ளன. நாடகாசிரியர் கையாளும் தமிழ் எளிமையும் இனிமையும் அமைந்ததாய், எல்லார்க்கும் புரிவதாய் பேச்சு வழக்கோடு ஒட்டிய பெற்றியதாய்— அமைந்திருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது தமிழகத்தில், திராவிடர் கழகம், தொடுத்து நடத்திவரும் மறுமலர்ச்சிப் போராட்டத்திற்குக் கிடைத்துள்ள ஒரு சிறந்த போர்வாள் இந்த நாடகம் இந்த வீரவாளின் தன்மை. விளக்கத்தை இனியும் நான் கூறிக்கொண்டிருக்கத் தேவையில்லை. இதோ, நீங்களே, இரண்டொரு விநாடி நேரத்தில் இந்த ஆயுதத்தின்சிறப்பை அறிந்து மகிழப்போகின்றீர்கள். மகிழுங்கள். நான் போய் வருகிறேன். வணக்கம்.

## K. K. நீலமேகம்,

**மத்திய திராவிடர் கழக உபதலைவர்,**

பெரியார் மாளிகை, குடந்தை.

தோழர் சுந்தரம் அவர்களால் எழுதப்பட்ட நல்ல தீர்ப்பு என்ற நாடகத்தின் கையெழுத்துப் பிரதியைப் பார்த்தேன். மது உண்ட மயக்கத்தால் மயங்கிக் கிடக்கும் மக்களைவிட, மதமென்னும் நம்பிக்கையால் மயங்கி, தங்கள் அறிவையிழந்து வாழும் மக்கள் நிறைந்த நம் நாட்டிற்கு இது போன்ற புத்தகம் நல்வழி காட்டி, புத்தியைத் தீட்டி, நாட்டு மக்கள் நல்லொழுக்கத்துடன் வாழ வழி காட்டுமென்று நம்புகிறேன். இப் புத்தகம் படிக்கப்படுவதோடு மட்டுமின்றி, நல்ல நடிகர்களைக்கொண்டு நாடகக் கலை மூலமாக நடித்துக் காண்பிக்கப்பட்டால் நல்ல பலன் அளிக்கும் என்று நம்புகிறேன்.

ஃ ஃ ஃ

## A. P. ஜனார்த்தனம் M. A.

'நல்லதங்காள்' நாடகத்துக்கு மக்களிடையே மதிப்பு மாறி 'நல்ல தம்பி' க்குச் செல்வாக்கு வளருவானேன். 'சாவித்திரிக்கு' இருந்துவந்த இடத்தை 'வேலைக்காரி' பிடித்துவிட்டதேன்? இராமாயணம், இரணியன் நாடகத்துக்கு இடம் தருவானேன். சீர்திருத்த நாடகங்களுக்கு தற்போது மதிப்பு வளர்துள்ளதற்கு காரணம் என்ன? பெரியாரும் அவரது நண்பர்களும் இடைவிடாது பிரசாரம் செய்துவந்ததின் பலன்தான்.

சீர்திருத்தக் கருத்துக்களில் ஆர்வம் கொண்ட தோழர் D. சுந்தரம் அவர்கள் 'நல்ல தீர்ப்பு' என்ற நல்ல நாடகத்தை தமிழகத்துக்குத் தந்துள்ளார். அறிவியக்கத்தில் ஆர்வமுள்ள வாலிபர்கள் ஆதரிக்கவேண்டுகிறேன்.

## C. V. M. அண்ணாமலை,
## தமிழர் சிற்றுண்டி உணவு விடுதி,
## காஞ்சீபுரம்.

'நல்ல தீர்ப்பு!' என்ற எழுச்சி மிக்க நாடக நூல் ஒன்றினைத் தோழர் சுந்தரம் அவர்கள் எழுதிக்கொண்டு வந்து நமது தளபதி அண்ணா அவர்களிடம் மதிப்புரை வாங்கிச் செல்ல காஞ்சீபுரம் வந்தார். அண்ணா ஊரிலில்லாமையால் வருத்தமுற்று, எனது தமிழர் சிற்றுண்டி உணவு விடுதியில் தங்கினார். என்ன என்றேன். 'நல்ல தீர்ப்பை' எடுத்தார்! கொடுத்தார்! வேறு பல அலுவல்கள் காரணமாக ஊசலாடிக் கொண்டிருந்த என் உள்ளத்தை ஒருமைப் படுத்தி விட்டது நாடகக் கதைக் கட்டுக்கோப்பு! பழமைக்கு ஒரு கசையடியும், புதுமைக் கருத்துக் ந ஓர் புத்துணர்ச்சியும், வஞ்சனைக்கு ஓர் விளாசலுமாக விருவிருப்புடன், இளைஞர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விதத்திலே நாட்டுக்குத் தேவையான கருத்துக்கள் ஒருங்கே அமையப்பெற்றதாக இருந்தமை கண்டு பெருமகிழ்ச்சியடைந்ததோடு இத்தகைய நல்ல தீர்ப்பை நமது நாட்டின் நீதிபதிகள் வழங்க வேண்டுமென்று ஆவலுறுகிறேன்.

ஃ ஃ ஃ

## C. P. சிற்றரசு

நமதருமைத் தோழர் D. சுந்தரம் அவர்கள், 'நல்ல தீர்ப்பு' என்ற ஒரு நல்ல எழுச்சிமிக்க நாடகத்தை, சொற்களுக்கெல்லாம் உயிரேற்றி உணர்ச்சி ஒவ்வொரு திராவிடனின் எண்ணத்தினடிவாரத்திலிருந்து கிளம்பும் வண்ணம் எழுதியிருக்கிறார். சிந்தனைக்கு செயல்கொடுக்கும் கருத்துக்கள் நிறைந்த அழிந்த திராவிட நாட்டின் இன்றைய நிலைக்கு ஆரியந்தான் குற்றவாளி என்று நல்ல தீர்ப்பளிக்கிறது இனி ஒவ்வொருவரும் ஒற்றுமைப் பெறுவிடின்

எப்பக்கமும் எக்காளமிட்டு மக்கள் அறிவை மாய்த்துக் கொண்டுவரும் ஆரியத்தால் மதமென்னும் பலிபீடத்தில் தள்ளப்பட்டு குற்றவாளியாக நிற்கவேண்டிவரும் என்று நல்லதீர்ப்பளிக்கிறது.

நமது சமுதாயத்திற்கு நல்ல தீர்ப்பு வேண்டின் முதன் முதல் இந்த நல்ல தீர்ப்பை படிக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.

ஃ ஃ ஃ

ஏ. வி. பி. ஆசைத்தம்பி
ஆசிரியர், "தனி அரசு"
விருதுநகர்.

ஸ்ரீ கிருஷ்ண லீலா, சம்பூரண ராமாயணம், தசாவதாரம், தாராசசாங்கம், பவளக்கொடி, ஸ்ரீவள்ளிதிருமணம் இவைகள்தான் நமது நாட்டு நாடகங்கள்; நேற்றுவரை நடிக்கப்பட்டன; இன்றுகூட சில இடங்களிலே........... படுகின்றன

ஆனால், 'நாடகம்' என்றால் என்ன, என்பதை நாடு இப்போதுதான், சுருங்கச்சொன்னால், 'பெரியார் சகாப்தம்' ஆரம்பமான பிறகுதான் உணர ஆரம்பித்திருக்கிறது.

ஒரு நாட்டின் அகத்தில் (நாட்டு மக்களிடத்தில்) இருக்கும் குறைகளை, முகத்தில் (மேடையில்) நடிப்பின் மூலம், நல்ல மொழியில் இலக்கியச்சுவை கலந்து விளக்குவதுதான் 'நாடகம்' எனப்பட வேண்டும்.

இந்த முறையில் நமது நாட்டில் நாடகங்கள் பல இல்லை; சில உள. அவைகளில் நண்பர் சுந்தரம் தீட்டிய 'நல்ல தீர்ப்பு' என்பதும் ஒன்று.

"ஏழைகளுக்கு இரக்கம் காட்டுபவர்கள் இவ்வுலகில் இல்லையம்மா? இப்படி பணக்கார உலகத்தை படம்பிடித்து காட்டுகிறார்.

"ஆலயம் தேவடியாளின் அலுவலகம்" என்று கூறினார் காலஞ்சென்ற காந்தியார். நம் கண்முன்னே நடக்கக் காண்கிறோம்: பகவானின் பெயரைச் சொல்லி வாழும் பார்ப்பனர்களிடம் மண்ணாசை, பொன் ஆசை, பெண் ஆசை துறந்து வாழுவதாக கூறும் கொழுத்த பண்டார சந்நிதிகளிடம், இந்தநாட்டில் பதினெட்டு வயது நிரம்பாத பரிதாபத்துக்குரிய பாவைகள், சிக்கிச்சீரழிந்து, "புருஷன் பெண்சாதிபோல் இருந்தோம்", என்று 'கோர்ட்' ஏறி கூறிடும் நிலைமை.

இதை நண்பர் சுந்தரம் "அம்பாள் சந்நிதியை அந்தப்புரமாக்கி விட்டீர்களா அறிவிலிகளே?" என்று ஆத்திரத்தோடு, அழகு தமிழில் கேட்டு விளக்குகிறார், நல்ல தீர்ப்பில்.

நல்ல தீர்ப்பு! ஆம், நல்ல அது மட்டுமல்ல, நாட்டுக்கு ஏற்ற கதை; நல்ல தமிழ்; நல்ல நடை; இடையே இன்பந் தரும் பல இலக்கியச் சுவைகள், ஆகிய எல்லாம் உளது நல்ல தீர்ப்பில். நாட்டுக்கு இது போன்ற நிலையை விளக்கும் கலைச் சித்திரந்தான் தேவை என்பது என் தீர்ப்பு! அதுமட்டுமல்ல, இதுதான் நாடகம் என்பது என் தீர்ப்பு! என் தீர்ப்பு சரியா?

'நல்ல தீர்ப்பு', படித்துத்தாருங்கள்.

★

# நாடகத்தில் நடமாடும் உருவங்கள்

| | |
|---|---|
| வீரநாத முதலியார் | காசைக்கொட்டி திவான்பகதூர் பட்டம் பெற்றவர். பஞ்சாங்க தாசர் முத்துவின் தந்தை. |
| அண்ணுசாமி அய்யர் | குள்ளநரிக்குணம். கோமுவின் தந்தை. முதலியாரின் காரியதரிசி |
| முத்து | பட்டதாரி. படித்தபடி நடப்பவன். காமுவின் அண்ணன். |
| பாலு | படித்தவன். நேர்மைக்காகப்— போராடுபவன். கருப்பனின் மகன். |
| கருப்பன் | கடமைக்குக் கட்டுப்பட்டவன். கமலாவின் தந்தை. |
| சாமா சாஸ்திரி | சோதிடப்புளுகன். |
| வேதாரண்ய சுவாமி | பகல்வேஷக்காரன். ஆஷாடபூதி |
| கங்காதர தீக்ஷதர் | கோயில் பெருச்சாளி. |
| ரகு | சொன்னதெல்லாம் கேட்கும் சோதாப்பேர்வழி. |
| முத்தையா | மூடக்கொள்கையின் பிரதிநிதி. |

| | |
|---|---|
| **நாணு அய்யர்** | லஞ்சம் வாங்க இரண்டு கைகள் தானே இருக்கிறதென்று வருந்துபவன். |
| **கமலா** | கட்டழகி. கருப்பனின் மகள். |
| **காமு** | சமூகத்தால் விதவை என்ற பட்டத்தை சூட்டப்பட்டவள். முதலியாரின் மகள். |
| **கோமு** | ஆரிய குலத்தில் தவறிப்பிறந்து விட்டாள். அண்ணாசாமி அய்யரின் ஓரே மகள். |
| **லக்ஷ்மி** | பொருந்தா மணத்திற்கு பலியானவள். ரகுவின் மனைவி. |
| **அபாரம்** | தாசிதான். ஆனால் திருந்த மனமுண்டு. தைரியம் சொல்ல ஆள் இல்லையேயென தவித்துக்கிடக்கிறாள். அடிமையாய் அவதியும் படுகிறாள். |

மற்றும் விறகு வெட்டி, ஆதித்திராவிடப்பெண், போலீஸ் நீதிபதி, வக்கீல், குப்பம்மாள், வீரம்மாள், முதலானவர்கள்

## ஆசிரியர் கூறுகிறார்

இந்த 'நல்ல தீர்ப்பு' நாடக நூலுக்கு ஒரு நல்ல தீர்ப்புத் தேவை. அதுமட்டுமல்லாமல் இன்றைய சமூகம், அரசியல், பொருளாதாரம் முதலிய துறைகளின் போக்கிற்கும் ஒரு நல்ல தீர்ப்புத் தேவை. ஆதலால் பொதுமக்களாகிய உங்களிடம் சிந்தனை செய்யும் பொருப்பைக் கொடுக்கிறேன். நூலைப் படித்துப் பாருங்கள் ஒரு நல்ல தீர்ப்புத் தாருங்கள். அந்த தீர்ப்பை மனதில் பதிய வைத்துக்கொண்டு அதன்படி நடக்கத் துணியுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

இந் நூலுக்கு சிறப்புரை தந்துதவிய திராவிடத் தலைவர்கள் அனைவருக்கும், இது புத்தக உருவில் தமிழ் நாட்டில் உலவிட காரணமாயிருந்த தோழர் V. P. சிவன் அவர்களுக்கும் என் வணக்கம் என்றென்றும் உரியனவாகும்.

D. சுந்தரம்

# நல்ல தீர்ப்பு

## காட்சி 1.

இடம் :— வயல் காலம் :— காலை

பாத்திரங்கள் :— கருப்பன், வீரநாத முதலியார், அண்ணுசாமி அய்யர்.

[ சூரியன் உதயமாகிறான். அவன் செங்கதிர்களின் ஒளிபட்டு பசுமையாயிருந்த நெற்பயிர்கள் நிறம் மாறுகின்றன. பார்ப்பதற்கு இரத்தினக் கம்பளம் விரித்தாற்போல் இருந்தது அதைக் கண்ட உழவன் கருப்பன் தான் விடியும் வரை நீர் இரைத்ததால் உண்டான களைப்பையும் கவனியாமல் ஆனந்தத்தெம்மாங்கு பாட ஆரம்பிக்கிறான். சிறிது நேரத்தில் வயலை நோக்கி ஒரு வண்டி வந்து கொண்டிருந்தது. அதை கவனியாமல் பாட்டிலேயே மூழ்கிவிட்டான் கருப்பன். கடைசியில் வண்டி அவனருகில் வந்து நின்றது. இரண்டு பெரிய உருவங்கள் வண்டியிலிருந்து இறங்கி ஒய்யார நடை நடந்து கருப்பனை நெருங்கின. கருப்பன் மரியாதை செய்து நிற்கிறான்.

**வீரநாத முதலியார்:** ஏய் கருப்பா, என்னடா ஆனந்தம்? நாலு வருஷத்து குத்தகை பாக்கியைக் கொடுக்க வக்கில்லே, உனக்கு பாட்டு என்னடா வேண்டியிருக்கு பாட்டு?

**கருப்பன்:** (பணிவாக) கோவிச்சிக்காதிங்க சாமி.

**வீரநாத முதலியார்:** இந்தப் பசப்புவேலையெல்லாம் என்னிடம் காட்டாதே. இன்றைக்கு இரண்டில் ஒன்று கேட்டுப் போகத்தான் வந்திருக்கேன். என்ன சொல்றே?

கருப்பன்: நான் என்னுங்க சொல்வேன். நெலமை ஒங்களுக்குத் தெரியாதுங்களா?

முதலியார்: அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்பொ, நீ பாக்கியை மரியாதையாகத் தரப்போகிருயா, இல்லையா?

கருப்பன்: எஜமானே, என்கிட்டே இப்போ ஒரு தானியங் கூட இல்லீங்களே.

முதலியார்: அப்படியானுல் எனக்கும் இல்லே என்கிருயா?

கருப்பன்: அப்படிச் சொல்வேனுங்களா? நெலம் வெளேஞ்சதும் கெடைக்கிற தானியத்தை ஒங்களுக்கு அளந்து கொடுத்தூடுறேண்ணுதான் கேட்டுக்கறேன்.

முதலியார்: இதுவரையிலும் விளேந்ததெல்லாம் எங்கே?

கருப்பன்: எல்லா தானியத்தையும் குத்தவைக்காக நம்ம பண்ணேக்கித்தானுங்களே அளந்து அனுப்பிச்சேன்.

முதலியார்: அப்போ, உன் வயற்றுக்கு?

கருப்பன்: என் வயத்துக்கு மீதி இருந்த வைக்கோல்பில்லுதான்.

முதலியார்: வைக்கோல்பில்லேத் தின்ன நீ என்ன மாடா?

கருப்பன்: மாட்டைவிட மகாகேவலங்க.

முதலியார்: என்னடா, ஒரு மனுஷன் தன்னேத் தானே மாடுண்ணு சொல்லிக்க வெட்கமில்லே?

கருப்பன்: வெட்கமிருந்தா உங்ககிட்டே வேலே செய்வேனுங்களா?

முதலியார்: (கோபமாக) என்னடா சொன்னே?

கருப்பன்: உள்ளதைச் சொன்னேனுங்க.

முதலியார்: உள்ளதைச் சொன்னியா? நீ இந்த உலகத்திலேயே இருக்கமுடியாது.

**கருப்பன்:** (பணிவாக) அடுத்த ஒலகத்திலேயாவது......?

**முதலியார்:** (கோபமாக) என்ன ? என் உணவைத்தின்று விட்டு என்னிடமேவா திமிர் பேசுகிறாய். பார்த்துவிடுகிறேன். இப்படிக் கொடுங்கள் சவுக்கை. (அய்யரிடமிருந்து சவுக்கை வாங்கி) இன்றையிலிருந்து இந்த நிலத்தில் நீ அடியெடுத்து வைக்கக்கூடாது. இதோ, நீ கொடுக்கவேண்டிய பாக்கிக்குப் பலன், வாங்கிக்கொள்.

[என்று சொல்லி சவுக்கால் கருப்பனை அடிக்கிறார். அவன் கதறுகிறான். உடலிலிருந்து ரத்தம் பீரிப்பாய்கிறது. அதைக் கண்டும் கண்கள் கூசாமல் அவன் கீழே சாயும் வரை அடிக்கிறார். கடைசியில் நிலமை சமாளிக்கமுடியாமல் சுருண்டு தரையில் விழுகிறான் கருப்பன் அதைப் பார்த்து முதலியாரும், அய்யரும் சிரிக்கிறார்கள்.]

**முதலியார்:** இந்த நாய்களுக்கே பட்டால் தான் புத்திவரும். வாருங்கள் போகலாம்.

[இருவரும் வண்டியில் அமர்ந்ததும் மயிலைக் காளைகள் காற்று வேகத்தில் ஓடின.]

## காட்சி 2.

இடம்:– முதலியார் வீட்டில் ஓர் அறை காலம்:– காலை

பாத்திரங்கள்:— கமலா, முதலியார், அண்ணுசாமி அய்யர்,

[வேலைக்காரி கமலா அறையிலுள்ள ஒவ்வொரு சாமானையும் துடைத்துக்கொண்டு வருகிறாள். அச்சமயம், மேஜைமீதிருந்த ஒரு கண்ணாடி ஜாடி கை தட்டியதால் கீழே விழுந்து சுக்கு நூறாயிற்று. அவள் பயத்தால் தாக்கப்பட்டு நெஞ்சு பதை பதைக்க அவ

சாமாக அந்தத் துகள்களைப் பொறுக்குகிறாள். அக் காட்சியைப் பார்த்துக்கொண்டே முதலியாரும், அய்யரும் வருகிறார்கள்.]

**முதலியார்:** ஏய் கமலா, என்ன தடித்தனம்? கொஞ்சங் கூட அடக்கம் ஒடுக்கங்கறதே காணோமே? இல்லே நான் தான் கேக்கறேன், தெனம் இப்படியே சாமான்களையெல் லாம் போட்டு ஒடைச்சா ஒங்க அப்பன் வாங்கியாந்து வைப்பானுண்ணே?

**அண்ணாசாமி அய்யர்:** நீர் ஒண்ணு. அவ அப்பன் சோத் துக்கே சிங்கியடிக்கிறானும் அவனுக்கு சீமான் வீட்டு சாமான் வாங்க சக்தி ஏதுண்ணேன்?

**முதலியார்:** அப்படியிருந்தும் இந்த ஏழைக் குறும்பு மட் டும் குறையிலியே? அன்ன நடை நடக்கிறதும், அழகு கொண்டை முடியறதும், ஆடல் ஆடறதும், பாடல் பாடற தும், பலமாதான் இருக்கு.

**கமலா:** கோவிச்சுக்காதிங்க. கைதவறிவிட்டது. இனி கவ னமாய் இருக்கிறேன்.

**அய்யர்:** பேச்சிலே மயங்கி மனமிறங்கிவிடாதீர். இவ தடி முண்டை. தளுக்குப்பண்ணி தனவான்களை தன் வலையில் சிக்கவைக்க நினைக்கும் குச்சுக்காரி. இவ வீட்டு வேலைக்கு லாயக்கில்லே. விரட்டுங்கள் உதைத்து

**கமலா:** சிவ சிவா (காதைப் பொத்திக்கொண்டு) எஜமானே ஏன் இப்படி என்னை ஏசுகிறீர்கள்? ஏழையென்றால் எது வேண்டுமானாலும் பேசலாமா?

**அய்யர்:** சாமி பெயரைச் சொன்னா உம்மை சத்தியவதின்னு நெனைச்சிக்கமாட்டோமடி சாகசக்காரி.

**கமலா:** ஏன் சாமி, உங்க வாயிலிருந்து மரியாதையான வார்த்தைகளே வராதா?

**அய்யர்:** (கோபமாக) பார்த்தீரா முதலியார்வாள். மரியாதை தெரியாதவனும் நான். என்ன திமிரு இவளுக்கு? உம்மைப் போல் எத்தனை திவான்பகதூர், ராவ்சாஹிப், ஸர், ராஜாக்களோடெல்லாம் பழகியிருக்கேன்? அதைத் தெரிஞ்சிக்காமே இந்தப் பிச்சைக்காரப்பயபுள்ளே பேசவந்துட்டாளே? உமக்காகப் பார்க்கிறேன். இல்லேண்ணு இவளை தோலை உறிச்சி தொங்க உட்டுடுவேன்.

**கமலா;** அடடே, தோலைஉரிக்கிற வேலையை சக்கிலியர்களுக்கல்லவா உங்கள் வேதம் வழங்கியிருந்தது. ஏன் அந்த வேலையில் வரும்படி அதிகம் வருகிறதென்று அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டீர்களா நீங்கள்?

**அய்யர்:** (வாயைப் பிளந்து) முதலியார்வாள் ஆணவம் அளவுக்கு மீறுகிறது. இனி அவமானம் தான் நமக்கு.

**முதலியார்:** அதெல்லாம் என் கூலிப் பணம் கொடுத்த கொழுப்பு. இதோ குறைத்துவிடுகிறேன். போடி வீட்டைவிட்டு.

[முதலியார் கமலாவை நோக்கிப்பாய்கிறார். சவுக்கு தன் வேலையைச் செய்கிறது. கமலா ஐயோ, அப்பா, அப்பா என்று அடிதாளாமல் கதறிக்கொண்டு ஓடுகிறாள். அய்யர் சிரிப்பிலே அநேக விஷயங்கள் அடங்கிக்கிடந்ததை முதலியார் கவனிக்க சக்தியற்றவராய் நின்றார்.]

★

# காட்சி 3.

இடம்:— கருப்பனின் குடிசை. காலம்:— காலை

பாத்திரங்கள் :— கருப்பன், கமலா.

[குடிசையின் வெளிப்புறத்தில் கருப்பன் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறான். உடலிலே ரத்தக் கரை. உள்ளத்திலே சோகச்சுமை. குழி விழுந்த கண்கள் நீர்வீழ்ச்சியாக மாறியிருக்கின்றன. அவனை அப்பா, அப்பா என்ற குரல் திடுக்கிட்டு எழச்செய்தது. மகள் ஓடிவருவதைக் கண்டான். கட்டியணைத்துக்கொண்டான். கமலாவின் கண்ணீர் கருப்பனைக் கடுமையாகத் தாக்கிற்று. கட்டிலுக்கு அழைத்துப்போய் காரணத்தைக் கேட்கிறான்.]

**கருப்பன்:** ஏம்மா கமலா அலறிக்கிட்டு ஓடியாந்தே? அழுவுறியே ஏன்?

**கமலா:** அப்பா, நம்ம எஜமானரோடு இருப்பாரே ஒரு அய்யர், அவர் என்னைக் கேவலமா பேசினார். ஏனென்று கேட்டதற்கு எதிர்த்தா பேசுகிறாய் போடி வீட்டைவிட்டு என்று சவுக்கால் அடித்து விரட்டினார் எஜமானர்.

**கருப்பன்:** அய்யய்யோ, உன் உடலையுமா புண்ணாக்கிவிட்டான் பாவி. கமலா, இதோ என் முதுகைப்பார்: சதை கிழிய அடித்திருக்கிறான் சண்டாளன்

**கமலா:** அப்பா, அரசாங்கம் மாறியுமா இந்த அக்ரமம்?

**கருப்பன்:** ஆமம்மா, தொழிலாளிகள் என்றைக்கும் சங்கடப்பட்டுத்தீரவேண்டியதுதான்.

**கமலா:** அப்பா, தொழிலாளர்க்கூட்டம் துணிந்துவிட்டால் முதலாளிகளின் முதல் மூழ்கிவிடுமென்று தொழிற்கட்சியினர் கர்ஜனை செய்கிறார்களே கணக்கற்ற மேடைகளில்.

**கருப்பன்:** எல்லாம் பேச்சளவிலே நிற்கிறது. செயலிலே காட்டினால் தான் நாம் எல்லோரும் சௌகரியமாக வாழ முடியும்.

**கமலா:** நமக்கும் வாழுங்காலம் வரும்.

**கருப்பன்:** என்று நம்பிக்கொண்டு நாணமற்று நாய்கள் போல் உழைப்பதால் தான் நாம் நசுக்கப்படுகிறோம்.

# காட்சி 4.

இடம்:— சென்னையில் முத்துவின் அறை. காலம்:— காலை

பாத்திரம்:— முத்து

[முத்து வருகிறான். மேஜைமீது விரிந்து கிடந்த புத்தகத்தை எடுக்கிறான். அதிலிருந்து புகைப்படம் ஒன்று கீழே விழுகிறது. அவனையறியாமல் கைகள் அப்படத்தை விரைந்து எடுக்கின்றன. கண்கள் படத்திலுள்ள பொற்கொடியைக் காண்கின்றன. கவியாக மாறுகிறான். காரிகைமேல் கவிதை பிறக்கிறது.]

**முத்து:**— (பாடிமுடிந்ததும்) கமலா, நீ நினைக்கலாம் நம் கல்யாணத்தை உறவினர்கள் தூற்றுவார் என்று. ஆனால் உலகின் அறிஞர்கள் போற்றுவார் நம் கலப்பு மணத்தைக் கண்டு. மதாச்சாரியார் மதத்திலிருந்து மாற்றுவார் என நீ மருளலாம். ஆனால் மதங்களுக்குக் கட்டுப்படாத கடவுள் நம்மைத் தேற்றுவார், மனப்புண்ணை ஆற்றுவார். அஞ்சாதே. எனக்குப் படிப்பு இருக்கிறது. இப்பரந்த உலகில்

பிழைப்புக்கு வழி கிடைக்கும். உன் அன்பு இருக்கிறது, உற்ருர், பெற்ருர், உறவினர் ஒருவரும் தேவையில்லை. கட்டாயம், என் கல்வியை முடித்துக்கொண்டுவந்து உன்னைக் கல்யாணம் செய்து கொள்கிறேன். கவலையை விட்டு இரு.

[என்று சொல்லி படத்திற்கு முத்தம் கொடுக்கிருன். கலாசாலைக்குச் செல்லும் காலம் நெருங்கிவிட்டதென்பதை மணி ஓசை அறிவித்தது. முத்து புத்தகங்களை எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.]

## காட்சி 5.

இடம்:- முதலியார் வீட்டில் ஒரு அறை, காலம்:- பிற்பகல்

பாத்திரங்கள்: முதலியார், அய்யர், ராமன்.

[முதலியார் உடலை வருத்தி உழைத்தவர்போல் களைப்பால் தள்ளாடித் தள்ளாடி வந்து சோபாவில் சாய்கிருர்.]

முதலியார்: டேய் ராமா.

ராமன்: (ஓடிவந்து) என்னுங்க எஜமான்.

முதலியார்: காபி கொண்டாடா.

ராமன்: சரிங்க எஜமான்.

[ராமன் காபி கொண்டுவந்து கொடுக்க முதலியார் குடிக்கிருர்.]

முதலியார்: டேய், பேப்பரை எடுத்தாடா.

[ராமன் ஓடிப்போய் லெட்டர் பேப்பரைக் கொண்டு வந்து கொடுக்கிருன்.]

ராமன்: இந்தாங்க.

முதலியார்: தடிப்பயலே, நியூஸ்பேப்பரை எடுத்தாடாண்ணு லெட்டர் பேப்பரை எடுத்தாரியா?

ராமன: புரிஞ்சுதுங்க.

[என்று சொல்லிப் போய் நியூஸ் பேப்பரைக் கொண்டுவந்து கொடுக்கிருன்.]

ராமன்: இந்தாங்க.

முதலியார்: (பேப்பரை வாங்கி விரித்துப்பார்த்து) காந்திஜி சுட்டுக்கொல்லப்பட்டார். டேய், இது பழைய பேப்பர் இல்லடா? ஒன்னை எந்த முட்டாள்டா வேலைக்கி அமர்த்தினுன் ?

ராமன்: நீங்கதான் எஜமான்.

முதலியார்: எடுசெருப்பை.

[ராமன் கீழே கிடந்த முதலியாரின் செருப்பை எடுக்கிருன்.]

முதலியார்: சீ கழுதை, செருப்பைக் கீழே போட்டுட்டுப் போயி இன்னைய நியூஸ் பேப்பரைக் காமுவைக் கேட்டு வாங்கியாடா.

[ராமன் ஓடிப்போய் பேப்பரைக் கொண்டுவந்து கொடுக்கிருன். முதலியார் அதை வாங்கி ஒவ்வொரு பக்கமாகத் திருப்பிக்கொண்டுவந்து கடைசி பக்கத்திலுள்ள ஒரு விளம்பரத்தைப் படிக்கிருர்]

முதலியார்: "ஒரே நாளில் வாலிபம் பெற வழி. எங்கள் தங்க மாத்திரைகளைச் சாப்பிட்டால் தடியூன்றும் கிழவனும் துள்ளி எழுவான் காளைபோல். ஒருமுறை வாங்கி பரிக்ஷித்து உங்கள் தேவைக்கு எழுதவும். இப்படிக்கி மன்மதன் ஆயுர்வேத சாலை, கைலாயபுரம்.'' சபாஷ். இப்

படிப்பட்ட ஒரு மருந்து இல்லையே என்றுதான் இது நாள் வரை ஏங்கியிருந்தேன். கண்கள் கண்டுவிட்டன சர்ணுமிர் தத்தை. உடனே ஒரு டஜன் பாட்டில்களுக்கு எழுதவேண் டியதுதான்.

[என்று சொல்லிவிட்டு கடிதம் எழுத ஆரம்பிக்கிறார். கடிதம் எழுதி முடிகிறது. அய்யர் வருகிறார்.]

**அய்யர்:** முதலியார்வாள், என்ன எழுதிண்டு இருக்கேள் ?

**முதலியார்:** வாங்க, வாங்க. உங்களைத்தான் நெனேச்சேன். வந்தூட்டிங்க. உட்காருங்க.

[அய்யர் உட்காருகிறார்.]

**முதலியார்:** சுவாமி, இன்னும் அறுபது கூட சரியாகப் பூர்த்தியாகவில்லை. அதற்குள் இந்த நரையைப் பார்த்து என்னைக் கிழவன் என்கிறது காசின்மீது ஆசையில்லாத காலிக்கூட்டம்.

**அய்யர்:** விட்டுத் தள்ளும் கழுதைகளை. என்னைப் போன்ற பெரியவர்கள் புகழ்ந்தால் போதாதா ?

**முதலியார்:** போதும். ஆனால் நம் கல்யாணத்தை முடிக்கவாவது இந்தக் கழிவு மயிரைக் களைந்தெறியவேண்டாமா?

**அய்யர்:** அதற்கு இருக்கிறது ஒரு சுலபமான வழி?

**முதலியார்:** என்ன சுவாமீ? சொல்லுங்கள் சீக்கிரம் செய்வோம்.

**அய்யர்:** என் மைத்துனன் வைத்திருக்கிறான் மன்மதன் ஆயுர்வேதசாலையொன்று. அதிலே இருக்கிறது அதிசயமான அருமருந்து. வாங்கிப் பூசினால் புகைபோல் பறந்துவிடும் இந்த வெள்ளைநிறம்.

முதலியார்: என்ன! மன்மதன் ஆயுர்வேதசாலை உங்கள் மைத்துனருடையதா? என்னிடம் நீங்கள் இதுவரை சொன்னதில்லையே இன்று தான் விளம்பரத்தில் கண்டேன். உடனே ஒரு டஜன் தங்க மாத்திரை பாட்டில்கள் தாதுபுஷ்டிக்கு வேண்டுமென்று கடிதம் எழுதி வைத்துள்ளேன். இதோ, பாருங்கள்.

அய்யர்: (கடிதத்தை வாங்கிப்பார்த்துவிட்டு) முதலியார்வாள் இத்துடன் கருங்கூந்தல்தைலம் 1 டஜன் பாட்டில்களுக்கும் எழுதிவிடும்.

முதலியார்: அதைவிட வேறு வேலை ஏது? கொடுங்கள் எழுதுகிறேன். (என்று கடிதத்தை வாங்கி எழுதிவிட்டு) சுவாமி, இதெல்லாம் செய்துவிட்டோம். இனி கல்யாணத்திற்கு பெண்......?

அய்யர்: இந்த அண்ணுசாமி அய்யர் இருக்கும் போது அதைப்பற்றி உமக்குக் கவலை ஏன்?

முதலியார்: சொன்னுல் போதாதே?

அய்யர்: செய்தே காண்பிக்கிறேன். இப்பொழுதே போய் நமது பிரபல ஜோஸியர், த்ரிகாலத்தை திட்டமாக எடுத்துரைக்கும் தீரர், ரேகை சாஸ்திர நிபுணர், சகாதேவருக்கு சரிநிகரான சாமா சாஸ்திரிகளை அழைத்து வந்து ஒரு நல்ல நாளைப் பார்த்துப் புறப்பட்டால் காரியம் கைகூடிவிடுகிறது. என்ன சொல்கிறீர்.

முதலியார்: இதில் சொல்வதென்ன இருக்கிறது?

அய்யர்: அவருக்கு தட்சணை......

முதலியார்: தடையில்லை. எவ்வளவு வேண்டுமானுலும் தருகிறேன். விரைவில் அழைத்துவாருங்கள்.

**அய்யர்:** அரை மணிக்குள்ளே வந்தூடுறேன்.

[என்று சொல்லிப்போகிறார்.]

**ராமன்:** எஜமான், யாரோ ஒரு பிச்சைக்காரன். ஒங்களைப் பார்க்கணும்னு பிடிவாதமா நிக்கிறான். போடாண்ணாலும் போவமாட்டேங்கறான்.

**முதலியார்:** என்ன திமிரு? போய் அவன் காலே ஒடிச்சு விரட்டு.

**ராமன்;** காலு இல்லீங்களே.

**முதலியார்:** கை இருக்கா?

**ராமன்:** இருக்குதுங்க:

**முதலியார்:** தடிப்பயல்களுக்கெல்லாம் இங்கே தானமா? போய் வேலைசெஞ்சு சாப்பிடச்சொல்லு.

**ராமன்:** சரிங்க.

[ போகிறான் ]

## காட்சி 6.

**இடம்:— வீதி,** **காலம்:— பிற்பகல்**

பாத்திரங்கள் :— **அய்யர், சாஸ்திரி.**

**அய்யர்:** வாரும், வாரும். உம்மைத் தேடிண்டுதான் வந்தேன் நல்லவேளையா நீரே வந்தூட்டீர். எங்கே, இந்தப் பக்கமே ரொம்பநாளா காணமுடியல்லியே ?

**சாஸ்திரி:** அதையேன் கேட்கிறீர்? சொல்லப்போனா வயறு குபீர் குபீரிண்ணு எரியறது.

**அய்யர்:** ஏன் ?

**சாஸ்திரி:** வாத்தியார் புள்ளே வடிகட்டின மக்கு. ஜோஸியர் புள்ளே சுத்தக் கம்மணாட்டி, இல்லேண்ணா கன்னிப்

பொண்ணுயிருக்குங்கற கதைபோல நான் என் கடைசிப் பொண்ணுக்கு வரன்வேணும்னு ஊர் ஊரா அலேஞ்சு காலெல்லாம் அலுத்துப்போயிடுத்துப்போம்.

**அய்யர்:** ஏன், வரன்கள் இல்லேயா?

**சாஸ்திரி:** இருக்கான்கள். ஆனா வாய்க்கு வந்தபடியெல்லாம் வரதட்சணே கேட்கிறான்கள். நான் என்ன செய்யறது?

**அய்யர்:** நம்ம கொலத்துலே பெண் பிள்ளேகள் பிறந்தாலே இந்தத் தொல்லே தான். கவலேப்படாதீர். உமக்குண்ணு ஒருத்தன் கெடைக்காமலா போயிடுவான்? இல்லேண்ணு சமயம் போலப் பார்த்துண்டா போறது. நான் எல்லாம் அந்த யோஜனேயில்தான் இருக்கேன் வாரும் போகலாம்.

**சாஸ்திரி:** எங்கே கூப்பிடுகிறீர்?

**அய்யர்:** அதைச் சொல்லவில்லேயே? இப்படி வாரும். நம்ம திவான் பகதூர் வீரநாத முதலியாருக்கு ஒரு மணப் பொருத்தம் பார்த்து திசையையும், திக்கையும், சொல்ல ணும். அதற்கு உம்மைப் பற்றி ரொம்பப் பிரமாதமா புகழ்ந்து சொல்லியிருக்கேன். தட்சிணே நம்ம ரெண்டு பேருக்கும் சேர்த்தே தருவா. அது இருக்கட்டும் பின் னாலே ரெண்டு பாகமா பிரிச்சிண்டுடுவோம். ஆனா, நீர் மட் டும் சந்திரனேயும், சூரியனேயும் சேர்த்து, சனியையும், செவ்வாயையும் கோர்த்து, குருவையும், புதனேயும் இணேத்து எப்படியோ மணப் பொருத்தம் இருக்குண்ணு சொல்லிடும். அப்புறம் நமக்கு கல்யாண வரும்படி வேறே இருக்கு. சரிதானா? சொல்லும்.

**சாஸ்திரி:** சொல்றது என்னங்காணும். இந்த சாமா சாஸ்திரி மனசு வைச்சா நடக்காத கல்யாணமும் நடந்தே தீருங்கா ணும். வாரும் போகலாம்.

**அய்யர்:** பஞ்சாங்கம்!

**சாஸ்திரி:** கக்கத்திலே இருக்கு. போம்.

[போகிறார்கள்]

## காட்சி 7.

இடம்:- முதலியார் வீட்டில் ஒரு அறை, காலம்:- பிற்பகல்
பாத்திரங்கள்: முதலியார், அய்யர், சாஸ்திரி, காமு.

[முதலியார் நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு தன் ஜாதகக் குறிப்பைப் பார்த்து பூரித்த வண்ணம் இருக்கிறார். அய்யரும், சாஸ்திரியும் வருகிறார்கள் அவர்களை எதிர்கொண்டழைத்து ஆசனத்தில் அமரச் சொல்கிறார் முதலியார். பின்பு சாஸ்திரிகள் முதலியாரின் ஜாதகத்தை வாங்கிப் பார்த்துவிட்டுச் சொல்கிறார்]

**சாஸ்திரி:** முதலியார்வாள், சுக்கிரனும், புதனும் தெற்கே பார்க்கிறார்கள். ரொம்ப நன்னா இருக்கு. தேடிப்போனால் தங்கப் பதுமைபோல் தாரம் கெடைப்பாள்.

**முதலியார்:** அப்படியே புறப்பட்டுவிட்டால்போகிறது. ஒரு நாள் பார்த்துச் சொல்லுங்கள்.

**சாஸ்திரி:** இன்னும் நாலுநாள் கழிச்சு புதன் கிழமை புறப் படும். பொன் அகப்பட்டாலும் புதன் அகப்டாதுண்ணு பெரியவா சொல்லுவா.

**முதலியார்:** ரொம்ப சரி.

[என்று சொல்லிவிட்டு முதலியார் சாஸ்திரிக்கு தட்சணை கொடுக்கப் பணம் எடுக்க உள்ளே போகிறார். காமு வருகிறாள்.]

**காமு:** இதெல்லாம் என்ன கோலம்?

**அய்யர்:** மணக்கோலம்மா.

**காமு:** பிணமாகப்போகும் காலத்திலா ?

**அய்யர்:** பிணமாகப்போகிறாரா? உங்க அப்பாவா ?

**காமு:** ஆம். அறுபது வயது ஆகிவிட்டது. இன்னும் சில நாள்தானே வாழ்க்கை.

**அய்யர்:** என்று நினைக்கிறாயா ? காமு, மக்களின் ஆயுளை நிர்ணயிப்பவன் ஆண்டவனல்ல. அவரவர்களின் புத்தி சாலித்தனம் என்று நீ தானே அடிக்கடி சொல்லுவாய்.

**காமு:** ஆமாம்.

**அய்யர்:** அதற்குத்தகுந்தாற்போல் உன் அப்பா அவரின் ஆயுளை அதிகரித்துக்கொள்ள ஆவன செய்திருக்கிறார். அந்த அதிகமான வாழ்நாளிலே இன்பமாயிருக்க இல்லற வழியிலே செல்வதென முடிவு செய்திருக்கிறார். நாங்கள் அவருக்கு ஆலோசனை கூறவே இங்கு கூடியிருக்கிறோம்.

**காமு:** வெட்கக்கேடு விதவை மகள் ஒருத்தி விம்மி, விம்மி அழுது வேதனைப்படுகிறாள் தன் வாழ்க்கையிலே இருள் சூழ்ந்துவிட்டதே என்று. அந்த இருளைப் போக்க வேண்டுமென்பதை மறந்து தையல் ஒருவள் வேண்டு மென்று மையல் கொண்டலைகிறாரா இந்த மனிதர் ?

[இவ்வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டே வந்த முதலியார் கோபந்தாளாமல் மகளின்மீது சீறுகிறார்.]

**முதலியார்:** மடப் பெண்ணே. மானத்தை இழக்காதே. மரி யாகப் போ. (என்று தன் மகளைத் தள்ளிவிட்டு) நீங்கள் வாருங்கள்.

[என்று அய்யரையும், சாஸ்திரியையும் கூப்பிட்டுக் கொண்டு வெளியில் போகிறார்.]

## காட்சி 8.

இடம்:—உழவன் குடிசை காலம்:—மாலை

பாத்திரங்கள்:— கருப்பன், கமலா, முதலியார், அய்யர்.

[கருப்பன் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு கட்டிலின் மீது இருமிக்கொண்டே படுத்திருக்கிறான். மகள் கமலா அருகில் உட்கார்ந்துக்கொண்டு உபசரித்தவண்ணம் இருக்கிறாள்.]

**கமலா:** அப்பா. கொஞ்சம் கஞ்சி குடியுங்கள்.

**கருப்பன்:** வேண்டாம்மா. மார்பெல்லாம் ஒரே வலியாயிருக்கு.

**கமலா:** போய் வைத்தியரை அழைத்து வரட்டா அப்பா.

**கருப்பன்:** நீ கூப்பிட்டா எந்த வைத்தியரம்மா வரப்போராரு. எல்லாம் பைத்தியம் பிடித்தலையராங்க பணத்து மேலே. காசு இருந்தால் என்னிடம் பேசு. இல்லேண்ணு உன் அப்பன் பிணத்தை சுடுகாட்டிலே கொண்டுபோய் வீசு என்று தான் சொல்வார்கள்.

**கமலா:** என் கண்ணீரைக் கண்டுமா கருணை பிறக்காது?

**கருப்பன்:** கனவிலும் நடக்காது. ஏழைகளுக்கு இரக்கம் காட்டுபவர்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையம்மா ஆதலால் நீ எவரிடமும்போய் ஏமாற்றமடையவேண்டாம். எல்லாம் என் தலைவிதிப்படி நடக்கட்டும். ஆனால் உன் அண்ணனுக்கு மட்டும் ஒரு தந்தி கொடு. நான் ஒரு முறை அவனைப் பார்க்கவேண்டும்.

**கமலா:** சரிப்பா.

[இச்சமயத்தில் முதலியாரும், அய்யரும் வருகின்றனர்.

**முதலியார்:** ஏ குட்டி, உன் அப்பனுக்கு என்ன கேடு?

**கமலா:** அப்பா, நம்ம எஜமான் வந்திருக்காங்க.

**கருப்பன்:** ஆ! எஜமானு? வாங்க சாமி வாங்க. ஏன் நிக்கிறிங்க. இப்படிக் கட்டிலில் உட்காருங்க.

[என்று தன் உடல் நிலையையும் கவனியாமல் எழுந்து நின்று உபசரிக்கிறான்.]

**அய்யர்:** முதலியார்வாள் இதென்ன உபசாரமெல்லாம் பலமாயிருக்கு.

**முதலியார்:** குல்லா போடப்பாக்குரான்.

**அய்யர்:** குஷி தட்டடப்போவுது. ஜாக்கிரதை.

**முதலியார்:** அதெல்லாம் நம்மகிட்டபா நடக்கும். டேய் கருப்பா, நாங்க இங்கே உட்காரத்துக்கு வரல்லே. உன் வீடு, சாமான்களையெல்லாம் ஏலத்துக்குக் கொண்டுவரப் போறோம்னு சொல்ல வந்திருக்கோம்

**கருப்பன்:** சாமி, சாமி. ஒண்ணும் செய்யாதிங்க உங்களுக்குக் கோடி புண்யம் கெடைக்கும். நானே காச்சலால் கஷ்டப்படுறேன். என் மவனே ரெண்டு மாதமா பணமே அனுப்பலே. கஞ்சிக்கே ரொம்ப கஷ்டமா இருக்கு கொஞ்சநாள் பொறுத்துக்குங்க. என் தலையை அடகு வச்சாவது உங்க பாக்கியைக் கொடுத்தூடுறேன்.

**முதலியார்:** (அசட்டுச்சிரிப்புடன்) கொஞ்சநாள் எதுக்கடா? இப்பவே உன் மகளே அடகு வைக்கிறேண்ணு வேண்டிய பணம் கொடுக்க நான் நீன்னு போட்டி போட்டுகிட்டு ஓடியாராங்க.

**கருப்பன்:** அய்யய்யோ, எஜமானே நீங்களா இப்படிப் பேசுறிங்க?

**முதலியார்:** ஆமாண்டா, நான்தான் கேட்கிறேன். அவள் தான் என்ன கண்ணகியா? அல்லது நீ தான் என்ன ஏக பத்தினிவிரதனா?

**அய்யர்:** ஏய் கருப்பா, அந்தக் காலத்திலே அரிச்சந்திரனே அவன் சம்சாரத்தை காலகண்டரிடம் அடகுவைத்தானாம்.

**முதலியார்:** அய்யர் சொல்றதை நல்லா கேளுடா. சேற்றுக்கு மேலே நிற்கும் நீரை நாம் தெளிபுனல் என்பது போல வாழ்க்கையில் பல ஆபாசங்களைக்கொண்டவர்களாய்த் தான் மேதைகளெல்லாம் விளங்குகிறார்கள். அவர்களை விட நீ என்ன உயர்ந்தவனா?

**கமலா:** எஜமானே, சந்திரனிடத்திலும் களங்கம் இருக்கத் தான் செய்கிறது என்று கூறி தவறுசெய்துகொண்டே இருக்காமல், களங்கம் உள்ள இடத்திலும் சுடர் இருப்பதை உணர்ந்து நம் அறிவைத் துலக்கமுறச் செய்து கொள்ளவேண்டும்.

**அய்யர்:** முதலியார்வாள் நேற்று பிறந்த குட்டி நமக்குப் புத்தி சொல்வதா?

**முதலியார்:** போக்கிரிக் கழுதை போதனையா செய்கிறாய்?

**கருப்பன்:** வேதனை வேண்டாம் எஜமானே, என் மகள் சொன்னதில் தவறிருந்தால் மன்னிச்சுக்குங்க.

**அய்யர்:** மானம் போகிற காரியத்திலே மன்னிப்புக் காட்டினால் பெரிய மனிதர்களெல்லாம் நம்மைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் திணர அடித்துவிடுவார்கள் முதலியார்வாள்.

**கமலா:** சொக்கத் தங்கம் என்றால்கூட மாற்றுப்பார்க்கும் மனித வர்க்கம் உங்கள் மேதையை அறிய உங்களைக் கேள்விமேல் கேள்வி கேட்பதில் வியப்பென்ன இருக்கிறது சுவாமி?

**அய்யர்:** இன்னும் இவளுக்கு அடங்கவில்லை வாய் மதம்.

**கமலா:** அருகிலே அன்னியர் ஒருவர் இருந்தால் வாய் மதம் யாருக்கு என்ற முடிவு தெரிந்துவிடும்.

**அய்யர்:** ஆணவக்காரி.

**முதலியார்:** அவள் கொட்டத்தை அடக்குகிறேன் பாருங்கள்.

[என்று சவுக்கை விசிரிக்கொண்டு கமலாவைநோக்கிப் பாய்கிறார் முதலியார். கமலா தகப்பனைப் போய்க் கட்டிப் பிடித்துக்கொள்கிறாள்.]

**கருப்பன்:** கோபம் வேண்டாங்க.

**முதலியார்:** கோமணாண்டி. பேசாமல் விழுந்துகிடடா.

[என்று கருப்பனின் கன்னத்தில் ஓங்கி அடிக்கிறார் முதலியார். அடி, உழவனின் பொட்டில் பலமாகப் படவே அவன் சுருண்டு கட்டிலின் மேல் விழுகிறான். இக் காட்சியைக் கண்ட கமலா அப்பாவின் மீது விழுந்து அழுகிறாள். முதலியார் சவுக்கால் நன்றாக அடிக்கிறார் கமலாவை. அய்யர் சிரிக்கிறார். கமலாவின் உடலிலிருந்து இரத்தம் பீறிட்டு வந்ததைக் கண்ட முதலியார் அடிப்பதை நிறுத்திவிட்டு அய்யரை அழைத்துக்கொண்டு போகிறார்.]

★

## காட்சி 9.

இடம்:— கோவில் காலம்:— காலை

பாத்திரம்:— காமு

**காமு:** அம்பிகையே! அறியாப் பருவத்திலே நான் அமங்கலி ஆக்கப்பட்டேன். அந்நாள் முதல் இந்நாள் வரை இன்பமென்பது இன்னதென்று கண்டறியேன் என் வாழ்க்கையில். காரணம்? சமூகமென்னும் வேலி என்னைத் தடுத்து நிற்கிறது. தாண்ட முயற்சிக்கும்போது கோத்திர மென்னும் முட்கள் குத்துகின்றன. சாத்திர மென்னும் சர்ப்பங்கள் சீறுகின்றன. பகுத்தறிவுக் கோலைப் பற்றிக் கொண்டு தப்பலாமென்றாலோ அறியாமை யென்னும் அறிவாள் அதைத் துண்டிக்க முன் வருகிறது. இந் நிலையில் நான் உயிருடன் இருப்பதா அல்லது இறப்பதா? சொல்லு தாயே. இல்லையேல் உன் கையால் என்னைக் கொல்லு தாயே. கொலை செய்ய மனம் துணியவில்லை யென்றால் மகிழ்ச்சியான ஒரு மார்க்கம் கூறு. மணாளன் ஒருவனை எனக்குக் கொண்டுவந்து சேரு, சேரு.

[என்று அம்பிகையின் திருவடிகளிலே வீழ்ந்து அழுகிறாள்]

## காட்சி 10.

இடம்:—உழவனின் குடிசை காலம்:— பிற்பகல்

பாத்திரங்கள்:— கமலா, பாலு.

[கருப்பனின் பிரேதம் கட்டிலின்மேல் கிடக்கிறது. மகள் கமலா அழுது, அழுது ஆற்றொணுத் துயரில் மூழ்கி அப்பனின் மீது சாய்ந்து தேம்பிய வண்ணம் இருக்கிறாள். இச்சமயம் பாலு அப்பா, அப்பா என

அலறி அடித்துக்கொண்டு ஓடி வருகிறான். கமலா எழுந்து நிற்கிறாள். பாலு அப்பன் மீது விழுந்து அழுகிறான்]

**பாலு:** அப்பா, அப்பா, படமுடியாத கஷ்டங்களெல்லாம் பட்டு படிக்கவைத்து என்னைப் பட்டதாரியாக்கிய உங்களை நான் இந்த நிலையிலா காணவேண்டும்? ஐயோ உங்களை உட்கார வைத்து உணவளிக்கவேண்டுமென்று தானே ஊர் ஊராய் அலைந்தேன் உத்தியோகத்திற்காக. ஆனால் சென்ற இடமெல்லாம் இல்லை இல்லையென்ற தொல்லையான பதிலையே பெற்றேன். இந் நிலையில் பஞ்சம் நம் வாழ்க்கையில் தலை காட்ட ஆரம்பித்தது. அதைப் பறக்கடிக்க வேண்டுமென்றே கடைசியாக சென்னை சென்று கண்டவர்களிடம் கெஞ்சி கடையில் கணக்கப்பிள்ளையாகச் சேர்ந்தேன். மாதா மாதம் பணம் அனுப்பினேன் பட்டினி என்று பிறரிடம் நீங்கள் பல்லையிளிக்காமலிருக்க. இவ்வளவும் எதற்காகச் செய்தேன்? நீங்கள் சந்தோஷமாய் வாழ வேண்டும் என்பதற்காகத்தானே? அப்பா, அப்படியிருக்க ஏன் நீங்கள் பிணமானீர்கள்? என் மீது ஏதாவது கோபமா கமலா, உனக்குத்தான் தெரியுமே, சொல்லு என் அப்பாவுக்கு இந்த கதி?

**கமலா:** எல்லாம் பாழும் பணம் செய்த சதி?

**பாலு:** பணம்... சதி... விளங்கச் சொல்லு கமலா.

**கமலா:** குத்தகை பாக்கியைக் கேட்க எஜமான் இங்கு வந்தார். வந்தவர் வாயில் வந்தபடியெல்லாம் பேசினார். நான் அதை மறுத்து உண்மையை எடுத்துக் கூறினேன். எஜமானருக்கு என் மீது கோபம் எழுந்தது. சவுக்கால் அடிக்க முன் வந்தார். அவரைச் சாந்தப் படுத்த முயன்ற

அப்பாவை ஓங்கி அறைந்து கீழே தள்ளினர். அடி பொட்டில் பலமாகப் பட்டுவிட்டதால் சிறிது நேரத்தில் உயிர் துறந்தார். எஜமானரும் என்னைச் சவுக்கால் அடித்துச் சென்ருர்.

**பாலு:** (கோபத்தோடு) ஆஹா. என் அப்பாவை அநியாயமாக அடித்துக் கொன்ருஞ அந்த அரக்கன்? இதோ இப்பொழுதே போய் அவன் பணத் திமிர் எவ்வளவு என்று பார்த்துவிடுகிறேன்.

[ஆவேசத்துடன் ஓடுகிருன்]

# காட்சி 11.

இடம்:— முதலியார் வீட்டில் ஓர் அறை காலம்:— பிற்பகல்

பாத்திரங்கள்:— காமு, முத்து, முதலியார், பாலு.

[காமு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிருள். முத்து கையில் ஒரு பெட்டியை எடுத்துக்கெண்டுவருகிருன்.]

**முத்து:** காமு.

**காமு:** (எழுந்து) வாண்ணு வா. இப்பொதான் வர்ரியா?

**முத்து:** ஆமாம் காமு. இப்பொதான் வர்ரேன்.

[இருவரும் உட்காருகிருர்கள்.]

**காமு:** பரிட்சையெல்லாம் எப்படி எழுதியிருக்கே?

**முத்து:** கட்டாயம் பி. ஏ. பட்டம் பெற்றுவிடுவேன் காமு.

**காமு:** சந்தோஷம்.

**முத்து:** எங்கே காமு கமலா? சௌக்கியமாகத்தானே இருக்கா.

**காமு:** அதையேன் கேட்கிறே?

**முத்து:** என்ன காமு? சொல் விஷயத்தை.

**காமு:** அப்பாவும், அந்த அய்யரும் சேர்ந்துகிட்டு அவளை அடிச்சு அபத்தமா பேசி வீட்டைவிட்டு விரட்டிவிட்டார்கள்.

**முத்து:** காரணம் ஏதுமின்றியா இப்படிச் செய்தார்கள்.

**காமு:** வழக்கம் போல அப்பாவின் அறையைச் சுத்தம் செய்துகொண்டு வரும்போது ஒரு நாள் ஏதோ சாமான் கைதவறிக் கீழேவிழுந்துவிட்டதாம். இந் நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டாராம் அப்பா. இதையே காரணமாக வைத்துக்கொண்டு......

**முத்து:** விரட்டிவிட்டார்களாக்கும். தவறுதல் நேருவது சகஜம்.

**காமு:** என்று அந்தப் புண்யாத்மாக்களுக்குப் பட்டால் தானே?

**முத்து:** எப்படிப்படும்? அவர்களுக்குத்தான் நாற்பதுக்கு மேலாகிவிட்டதே, நாய் குணம் தானே இருக்கும்?

**காமு:** நாய்களிடமாவது சில நல்லகுணங்கள் இருக்கின்றன.

**முத்து:** இந்தப் பேய்களிடம் அதுகூட இல்லையென்று சொல்லேன் காமு.

[இச்சமயம் முதலியார் வருகிறுர்]

**முதலியார்:** எப்படா முத்து வந்தே?

**முத்து:** இப்பொதான்.

**முதலியார்:** அதுக்குள்ளே என்னடா அபாரமான பிரசங்கம் செய்யுரே?

**முத்து:** எல்லாம் உங்கள் அறிவின் கனத்தைப் பற்றிய பிரசாரம்தான்.

**முதலியார்:** சபாஷ். நடக்கட்டும் நன்ருக. பரவட்டும் பாரெங்கும். [என்று சொல்லிப் போகிறுர்.]

**முத்து:** (அசட்டுச் சிரிப்பு) என் புதிர் வார்த்தைகளை புரிந்து கொள்ள முடியாத குதிர் போன்ற மாமிசப் பிண்டம்.

**காமு:** அது போகட்டும். வாண்ணு பலகாரம் சாப்பிட.

**முத்து:** ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டுத்தான் காமு வந்தேன். இந்தப் பெட்டியைக் கொண்டுபோய் உள்ளே வை. நான் வெளியில் போய்வருகிறேன்.

[என்று சொல்லி முத்து போகிறுன். காமு பெட்டியை எடுத்துக்கொண்டுபோகிறுள். முதலியார் வந்து உட்காருகிறுர். பாலு ஆவேசமாய் உள்ளே வருகிறுன்.]

**பாலு:** ஏ திவான்பகதூர் உம்மைத் திவால்பகதூர் ஆக்க முடியாது என்ற எண்ணத்தினுல் தானே என் அப்பனைக் கொன்றீர்? உமக்காக உழைத்து உழைத்து உருக்குலைந் தாரே அவர். உண்டு உண்டு உடல் கொழுத்தீரே நீர். கவனித்தீரா அதை? இரவும், பகலும் ஒன்று என்று எண்ணி ஓயாது உறங்கி உற்சாகத் துறைகளிலே உழன்று கிடந்தீரே வீட்டில். அவர் இரவென்றும், பகலென்றும் பாராது பயிர்களெல்லாம் அழியாது பாதுகாக்கக் கண் விழித்துக் கிடந்தாரே காட்டில். கவனித்தீரா அதை? உம்மை மாடி வீட்டிலே, மைனர் ஷோக்கிலே, மனிதத் தன்மையிலே, மேனகைகளின் மத்தியிலே, உலவவிட்டு உமக்குப் பணக்காரர் என்ற பட்டத்தை வாங்கிக் கொடுத்தது பாட்டாளிகளின் இரத்தத் துளிகள்தான் என்பதை கவனித்தீரா? காடு வெட்டி, மேடு கட்டி, நீண்ட வீடுகள் பல கட்டி அங்கங்கள் அலுத்த அவர்கள், அனுதினமும் ஆலையிலே ஆர்வமாய் உழைத்து அநேக ஆயுதங்கள், எந்திரங்கள் அளித்து விட்டு அரை வயிறு கஞ்சிக்குக் கஷ்டப்படும் அவர்கள்

நம்மை என்ன செய்யமுடியும் என்ற எண்ணமா? ரஷ்யாவின் ராட்சசச் செயல்களுக்குச் சாவுமணி அடித்தது பாட்டாளிகள். முட்டாள் தனங்கள் நிறைந்த பிரான்ஸ் முடி அரசை முறியடித்தது பாட்டாளிகள் என்பதையாவது கவனித்தீரா? கேவலம், கொஞ்சம் குத்தகை பாக்கி கொடுக்கவில்லை என்பதற்காக என் அப்பனை அடித்துக் கொன்றுவிட்டீரே? இது தர்மமா? நியாயமா? ஏன் மௌனியாய் இருக்கிறீர்? உமது நெஞ்சிலே ஈரமில்லையா? என்னுடன் பேச வீரமில்லையா? அல்லது என் பேச்சிலே சாரமில்லையா? சொல்லும் நீர் என்ன ஊமையா? செவிடா? அப்பா......

[என்று துக்கம் தாளாமல் சுருண்டு தரையில் வீழ்கிறான். அவன் எழுவதற்குள் முதலியார் செக் ஒன்று எழுதிவிடுகிறார். பிறகு சிறிது நேரத்தில் பாலு மெதுவாக உணர்வு பெற்று எழுகிறான்.]

**முதலியார்:** ஏய் பாலு, என்னடா சின்னப் பிள்ளை மாதிரி அழுறே? உங்க அப்பன் சாவக் கூடாத வயசா என்ன? கெழட்டுப்பய இண்ணைக்கி இல்லேண்ணு இன்னும் கொஞ்ச நாளையிலே சாவப்போறான். அது தெரியாமே இவ்வளவு கவலைப்படுறியே? இதோ இந்த இருநூறு ரூபாய் செக்கைப் பெற்றுக்கொண்டுபோய் உன் அப்பன் பிணத்தை அடக்கம் செய்துவா. அப்புறம் ஏதாவதுபணம் தாரேன். அதை முதலாக வைத்துக் கொண்டு நீ பிழைக்கலாம்.

**பாலு:** (கோரச்சிரிப்பு) பணம், பணம், இரக்கமற்ற கூட்டத்தின் இரும்புப் பெட்டியிலே இருந்துகொண்டு உழைப்பவர்களின் உதிரத்தை உறிஞ்சும் பணம். இந்தா இதை நீயே கட்டிக்கொண்டு அழு.

[என்று செக்கை முதலியார் முகத்தில் வீசி எறிகிறான்]

**முதலியார்:** என்ன திமிருலே லெட்சுமியை வீசி எறியறே? டேய் உன்னால் என்னை என்னடா செய்ய முடியும்?

**பாலு:** உலகிலே பல அக்ரமங்களைச் செய்துவிட்டு அதை மறைக்கக் காசை வீசும் உங்கள் கரங்களை அறுக்கமுடியும் என்னால். ஆனால் நான் முட்டாளல்ல உங்களைப் போல. திடீர் என்று எதையும் செய்யமாட்டேன்.

[இருவரின் சச்சரவைக் கேட்டு காமு வருகிறாள்]

**காமு:** அப்பா யார் இந்த இளைஞர்?

**முதலியார்:** இவன், நம்ம வீட்டிலே வேலை செய்தாளே ஒரு சிறுக்கி, அவ அண்ணன்.

**பாலு:** வாயை மூடடா பொறுக்கி. ஒரே உதையில் விழுவாய் சறுக்கி.

**காமு:** அய்யா, என் தந்தை செய்தது குற்றந்தான். அதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால் பார் முழுதும் அவர் பணத்தைக் கண்டு பயந்திருக்கிறது. ஆதலால் நீங்கள் பகிரங்கமாக அவருக்கு ஒரு தண்டனையும் தரமுடியாது. வேண்டுமானால் கள்ளத்தனமாக அவரைக்கொலை செய்யலாம். பொருளைக் கொள்ளையடிக்கலாம். ஆனால் நான் உங்கள் காலைப்பிடித்து வேண்டிக்கொள்கிறேன். அவருக்கு ஒரு தீங்கும் இழைக்காதீர்கள். உங்கள் திறமையைக் காட்டி அவரைத் தன்னைத்தானே உணரும்படிச் செய்து சீர்திருத்துங்கள். அதனால் உங்களுக்குப் பேரும், புகழும் கிடைக்கும்.

[என்று மண்டியிட்டுக் கெஞ்சுகிறாள் காமு. பாலு அசையாமல் சிறிது யோசனை செய்கிறான். பின்பு

ஏதோ நினைவுக்கு வந்தவன் போல பேசப் போகிறான் வார்த்தைகள் வரவில்லை. போகிறான் அவ்விடத்தைவிட்டு.]

## காட்சி 12.

இடம் :— **அண்ணுசாமி அய்யர் வீடு** காலம்:— **மாலை**

பாத்திரங்கள் :— **அண்ணுசாமி அய்யர், கோமு**

[கோமு, கோமு என்றழைத்துக்கொண்டே அய்யர் வருகிறார்]

**கோமு:** (ஓடிவந்து) ஏம்ப்பா?

**அய்யர்:** (உட்கார்ந்துகொண்டு) உள்ளே என்னம்மா செய்திண்டிருந்தே?

**கோமு:** சமையல் செய்திண்டிருந்தேம்ப்பா.

**அய்யர்:** பாபம். உங்க அம்மா இறந்ததுனாலே நோக்கு எவ்வளவு சிரமம் பார்த்தியா ?

**கோமு:** இதெல்லாம் ஒரு சிரமமாப்பா? நாளைக்கி ஆம்படையான் வீட்டிற்குப் போனால் ஓய்வு ஒறக்கமில்லாமே வேலை செய்யணுமே அப்போ?

**அய்யர்:** பொறுக்கிப் பயல் வீட்டிற்குப் பெண் கொடுத்தால் தானே நோக்கு அந்த சிரமம்? சீமான் வீட்டிலே வாழ்க்கைப்பட்டால்?

**கோமு:** என்னைச் சீமான்கள் தேடிவர நம்மிடம் செல்வம் ஏதப்பா?

**அய்யர்:** வழியில்லாமலா, வாய்ப்பந்தல் போடுவேன்?

**கோமு:** வழியிருக்கிறதா ! நிஜமாகவாப்பா?

**அய்யர்:** ஆம். ஆனா அந்த வழியிலே வெற்றி காண்பது உன் பொறுப்பாயிருக்கு.

**கோமு:** தந்தை வார்த்தையை தட்டவாப் போகிறேன்? விஷயத்தைச் சொல்லுங்கோ, அதன்படியே செய்யறேன்.

**அய்யர்:** நிச்சயமாகவா?

**கோமு:** சத்தியமாக!

**அய்யர்:** கோமு நீ நம்ம வீரநாத முதலியார் விருப்பத்திற்கு இணங்கினால் இலட்சக் கணக்கிலே பணம் இந்த வீட்டில்!

**கோமு:** அப்பா, மானத்தை விற்று?

**அய்யர்:** அதைப் பார்த்தால் நோக்கு மணமும் நடக்காது என் மனமும் குளிராது.

**கோமு:** அப்பா, நான் கற்பிழந்த கன்னிகை என்று தெரிந்து விட்டால் எந்தக் கனவான் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள முன்வருவான்?

**அய்யர்:** கோமு, நீ உலகத்தைத் தெரிஞ்சிக்காத சிறுபெண். கனவான்களுக்கு காசின்மீதுதான் குறி. கற்பைப் பற்றிய கவலையே இல்லை. இதோ பார் பணம் பாதாளம் வரைக்கும் பாயுங்கற பழமொழியைக்கூடவா மறந்துட்டே?

[இதைக் கேட்ட கோமு குனிந்த தலையை நிமிர்த்தாமல் மௌனமாய் இருக்கிறாள்.]

**அய்யர்:** (ஆத்திரத்தோடு) கோமு, நீ இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிட்டா காலம் முழுதும் கன்னிப் பொண்ணாகவே இருக்கவேண்டியதுதான்.

**கோமு:** அப்பா. வேண்டாம். உங்கள் விருப்பப்படியே நடக்கிறேன்.

அய்யர்: ஆஹா! இன்றுதான் உன்னைப் பெற்றதின் பலனைக் கண்டேன்.

[என்று அய்யர் ஆனந்தக்கூத்தாடுகிறார். மகள் மனமுடைந்து உள்ளே செல்கிறாள்.]

## காட்சி 13.

இடம்:— தோட்டம். காலம்:— மாலை

பாத்திரங்கள்:— பாலு, காமு.

[பாலு பாரதிதாசன் கவிதைகளில் உள்ள ஒரு பாட்டை இசைக்கூட்டி பாடி முடிக்கிறான். காமு வருகிறாள்.]

காமு: வணக்கம்.

பாலு: வணக்கம்.

காமு: தாங்கள் பாடியபாடல்......

பாலு: பாரதிதாசன் பாடல். இதோ, இதில் இருக்கிறது பாருங்கள்.

[என்று கவிதை நூலைக்கொடுக்கிறான். காமு அதை வாங்கி படித்துப் பார்க்கிறாள்.]

காமு: ஆஹா! எவ்வளவு உயர்ந்த உவமைகள். என்ன உன்னதமான கருத்துகள். இப்பேர்ப்பட்டபாடல்கள்தான் விழிப்புற்றிருக்கும் நம் நாட்டிற்குத் தேவை.

பாலு: என்பதை மக்களில் சிலர் உணருவதில்லை.

காமு: ஏன் ?

பாலு: அவர் ஒரு நாஸ்திகக் கவிஞராம்.

காமு: நாஸ்திகமென்றால்...?

பாலு: நாட்டிலே சகல துறைகளையும் சீர்திருத்துகிறோம் நாங்கள் என்று நடித்து மார்தட்டிக் காட்டி மக்களை ஏமாற்றி மகத்தான புகழையும், மட்டில்லாப் பொருளையும் சம்பாதித்துக்கொண்டு கெட்டி மெத்தையிலே காரிகைகளை கட்டி உருளும் கயவர்களை சொற் சாட்டைகளால் சந்திக்கிழுப்பது நாஸ்திகமாம். ஆரியர்களின் சூழ்ச்சிகளில் ஆழ்ந்துகிடக்கும் அருந்தமிழ் நாட்டினரை ஆண்மை பெற்று ஆயத்தமாகுங்கள் நம் ஆன்றோர்கள் கண்ட தமிழகத்தை ஸ்தாபிக்க என்று பகுத்தறிவை போதனை செய்து அழைப்பது நாஸ்திகமாம். எப்படியிருக்கிறது குற்றச் சாட்டு?

காமு: எல்லாம் அறியாமையின் காரணத்தால் எழுந்தது.

பாலு: அழிந்துவிடும் சில நாளில்.

காமு: ஐயமில்லை அதற்கு.

பாலு: வருகிறேன் நான்.

காமு: அவசரமான காரியமோ?

பாலு: அப்படியொன்றுமில்லை.

காமு: சில வார்த்தைகள் பேசவேண்டும்.

பாலு: தாராளமாக.

காமு: கோபம் வராதே?

பாலு: அஞ்சவேண்டாம்.

காமு: ஆரம்பிக்கட்டுமா?

பாலு: அது தங்கள் விருப்பம்.

காமு: மலருக்கு எது தேவை?

பாலு: மணமும், மதுவும்.

காமு: வீணைக்கு?

பாலு: நாதம். இது கூடவா தெரியவில்லை.

காமு: கண்களுக்கு ஒளி தேவையா? இமைகள் தேவையா?

பாலு: இரண்டும் தேவை.

காமு: ஏதாவது ஒன்று..... ?

பாலு: இருந்தால் போதாது. கண்களுக்கு உயிர் ஒளி. ஒளிக்கு உயிர் இமைகள்.

காமு: வாழ்க்கைச் சிக்கல் ஏற்படும்காரணம்?

பாலு: பெற்ருேர்களால், ஜோதிடர்களால் அமைத்துத் தரப் படும் காதல் பாதையில் போவதுதான்.

காமு: அதற்கு முடிவு?

பாலு: விதவைகளாய், வழாவெட்டிகளாய் திரும்புவதுதான்.

காமு: அப்படித்திரும்பினவர்கள் ஆயுள் முழுதும் அவதிப் பட வேண்டியதுதானு?

பாலு: அமைதியைக் கைக்கொண்டால் ஆண்டவன் விட்ட வழியென்று பழியைச் சுமந்துக்கொண்டால் அணு, அணு வாக வாட்டப்படுவார்கள் புராண போதை ஏறிய போத கர்களால் என்பது நிச்சயம்.

காமு: அந்த வஞ்சகப் பாம்புகளிடமிருந்து மீள முடியாதா?

பாலு: முடியும். என்வாழ்க்கை சுவையுள்ளதாக இருக்கும் படி அமைத்துக்கொள்ளும் உரிமை உண்டு எனக்கு என்று வாதாடி அதன்படி காரியமுமாற்றினுல் கட்டாயம் வாழ முடியும் வளமாக.

காமு: அப்படியானுல் நான்....................?

பாலு: தயக்கமேன்? தைரியமாய் சொல்லுங்கள்.

காமு: நான் இன்பமறியாத இளம் விதவை. தங்களைக் காதலிக்கிறேன்.

[என்று நாணத்தால் தலை குனிகிருள்.]

பாலு: என்னை உன் தந்தை பரம வைரியாகக் கருதுகிருரே?

காமு: நேர்மையைக் கூறுபவனை, பகுத்தறிவைப் பரப்பு பவனை உலகம் பகைவன் என்றுதானே நினைக்கிறது? இது மகா முட்டாள் தனமாயிற்றே?

பாலு: உண்மை. ஆனால் செல்வ விண்ணிலே மிதக்கும் நட்சத்திரமாகிய உன்னையும், வறுமை மண்ணிலே வாடும் மல்லிகையாகிய என்னையும் திருமணக் கயிற்றிலே சேர்த்துத் தொடுக்க முடியுமா?

காமு: உங்களுக்குத்தான் தெரியுமே, காதல் கோயிலுக்குப் போக காசு தேவையில்லை, ஜாதி தேவையில்லை என்று

பாலு: ஆமாம், ஆனால் உன் தந்தை உனக்குத் தகாத தண்டனை தருவாரே?

காமு: தளர்ந்துவிடாது என் உள்ளம். உங்கள் பொருட்டு உயிர்விடவும் தயார் நான்.

பாலு: அந்தமுடிவு நேராது உனக்கு. அவர் சம்மதித்தால் ஆர்ப்பாட்டம். இல்லையேல் தொடங்குவோம் போராட்டம் இந்த உலகிலே. நீ போய்வா.

## காட்சி 14.

இடம்:— முதலியார் வீடு. காலம்:— இருட்டும் சமயம்

பாத்திரங்கள்:— முதலியார், அய்யர், காமு.

[முதலியார் சோபாவில் சாய்ந்துகொண்டு பேப்பரைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். இச்சமயம் அய்யர் "முதலியார்வாள், முதலியார்வாள்" என்று அழைத்துக்கொண்டுவந்து பெருமூச்சுவிட்டுக்கொண்டு நிற்கிறார்.]

முதலியார்: வாங்க சாமி வாங்க. ஏன் இப்படி வியர்வையும் விருவிருப்புமா ஓடியாரிங்க? விஷயமென்ன சொல்லுங்க?

அய்யர்: விஷயத்தைச் சொல்ல இந்த நாக்கு கூசுதுங் காணும்.

முதலியார்: சும்மா சொல்லுங்கசாமி. வேண்டியதைச் செய்யத்தான் இந்த வீரநாத முதலியார் இருக்கேனே! அப்புறம் உங்களுக்கென்ன கவலே?

அய்யர்: முதலியார்வாள், உமது குலமென்ன, கோத்திரமென்ன, அந்தஸ்தென்ன, ஆஸ்தியென்ன, பட்டமென்ன?

முதலியார்: என்னுங்க சாமி. விஷயத்தைச் சொல்லாமெ வீண் வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போகிறீர்களே?

அய்யர்: உம்ம பொண்ணு காமு; சீர்திருத்தம் பேசும் அந்த சின்னப் புத்திப் பயல் பானுவுடன் காதல் நாடகமாடுகிறாள். நான் என் கண்களால் கண்டேன் அதை.

முதலியார்: (ஆத்திரத்தோடு எழுதல்) ஆஹா!

அய்யர்: முதலியார்வாள், கோபத்தைத் தணியும். கேவலம், சிற்றெறும்பை நசுக்க சிம்மமாகிய நீர் போவதா? வேண்டாம். நான் அவனை கவனித்துக்கொள்கிறேன்.

முதலியார்: சுவாமி, அந்த விதவைச் சிறுக்கி தன் சிதைந்த வாழ்விற்குக் காரணம் விதியென்றாள். நான், ஆம் என்றேன். உலகமும் உண்மையென்றது. அப்படியானல் அடுத்த ஜென்மத்தில் அந்த விதி என்னை அணுகாமலிருக்க அனுதினமும். ஆலயம் போகவேண்டு மென்றாள். சரியென்றேன்.

அய்யர்: சரசலீலைக்குச் சரியான பயலைப் பிடித்துவிட்டாள். அது அவள் குற்றமா?

முதலியார்: பிறகு என் குற்றமா ?

அய்யர்: இல்லை. வாலிபமும் வனப்பும், செய்த குற்றம்.

முதலியார்: அதை எப்படித் தடுப்பது ?

அய்யர்: நம் இந்துமத தர்மப்படி மொட்டையடித்து முக்காடிட்டு மூலையிலே தள்ளியிருந்தால்.. ... ?

முதலியார்: இந்தத் தப்பிதம் வராதுதான். இதோ, இப்பொழுதே அவளை அவலட்சணத்தின் இருப்பிடமாக்கி விடுகிறேன்.

அய்யர்: முதலியார்வாள் அவசரப்படாதீர். அவள் இங்கே வந்ததும் எது வேண்டுமானாலும் செய்துகொள்ளலாம். பொறும்.

முதலியார்: உமது வாக்குக்கு மறுவாக்கா? சரி.

[இச்சமயத்தில் காமு 'அப்பா' என்றழைத்துக் கொண்டே வருகிறாள்.]

முதலியார்: அடி காமாந்தகார நாயே.

காமு: உங்கள் உடலுக்கு ஒன்றுமில்லையே அப்பா?

முதலியார்: உள்ளத்திலே அனலின் ஜ்வாலையை எழுப்பி விட்டு உடலிலே காரமான மருந்தை பூசிவிட்டாயே காதகி.

காமு: என்னப்பா சொல்கிறீர்கள் ?

முதலியார்: என் மானத்தை வாங்கிவிட்டாயடி

காமு: அப்படியொன்றும் செய்யவில்லையே?

முதலியார்: போடி நீலி.

காமு: உங்கள் மகளா அப்பா நீலி ?

முதலியார்: அப்பாவென்றழைக்காதே, அறுத்துவிடுவேன், நாக்கை.

காமு: வீண் கோபங்கொள்ளாமல் விஷயத்தைச் சொல்லுங்கள்.

முதலியார்: அந்தக் காலிப் பயலுடன் காதல் லீலைகள் புரிந்தாயா?

காமு: யார் சொன்னது?

முதலியார்: நான்தான் சொல்கிறேன்.

காமு: இருக்கலாம்.

முதலியார்: இருக்கலாமென்று ஏன் இழுத்துப்பேசுகிறாய். உண்டு என்று உறுதியாய்ச் சொல்.

காமு: ஆம்.

முதலியார்: ஆம் ... ஆம்... என் முன்னே நிற்காதே விபசாரி?

காமு: விபசாரி. யார் நானா? அப்பா, பத்தினிகள் என்று பலர் முன்னிலையில் பறைசாற்றிக்கொண்டு இரவிலே எண்ணற்ற காமுகர்களிடம் கூடிக்குலாவும் கூட்டத்தில் சேராமல் என் வாழ்வு செழிக்க மறு மணம் செய்துகொள்ள முயல்வது விபசாரமா?

முதலியார்: ஏண்டி கழுதை கம்மனாட்டிகளுக்கெல்லாம் கல்யாணமா? போடி, போ.

காமு: அப்பா, கட்டையேறப் போறக் கிழவன்களெல்லாம் கல்யாணம் செய்துக்கொள்ள விரும்பும்போது ஒரு சுகத்தையும் கண்டறியாத பால்ய விதவைகள் மறுமணம் செய்துகொள்ளக்கூடாதா?

முதலியார்: என்று கேட்கிறாயா?

காமு: சீர்திருத்த வீரர்கள் கேட்கிறார்கள்.

முதலியார்: கேட்பான்கள், கேட்பான்கள். உதைக்க ஆள் இல்லையென்றால் இதுவும் கேட்பான்கள், இதற்கு மேலும்

கேட்பான்கள். அடுத்த மாதம் நான் கல்யாணம் செய்து கொள்ளப்போகிறேன். அப்பொழுது அந்த வீரர்கள் என்னிடம் வரட்டும். சரியான பாடம் காட்டி அனுப்புகிறேன்.

**காமு:** கல்யாணமா? நீங்கள் செய்துகொள்ளப்போகிறீர்களா? அப்பா, சீர்திருந்திவரும் இந்த நாகரீக உலகிலே வாழும் நாற்பது வயது கிழவி கூட இதற்கு இசையமாட்டாளே?

**முதலியார்:** வெள்ளையப்பனை வீசினால் வேண்டிய கழுதைகள் காலடியில்வந்து விழுகின்றன.

**காமு:** கழுதைகள் விழும் ஆனால் கன்னியர்கள் விழமாட்டார்கள்.

**முதலியார்:** விழவைக்கத்தான் வேதியர் அண்ணாசாமி இருக்காரே, பிறகு எனக்கென்ன கவலை?

**காமு:** அப்பா, இந்த அய்யரின் கையில் அகப்படும் ஆட்களின் கதியெல்லாம் மந்தியிடம் கிடைக்கும் மலர் மாலை போல்தான்.

**முதலியார்:** சீ போக்கிரிப் பெண்ணே, அவர் எனக்குக் கடுகளவுத் தீங்குகூட கனவிலும் கருதமாட்டார்.

**காமு:** எல்லாம் போகப் போகத் தெரியும்.

**முதலியார்:** தெரிந்தால் தெரியட்டும். நீ நாளை முதல் வெளியில் போகக்கூடாது. இது என் கண்டிப்பான உத்திரவு. மீறிச் சென்றால் அப்புறம் என்ன நடக்கும் என்று இன்னும் என் புத்திக்கேபடவில்லை. ஆதலால் பார்த்து ஒழுங்காக நடந்துகொள். சுவாமி வாருங்கள் போகலாம்.

**காமு:** அப்பா.

**முதலியார்:** ஒன்றும் பேசாதே. [போகிறார்கள்]

**காமு:** (இருவரும் போனபின்பு) காதலுக்கு அணைபோட கடவுளாலும் முடியாமலிருக்கும்போது இவர் எம்மாத்திரம், பார்த்துக்கொள்வோம்.

# காட்சி 15.

இடம்:— உழவனின் குடிசை காலம்:— காலை

பாத்திரங்கள்:— முத்து, கமலா, பாலு.

[கமலா, குடிசையின் முன்பு குளிர்ச்சிக்காகத் தண்ணீரைத் தெளித்துக்கொண்டிருக்கிறாள். முத்து வருகிறான். தண்ணீர் அவன் மீது படுகிறது.]

**கமலா:** மன்னிக்கவேண்டும்.

**முத்து:** பரவாயில்லை. உன் அண்ணன் எங்கே?

**கமலா:** வீட்டினுள் தூங்குகிறார்.

**முத்து:** நமது நட்பைப்பற்றி அவரிடம் சொன்னாயா ?

**கமலா:** இன்னும் இல்லை.

**முத்து:** ஏன்?

**கமலா:** வெந்த புண்ணிலே வேலை நுழைக்க நான் விரும்பவில்லை.

**முத்து:** நீ சொல்வதின் அர்த்தம் ?

**கமலா:** உங்கள் தந்தை மீது என் அண்ணன் ஆத்திரம் கொண்டிருக்கிறார். இந் நிலையில் இச் செய்தியை வெளியிட்டால் நம் காதலை அழித்துவிடுவார் என்ற ஐயம்தான்.

**முத்து:** இப்படிப்பட்ட கோழை காதல் விஷயத்தில் ஈடுபட்டிருக்கவே கூடாது.

**கமலா:** நான் தான் கோழை. நீங்கள்தான் வீராயிற்றே. உங்கள் அப்பாவிடம் எல்லா விஷயத்தையும் எடுத்துச் சொல்லி அவரைச் சம்மதிக்க வைப்பதுதானே ?

[முத்து பதில் சொல்ல முடியாமல் விழிக்கிறான்.]

**கமலா:** என் வாய் பேசமாட்டேன் என்கிறது ?

**முத்து:** வழியில்லையென்று.

**கமலா:** அப்படிச் சொல்லுங்கள். இப்பொழுது தெரிகிறதா காதலில் உள்ள கஷ்டம்?

**முத்து:** எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் முடிவில் நாம் அடையமாட்டோம் நஷ்டம்.

**கமலா:** எனக்கும் அதுதான் இஷ்டம்.

**முத்து:** அது இருக்கட்டும். தற்போது எனக்கு ஒன்று வேண்டும்?

**கமலா:** என்ன வேண்டும்?

**முத்து:** மலரிடம் வண்டு என்னவேண்டும் ?

**கமலா:** மது வேண்டும்.

**முத்து:** அது வேண்டும் எனக்கு.

**கமலா:** என்னிடம் இல்லையே?

**முத்து:** பொய் சொல்லுகிறாயே ? மாதுளைப் பூ போன்ற உன் உதடுகளிலே ஊறும் உயர்ந்த அமுதத்தை வைத்துக் கொண்டு.

**கமலா:** ஓ, முத்தமா?

**முத்து:** ஆம். சித்தம் திரும்பட்டும்.

**கமலா:** நித்தம் இதுதானா வேலை?

**முத்து:** எத்தனை தடவை சுவைத்தாலும் தெவிட்டுவதில்லை. எங்கே?

[என்று கமலாவைப் பிடிக்கப் போகிறான் இச்சமயம் 'கமலா' என்ற குரல் குடிசையினுள்ளிருந்து வருகிறது.]

**கமலா:** ஆ! அண்ணா விழித்துக்கொண்டார்.

**முத்து:** அச்சமில்லை.

[என்று முத்தமிடப் போகிறான். கமலா வெட்கத்தால் விலகி நின்றுகொள்கிறாள்.]

**கமலா:** அவர் வெளியில்வந்தால் வேதனைதான் நமக்கு

**முத்து:** சோதனை பார்க்கலாம் சும்மாயிரு.

[என்று மறுபடியும் அவளை நோக்கிப் பாய்கிறான். பானுவால் தடுக்கப்படுகிறான்.]

**பானு:** கமலா, யார் இவன்?

**கமலா:** (நடுங்கிக்கொண்டே) முதலியாரின் மைந்தர் என்...

**பானு:** ஓ, நீதானா?

**முத்து:** ஆம், நான்தான்.

**பானு:** எந்த வகுப்பில் படிக்கிறாய்?

**முத்து:** பி. ஏ. பரீட்சை எழுதியிருக்கிறேன்.

**பானு:** கல்லூரி மாணவனா? காம இச்சை தீர காதல் நாடகம் ஆரம்பித்து கனிமொழிகள் பல பேசி கடைசியில் கன்னியர்களின் கண் கலங்க கைவிட்டுச் செல்லும் சில கோஷ்டிகளுடன் உனக்குப் பழக்கம் உண்டா?

**முத்து** இல்லவேயில்லை. நான் கனவில் கூட அவர்களைக் கருதுவதில்லை. மேலும் எனக்கும் கமலாவுக்கும் ஏற்பட்டுள்ள காதல் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. என்று என் வீட்டிற்கு வேலைக்காக வந்தாளோ அன்றையிலிருந்தே வளர்ந்துவந்துள்ளது. ஆதலால் நான் உயிருடன் இருக்கும் வரை இவளை மறக்கமாட்டேன். இது சத்தியம்.

**பானு:** சத்தியந்தான் இந்தக் காலத்தவருக்கு சர்க்கரைப் பொங்கல் தின்பது போலாயிற்றே. எந்தக்காரியத்திற்கும் முன் பின் யோசியாமல் எத்தனை சத்தியம் வேண்டுமானாலும் சர்வ சாதாரணமாய் செய்வார்கள். அதிலே எனக்கு

நம்பிக்கை கிடையாது. உண்மையாக, உறுதியாகக் கூறுகிறேன். நான் உங்கள் இருவருக்கும் திருமணம் செய்யத் தீர்மானிக்கும்போது நீ ஆஸ்தியின் மீது ஆசைப்பட்டு உன் அப்பாவைக் காட்டி ஏதாவது சாக்குச் சொன்னால் உங்கள் இருவரையும் குத்திக் கொன்று ஒரே குழியில் புதைப்பேன் என்பது திண்ணம்.

**முத்து:** உங்களுக்கு அந்த எண்ணம் ஏற்படும்படி நான் நடந்துகொள்ளவேமாட்டேன்.

**பாலு:** நல்லது வா போகலாம். (இருவரும் போகிறார்கள்)

## காட்சி 16.

இடம்:— ஓர் வீடு. காலம்:— மாலை

பாத்திரங்கள்:— பூசாரி, ரகு, லெட்சுமி, பாலு.

[பூசாரி வருகிறான். ரகு அவனை எதிர்கொண்டழைக்கிறான்.]

**ரகு:** வாங்க பூசாரி அய்யா வாங்க. இப்படி உட்காருங்க.

[இருவரும் உட்காருகிறார்கள்.]

**முத்தையா பூசாரி:** என்னைக் கூப்பிட்டிங்கண்ணு காத்தான் வந்து நம்ம ஊரிலே சொன்னான். உடனே ஓடோடியும் வர்ரேன்.

**ரகு:** ஆமாம். நான்தான் கூப்பிட்டுவரச்சொல்லி சொல்லி அனுப்பினேன்.

**பூசாரி:** ஏன்? ஏதாச்சும் விஷயம் உண்டா? சொல்லுங்க. இப்பவே செஞ்சு முடிச்சுடுவோம்.

**ரகு:** பூசாரி அய்யா, எனக்குக் கல்யாணம் நடந்து நாலு வருஷம் ஆகிறது. ஒரு குழந்தைக் குஞ்சைக்கூடக்

காணோம். அவளும் என்னமோ மசமசண்ணு ஒரு வேலையும் ஒழுங்காச் செய்யாமே மூலையிலேயே தூங்கறா. இதுக்கு என்ன செய்யறது சொல்லுங்க?

பூசாரி: சரிதான். பேய் பலமா பிடிச்சிருக்கும்போது பிள்ளை எப்படி பிறக்கும்? மேலும் நீங்க இது வரையிலும் இவ்வளவு அசட்டையாக இருக்கலாமா?

ரகு: அசட்டையாக இருக்கலே. எங்க ஊர் அண்ணுசாமி அய்யர் சொன்னபடி அரச மரத்தைச் சுற்றிவாரச் சொன்னேன். அடிவயறு பெருக்கலே. எங்க ஜோஸ்யர் சாமா சாஸ்திரிகள் சொன்னதுபோல் சமயபுரம், ராமேஸ்வரம், ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சிவரம், முதலிய கோயில், குளங்களுக்கும் போனேன். பழனியாண்டவருக்குப் பாலபிஷேகம் செய்யப் பணம் கொடுத்தேன். விநயகருக்கு விடையாத்தி உற்சவம் நடத்திவைத்தேன். பெருமாளுக்கு கருட வாகனம், சிவனுக்குக் காளை வாகனம் கூட செய்துவைத்தேன். ஒரு பலனையும் பார்க்கமுடியவில்லை.

பூசாரி: அது எப்படி முடியும். அந்தந்தக் கோயிலுக்கு அந்தந்தப் பூசாரி வர்ராப்பலே அந்தந்த காரியத்துக்குத் தகுந்த ஆள் வந்தாதானுங்களே பலனைப் பார்க்கமுடியும்.

ரகு: ஆமாம், ஆமாம். அது தெரியாமெதான் இப்படியெல்லாம் அலைஞ்சோம். இப்பொ என்னென்ன சாமான்களெல்லாம் வேணும்ணு சொல்லுங்க, வாங்கியாறேன். இன்னிக்கே இந்தப் பேயை ஓட்டிட்டு போயிடுவிங்க.

பூசாரி: கள்ளுலே ரெண்டு புட்டி, கற்பூரத்திலே நாலுகட்டி சாம்பிராணி, தேங்கா, பழம், வெற்றிலே, பாக்கு புகையிலே, வேஷ்டி ஒரு ஜோடி, அரிசி, பணத்திலே பதினைந்து ரூபாய்

எல்லாம் கொண்டாங்க. இந்தப் பேயை பறவா பறக்கச் சொல்றேன்.

**ரகு:** எல்லாம் தயாராயிருக்கு.

**பூசாரி:** அப்படீண்ணு போயி எல்லா சாமான்களேயும் எடுத்துக்கிட்டு அம்மாளேயும் அழைச்சிக்கிட்டுவாங்க.

[ரகு எல்லா சாமான்களேயும் கொண்டுவந்துகொடுக்கிறுன். பூசாரி எல்லாவற்றையும் ஒழுங்காக எடுத்து வைத்துக்கொண்டு தயாராய் இருக்கிறுன். ரகு மனேவியைக் கூப்பிடுகிறுன். வர மறுக்கிறுள். கோபமாய்ப் போய் சிகையைப பிடித்து இழுத்து வருகிறுன். லட்சுமி கதறிக்கொண்டே வருகிறுள்.]

**லெட்சுமி:** பூசாரி, பூசாரி, எனக்குப் பேயுமில்லே, ஒண்ணுமில்லே. என்னே விட்டுவிடச்சொல். உனக்குக் கோடி புண்ணியமுண்டு.

**பூசாரி:** எஜமான். பிடியை விட்டுடாதிங்க. இது ஒரு தினுசானப் பேய். இப்படிதான் பேசும். இன்னும் கொஞ்ச நாழியில் எல்லாம் சரியாய்ப்போயுடும்.

[ரகு, லெட்சுமியை விடாப்பிடியாக இழுத்து வந்து பூசாரி முன் உட்கார வைக்கிறுன். பூசாரி உடுக்கை எடுத்து விபூதி போட்டு உண்மையைக் கேட்கிறுன். அவள் ஏதும் சொல்ல மறுக்கிறுள்.]

**பூசாரி:** (உடுக்கை அடித்துக்கொண்டு) அடி சமயபுரத்தாளே சல்தியிலே ஒடிவாடி. மருத காளியே நீ மலேக்காமல் ஒடிவாடி. ஏழு மங்கலத்தாளே நீ ஒளியாமல் ஓடிவாடி. அவர குளத்தாளே நீ அவசரமாய் ஒடிவாடி. ஆஹா (விபூதியைப் போட்டு) ஆடு, ஆடு. ஆடமாட்டியா? இதோ பார்.

அடே சோலமுத்தையா, கருப்பையா, பெரியப்பா, பழ மலய்யா, உடனே ஓடிவா. (ஒன்றுக்கும் அவள் அசைய வில்லை.) இதற்கெல்லாம் நீ அசையமாட்டாய். இதோ என் கைத் திறமையைக் காட்டுகிறேன். (எருவாலங்குச்சி யால் அடித்து) ஆடு, ஆடு.

**லெட்சுமி:** அய்யோ, அத்தான், என்னை இவன் அடிக்கப் பார்த்துக்கொண்டிருக்கிறுயே? இது உனக்கு நியாயமா?

**ரகு:** லெட்சுமி, அவர் உன்னை அடிக்கவில்லை. உன்னைப் பிடித்திருக்கும் பேயையல்லவா அடிக்கிறூர். அழாதே. ஆடு.

**லெட்சுமி:** பேயிருந்தாலல்லவா ஆடுவேன். ஏன் என்னை வீணே தொந்தரவு செய்யச் சொல்கிறுய்? அத்தான் அத் தான் அடி பொறுக்கமுடியவில்லை. விட்டுவிடச் சொல்.

**பூசாரி:** எஜமான், நீங்க தூரப்போயிடுங்க. அப்பதான் பேய் சொன்னபடி கேட்கும்.

**ரகு:** இதோ நான் போய்விடுகிறேன்.

[ரகு அப்பால் போய்விடுகிறுன்]

**பூசாரி:** போகிறுயா? சொல், சொல். (அடிக்கிறுன்)

**லெட்சுமி:** ஐயோ, கொலைகாரா என்னைச் சித்திர வதை செய்யாதே. உயிர் ஊசலாடுகிறது.

**பூசாரி:** என்னசொன்னுலும் உன்னைவிடமாட்டேன். போகி றேன் என்றுல்தான் அடியை நிறுத்துவேன்.

**லெட்சுமி:** இனி உன்னைக் கெஞ்சப்போவதில்லை. என் கோர சொருபத்தைக் காட்டினுல் தான் உன் கண்கள் திறக்கும்.

[என்று எழுந்திரிக்கப்போகிறுள்.]

**பூசாரி:** எஜமான், எஜமான். ஓடியாந்து அம்மாளை அமுக் கிப் பிடிச்சிக்குங்க.

[ரகு ஓடிவந்து லட்சுமியை அமுக்கிப்பிடித்துக் கொள்கிறான்.]

**பூசாரி:** (மீசையை முறுக்கிக்கொண்டு) இந்த முத்தையா பூசாரிக்கிட்டையா பூச்சாண்டி வேலையெல்லாம் நடக்கும். போ, போ. [என்று அடிக்கிறான்.]

**லெட்சுமி:** ஐயோ, முட்டாள் சமூகமே. பேய் இல்லை, பிசாசில்லை என்று ஆராய்ச்சி மூலமாய் அறிஞர்கள் பலர் கண்டுள்ள உண்மைகளை உணராமல் என்னைப்போல் எத்தனை சகோதரிகளை இக்கொடுமைக்கு உள்ளாக்குகிறாய்? நீ அழிந்து மண்ணோடு மண்ணாய்ப் போ.

**பூசாரி:** எஜமான், இது பேச்சு கத்த பிசாசு. இதை லேசில் விடக்கூடாது விட்டா நமக்குத்தான் ஆபத்து. ஓடு, ஓடு.

[அடிக்கிறான்]

**லெட்சுமி:** ஐயோ, அத்தான் நன்றாக சிந்தித்துப் பாருங்கள் நெஞ்செலும்பு ஓடிவது போல் நிதம், நிதம் பாடுபடுகிற பாட்டாளிகள் பழங்கஞ்சிக்கிப் பறக்கிற இந்தக் காலத்தில் உடல் குலுங்காமல், வியர்வை சிந்தாமல் போட்ட பட்டைக் கலையாமல் குந்திக்கொண்டு சாமி, பூதம் என்று சொல்லிக்கொண்டு ஊரை ஏய்த்துக் கும்பியை வளர்க்கும் குள்ளநரிக் கூட்டம். இதை நம்பாதீர்கள். உதைத்து விரட்டுங்கள். என்னைப் பேயும் பிடிக்கவில்லை, பிசாசும் பிடிக்கவில்லை.

**பூசாரி:** அதிகம் பேசாதே பேயே. இதோ, இப்பொழுதே உன் ஆணவத்தை அடக்கிவிடுகிறேன்.

[என்று சொல்லி ஓயாமல் அடிக்கிறான். லட்சுமி 'ஐயோ, ஐயோ' என்று கதறுகிறாள். கணவன் ரகு அவளை அமுக்கிப் பிடிக்கிறான். கடைசியில் அடி தாங்கமுடியாமல் தரையில் விழுகிறாள்.]

**பூசாரி:** எஜமான் பேய் பறந்துடுச்சிங்க.

[வீதி வழியே போய்க்கொண்டிருந்த பாலுவின் காதில் இக் கூக்குரல் விழவே, அவன் ஓடிவருகிறான்]

**பாலு:** அடே முட்டாளே, நீ அடித்த அடியில் அவள் உயிர் பறந்திருக்குமென்று சொல்.

**பூசாரி:** எஜமான், இவன்கிட்டே முகம்கொடுத்துப் பேசாதிங்க இந்தப் பய சாமியில்லே, பூதமில்லேங்கற கோஷ்டியைச் சேர்ந்தவன்.

**பாலு:** அட சும்மாயிருடா ராமதாஸா. உன் வாலே நான் இருக்கும் இடத்தில் காட்டாதே. ஒட்ட வெட்டிடுவேன்.

**பூசாரி:** எஜமான், பய பேசரதெல்லாம் கேட்டுக்குங்க.

**ரகு:** பேசுனு பேசட்டும். கொஞ்சம் பொறுமையா இருங்க இன்னும் என்னதான் சொல்றுருண்ணு கேட்போம்.

**பூசாரி:** கேட்டுக்கிட்டு நிற்க நேரமுமில்லே, நான் மடையனுமில்லே. வரும்படியைக் கொடுங்க. நான் வாசுதேவப் பிள்ளே வீட்டுக்கு வேறே போகணும்.

**பாலு:** அட பொருடா. எல்லாம் சேர்த்து சிறிது நாழியில் கூட வாங்கிக்கொண்டுபோகலாம்.

**ரகு:** ஆமாம் பூசாரி அய்யா. கொஞ்ச நேரம் இருங்க.

**பூசாரி:** கூட வரும்படி கொடுக்கிறேண்ணு எவ்வளவு நாழி வேணும்ணுலும் இருக்கேன்

**பாலு:** (ரகுவைப் பார்த்து) ஏய்யா, நீதானே இந்தப் பெண்ணின் புருஷன்.

**ரகு:** ஆம், நான்தான்.

**பாலு:** படிச்சிரிக்கியா?

ரகு: படிச்சிருக்கேன்.

பாலு: என்ன படிச்சிருக்கே?

ரகு: கம்பராமாயணம், வில்லி பாரதம், திருவிளையாடல் புராணம், அல்லி அரசாணி மாலை. பவளக்கொடிமாலை, பாகவதம், பகவத்கீதை, இன்னும் எவ்வளவோ புராணங்களெல்லாம் படிச்சிருக்கேன்.

பாலு: அதனுலெதான் ஆயிர ஆயிரமா செலவு செய்து ஒரு அணங்குக்குத் தாலி கட்டி அன்னியன் கையில் அடிபட விடுகிருய்? எய்யா, உனக்கு மூளை இருக்கா?

ரகு: கல்யாணம் பண்ணி நாலு வருஷம் ஆகியும், பிள்ளையில்லியே என்ன செய்யறது?

பாலு: அதற்கு இந்த சோம்பேறி என்ன செய்வான்.

ரகு: தோஷமிருந்தால் பரிகாரம் செய்வார். பேயிருந்தால் விரட்டி அடிப்பார். பிள்ளை பிறக்க வழி சொல்லுவார்.

பாலு: அட பைத்தியமே. நான் சொல்வதைக் கேள். உலகில் பேயுமில்லை, பிசாசுமில்லை. உன் மனைவிக்கு ஹிஸ்டீரியா என்ற வியாதி இருக்கிறது. அதனுல் தான் அவள் சுறுசுறுப்பற்று சோம்பேரிபோல் காணப்படுகிருள். அதற்கு அவளை அனுதினமும் சிறிது நேரம் இருட்டறையில் அடைத்துக்கொண்டுவந்தால் வியாதி குணமாகிவிடும். குழந்தை பிறக்காததற்குக் காரணம் அவள் கெர்ப்பப்பையில் கோளாறு இருப்பதால்தான். ஆதலால் உடனே போய் ஒரு லேடி டாக்டரிடம் சிகிச்சை செய்யச் சொல்லும், அடுத்த வருடம் கட்டாயம் பிள்ளை பிறக்கும்.

ரகு: அதையும் செய்துபார்த்துவிடுகிறேன்.

பாலு: அடே பூசாரி. உலகம் சீர் திருந்தி வருகிறது. இனிமேல் உன் தொழிலை மூட்டைகட்டி வைத்துவிட்டு

உண்மையாய் உழைத்து கிடைத்ததைக் கொண்டு சாப்பிட்டு சந்தோஷமாயிரு.

பூசாரி: அய்யோ, அக்ரமம், அநியாயம், இதைக் கேட்பார் இல்லையா?

பாலு: இந்த உலகத்திலில்லை. வேறு உலகத்திற்கு வேண்டுமானால் வழிகாட்டுகிறேன் அங்கே போய்வேண்டுமானால் முறையிடு நியாயம் கிடைக்கும்.

பூசாரி: திமிராய் பேசாதே. இன்னும் மூன்று நாளில் முனியாண்டி உன்னைக் கவனித்துக்கொள்வான்.

பாலு: போடாண்ணா.

[என்று கையை ஓங்குகிறான். பூசாரி ஓடுகிறான்.]

பாலு: அய்யா, நான் சொன்னவழியில் வெற்றி கண்ட பின்னர் எங்கள் சீர்திருத்த சங்கத்தில் சேர்ந்துகொள்ள வேண்டும்.

ரகு: சும்மா சேரமாட்டேன் நன்கொடைகொடுத்துவிட்டுச் சேர்ந்துகொள்கிறேன்.

பாலு: நல்லது நான் வருகிறேன்.

[என்று சொல்லிவிட்டுப் போகிறான்,]

## காட்சி 17.

இடம்:— குளக்கரை, காலம்:— காலை

பாத்திரங்கள்:— வேதாரண்ய சுவாமிகள், வீரம்மாள், குப்பம்மாள், கமலா.,

[குளக்கரையிலுள்ள ஒரு மரத்தடியில் சுவாமிகள் அமர்ந்திருக்கிறார். அவரின் கண்கள் மூடவும் திறக்கவுமாக இருக்கின்றன. சற்று நேரத்தில் ஒரு பெண் வருகிறாள்.]

**வேதாரண்ய சுவாமிகள்:** சம்போ...ஹம்தர... மா தேவா.

**குப்பம்மாள்:** (அருகில் சென்று) சாமி கும்பிடறங்க.

**சுவாமிகள்:** (நாலாபக்கமும் பார்த்துவிட்டு) மான் விழி மாதே, நீ மகராசியாயிரு.

[என்று திருநீற்றை எடுத்து அவள் நெற்றியில் பூசுகிறான்.]

**சுவாமிகள்:** மாதே, உன் மலருடலுக்குத் தகுந்த மணாளன் இருக்கின்றானா?

**குப்பம்மாள்:** சாமி சொல்றது ஒண்ணும் புரியலிங்களே?

**சுவாமிகள்:** ஆம். புரியாதுதான். இது யோகியர்களுக்கென்றமைந்த போக பாஷை. சதாரணமாகக் கையாளுவதால் சட்டென்று வந்துவிட்டது. இதோ உன் பாஷையிலேயே பேசுகிறேன்.

**குப்பம்மாள்:** ஆமாசாமி விஷயத்தை விபரமாச்சொல்லுங்க.

**சுவாமிகள்:** உனக்கு புருஷன், புள்ளேகள் இருக்கா?

**குப்பம்மாள்:** குட்டிச்சுவரு மாதிரி குந்திக்கிட்டு இருக்கான் புருஷன். ஆனால் கொள்ளிவைக்க ஒரு கொழந்தை கூட இல்லிங்க சாமி.

**சுவாமிகள்:** சரிதான். உன் கணவன் கையாலாகாதவன் போலிருக்கு.

**குப்பம்மாள்:** ஆமாங்க சாமி. சுத்த மக்கு மனுஷன் அவன். எங்க அத்தை மவன்னத்துனாலே என்னைக் கட்டாயமா கட்டிக்கொடுத்துட்டு ஆயும்,அப்பனும் கைலாசம் போயிட்டாங்க.

**சுவாமிகள்:** வருத்தபடாதே. உன்னைப்போன்றவர்களை ஆட்கொண்டு அபயம் அளிக்கவே இந்த வேதாரண்ய சுவாமி

ஊர் ஊராய்ச்சுற்றி வருகிறது. ஆதலால் உனது குறையை கட்டாயம் யாம் நிவர்த்தி செய்வோம். நீ போய் மாலே வா வேலே இருக்கிறது.

**குப்பம்மாள்:** சாமிக்கி சாப்பாடு?

**சுவாமிகள்:** இருந்தால்இன்பம் இல்லேயேல் இல்லேதொல்லே.

**குப்பம்மாள்:** சாமிக்கி என்ன வேணும்ணு சொல்லுங்க. கொண்டுவரக் காத்திருக்கேன்.

**சுவாமிகள்:** நான் சாப்பாடு சாப்பிடுவதில்லே.

**குப்பம்மாள்:** வேறென்ன வேணுங்க?

**சுவாமிகள்:** காய்ச்சின பசும்பால் படி ஒன்று. மலேப்பழம் பத்து. பாதாம் அல்வா பதிணைந்துபலம் இருந்தால் நல்லது.

**குப்பம்மாள்:** பாதாம் அல்வா எனக்குச் செய்யத் தெரியாதுங்களே?

**சுவாமிகள்:** காபி கிளப்பில் விற்கும். வாங்கி வாயேன்.

**குப்பம்மாள்:** சரிங்க. எல்லாத்தையும் நீங்க சொன்னபடியே வாங்கியாறேனுங்க.

**சுவாமிகள்:** ஆனந்தம். அரஹர, அரஹர, நீ போய்வரலாம்.

[குப்பம்மாள் வணங்கிப் போகிருள். சிறிது நாழி கழித்து வீரம்மாளும், கமலாவும் வருகிருர்கள்]

**சுவாமிகள்:** (இருவரையும் கண்டதும்) சம்போ.....ஹரம்தர ......மாதேவா.

**வீரம்மாள்:** அடி கமலம். நம்ம குப்பம்மாள் சொன்ன சாமி பாருடி. வாடி போய் வயத்து வலிக்கி விழுந்து கும்பிட்டு விபூதி வாங்கிகிட்டுப் போவோம்.

**கமலா:** அட வாடி. அவதான் ஒரு பெரிய பைத்தியம்ணு, நீ அதுக்குமேலே இருக்கிறியே? பிரபல வைத்தியர்களெல்

லாம் என்னென்னமோ மருந்து கொடுக்குறாங்க, அதுக்கே வலி அசையலே உனக்கு சும்மா கெடக்கர இந்த ஆண்டிப் பய சாம்பலுக்கு வலி பறந்துடுமாக்கும்?

**வீரம்மாள்:** கமலம். பெரியவங்களே அப்படி யெல்லாம் பேசாதே. அவுங்க ஆசீர்வாதம் கெடைக்கறதே அரிது. கெடைச்சுட்டா நமக்கு ஒரு கொறையுமே இருக்காது.

**கமலா:** பெரியவுங்க யார்? அசந்த ஆளே அடிச்சிக்கிட்டு போற இந்த ஆண்டிப்பயலா? பேசாமே நீ வர்ரியா இல்லே நான் போவட்டுமா?

**வீரம்மாள்:** அவசரம்னு நீ போ. நான் அனுக்ரகம் பெற்றுக் கிட்டுதான் வருவேன்.

**கமலா:** சரியான பைத்தியம்.

[என்று சொல்லிவிட்டுப் போய் தண்ணீர் எடுத்துக்கொண்டு சென்று மறைவிடத்தில் நின்று கவனிக்கிருள்]

**வீரம்மாள்:** (சுவாமிகள் அருகில் சென்று) சுவாமி, சுவாமி.

**சுவாமிகள்:** (மெதுவாக கண்விழித்துப்பார்த்து) பெண்ணே வா. இப்படி உட்கார். உன் கஷ்டத்தைச் சொல். யாம் போக்குகிறோம்.

**வீரம்மாள்:** சாமி. ரொம்ப நாளா வயிற்று வலிங்க பொறுக் கவே முடியலே.

**சுவாமிகள்:** பூ இவ்வளவுதான? கவலைப்படாதே. ப்ராசக்தி இருக்கிருள் பறக்கடித்து விடுவாள்.

**வீரம்மாள்:** எப்படியும் நீங்கதான் என் வியாதியைப் போக்கணும்.

**சுவாமிகள்:** போக்கலாம். ஆனல் அம்மையின் அருளை பெற வேண்டும்.

**வீரம்மாள்:** அதுக்கு என்னுங்க செய்யணும்?

**சுவாமிகள்:** தேவிக்கிபாதபூஜை பணத்தால்செய்யவேண்டும்.

**வீரம்மாள்:** என்ன செலவாகும்?

**சுவாமிகள்:** ரூபாய் நூறு.

**வீரம்மாள்:** கொண்டு வர்றேனுங்க.

**சுவாமிகள்:** மாலே வந்துவிடு,

[என்று சொல்லி விபூதியை எடுத்து வீரம்மாளின் நெற்றியில் "சிவோஹம், சிவோஹம்" என்று சொல்லிக்கொண்டே பூசுகிறான். அவளும் அவனை வணங்கி போகிறாள்.]

## காட்சி 18.

இடம்:—**உழவனின் குடிசை** காலம்:—**மாலே**

பாத்திரங்கள்:—**பாலு, கமலா.**

[குடிசையின் வெளிப்புரத்தில் பாலு கட்டிலில் உட்கார்ந்து பாரதிதாசன் கவிதையைப் படித்துக்கொண்டிருக்கிறான்.]

**கமலா:** அண்ணு, அண்ணு,

[என்றழைத்துக்கொண்டு குடிசையினுள்ளிருந்து ஓடி வருகிறாள்.]

**பாலு:** ஏம்மா கமலா?

**கமலா:** அண்ணு, நான் காலையிலேகண்ட ஒரு காட்சியைப் பற்றி உங்களிடம் சொல்ல மறந்துவிட்டேன்.

**பாலு:** என்னம்மா காட்சி? இப்பொழுது சொல்லேன், தெரிந்துகொள்கிறேன்.

**கமலா:** அண்ணு, நம்ம ஊர் குளத்தங்கரையிலே ஒரு சாமியார் புதிதாய்வந்து உட்கார்ந்திருக்கிறுன். அவனிடம் நம்ம கோடிவீட்டு குப்பம்மாளும் எதிர்வீட்டு வீரம்மாளும் பிள்ளை வரமும், வயற்றுவலி போக வரமும் கேட்டார்கள். அவனும் அதற்கு இசைந்து அவர்களை மாலை வரச்சொல்லி யிருக்கிறுன்.

**பாலு:** (அசட்டுச்சிரிப்பு) கமலா, எவ்வளவு பாடுபட்டும் இன்னும் அந்த அறியாமை அழியவில்லையே?

**கமலா:** சிறிது சிறிதாக சீர்திருந்திவிடும். ஆதலால் நீங்கள் செய்வதை செய்துக்கொண்டிருங்கள் அண்ணு.

**பாலு:** ஆம். அதுதான் கடமை. இதோ இப்பொழுதே போய் அவனை விரட்டும் வேலையில் ஈடுபடுகிறேன்.

[என்று எழுந்து போகிறுன்.]

## காட்சி 19.

இடம்:— குளக்கரை, காலம்:— மாலை

பாத்திரங்கள்:— வேதாரண்ய சுவாமிகள், வீரம்மாள், குப்பம்மாள், பாலு.

[சுவாமிகள் கம்பீரமாக வீற்றிருக்கிறுன். இரு பெண்களும் வருகிறுர்கள்.]

**சுவாமிகள்:** அன்னநடை அழகிகளே, வாருங்கள், வாருங்கள். இப்படி என் அருகிலே அமருங்கள்.

[இருவரும் உட்காருகிறுர்கள்]

**குப்பம்மாள்:** சாமி, இந்தாங்க நீங்க கேட்ட சாப்பாடு.

**வீரம்மாள்:** சாமி, இதோ. தேவியின் காணிக்கை.

**சுவாமிகள்:** (இரண்டையும் வாங்கிக்கொண்டு) சற்றுப் பொறுங்கள். இதை சாப்பிட்டு விடுகிறேன் (சாப்பிடுதல்) ஆஹா! என்ன ருசி, என்ன ருசி. (சாப்பிட்டு முடிந்ததும்) கண்மணிகளே, முதலில் உங்களுக்கு ஒரு கதை சொல்லி விட்டு பின்பு நடக்கவேண்டிய காரியத்தை கவனிப்போம்.

**குப்பம்மாள்:** சரிங்க சாமி.

**சுவாமிகள்:** திருதராஷ்டிரன், பாண்டு இருவரும் அரசர்கள் உடன் பிறந்த சகோதரர்கள்கூட. இவர்களில் திருதராஷ்டிரருக்கு நூறு பிள்ளைகள். பாண்டுவோ இச்சையுடன் இல்லாளிடம் சென்றால் தலை ஆயிரம் சுக்கல்களாய் வெடித்துவிடும் என்ற சாபத்தை பெற்றிருந்தார். ஆதலால் அவருக்கு குழந்தைகளே இல்லை. மனைவி குந்தியோ மிகவும் வருத்தத்துடன் கடவுளை வணங்கி வந்தாள். ஒருநாள் அவள் வீட்டைத்தேடி என்னைப்போல் ஒரு அடியார் வந்தார். அவரிடம் முறையிட்டாள். அவர் குந்திக்கு கன்னிப் பருவத்தில் துர்வாசர் உபதேசித்த ஐந்து மந்திரங்களையும் ஞாபகப்படுத்தி முறையே எமன், வாயு, இந்திரன், அக்னி தேவர்கள் இவர்களை நினைந்து மந்திரங்களை உச்சரித்தால் குழந்தைகள் பிறக்குமென்றுச் சொல்லி மறைந்தார். அவளும் அவ்விதமே செய்து ஐந்து குழந்தைகளை பெற்றெடுத்தாள். அந்த ஐவரும்தான் பாரத யுத்தத்திலே வெற்றியடைந்த வீரர்கள். மேலும் குழந்தைகள் இல்லையென்று வேறு ஒரு புருஷனை நாடுவது விபசாரமாகாது என்று இக்கதையின் மூலம் சாஸ்திரம் சொல்லுகிறதல்லவா? ஆதலால் ஆண்டவன் அடியாராகிய என்னை ஆலிங்கனம் செய்து பெற்றெடுக்கும் பிள்ளை உலகம்புகழும் உத்தமனாக இருப்பான். என்ன சொல்கிறீர்கள்.

**குப்பம்மாள்:** தங்களிஷ்டம் சாமி.

**சுவாமிகள்:** ஆஹா, இன்றுதான் என் உள்ளம் குளிர்ந்தது.

[என்று பெண்களின் அருகில் நெருங்குகிறான். மறைவில் நின்று கவனித்துக்கொண்டிருந்த பாலு சுவாமியார்மீது பாய்கிறான்.]

**பாலு::** அடே அயோக்கியப்பயலே நில். வெளியே வேஷம் உள்ளே மோசமா? இனி உன் கும்பலுக்கே நாசம் தெரிந்துக்கொள்.

[இதைக் கேட்ட சுவாமியார் தப்பியோடப்பார்க்கிறான். பாலு எட்டி அவன் கையைப்பற்றிக் கொள்கிறான்.]

**பாலு:** டேய் ஆஷாடபூதி. ஓடிவிடலாமென்று மனப்பால் குடிக்காதே. என்னை யாரென்று நினைத்தாய்? உன்னைப் போல் கடவுளின்பெயரையும், புராணங்களின் புழுகையும் போதித்துப் பலபெண்களைத் தன் காமத்திற்கு பலியாக்கிக் கொள்ளும் காவி வேஷ்டி பாவிப்பயல்களை இந்நாட்டிலிருந்து விரட்ட கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்பவர்களில் நானும் ஒருவன். இனி உங்கள் மாயாஜாலங்களெல்லாம் மறைந்துபோக வேண்டியதுதான். மரியாதையாகச் சொல்கிறேன். நீயும் உன் சகாக்களும் எங்கள் தமிழ் நாட்டை விட்டுத் தப்பி ஓடிவிடுங்கள், இல்லையேல் குழிதோண்டி விடுவோம் உங்கள் குறும்புத்தனத்திற்கு. என்ன சொல்கிறாய்?

**சுவாமிகள்:** அப்பனே, உங்களுக்கு அவ்வளவு சிரமம்— வைக்காமல் இந்த ஆண்டி வேஷத்தை அகற்றி விட்டு மற்றவர்களைப்போல் மணவாழ்க்கையில் இறங்கி உழைத்து உண்டால்......?

**பாலு:** உற்சாகத்துடன் வரவேற்போம்.

**சுவாமிகள்:** அப்படியானுல் நாங்கள் அவ்விதமே செய்கிறோம்.

**பாலு:** (சுவாமிகளின் கையை விட்டு) சரி ஓடிப்போ. தப்பி விட்டோமென்று மறுபடியும் உன் தந்திர வேலைகளை ஆரம்பித்து விடாதே. சீர்திருந்தும்வரை உங்களைச் சும்மா விடமாட்டோம். போ.

[சுவாமிகள் தப்பினேம், பிழைத்தோமென்று ஓட்டம் பிடிக்கிறுன். பெண்கள் தலைகுனிந்து நிற்கிறுர்கள்.]

**பாலு:** கற்பரசி கண்ணகியும், அறிவின் பொக்கிஷம் ஔவையும் பிறந்த இந்நாட்டிலே நீங்களும் பெண்களென பிறந்து பித்தர்களின் வார்த்தைகளால் புத்திகெட்டு அலைகிறீர்களே இது நியாயமா? நேரே வீட்டிற்குப்போய் அமைதியாய் உட்கார்ந்து ஆலோசித்துப் பாருங்கள் எது நியாயமென்று நன்கு விளங்கும், போங்கள்.

[பெண்கள் தலைகுனிந்து போகிறுர்கள். பின்னர் பாலுவும் போகிறுன்.]

## காட்சி 20.

இடம்:—**முதலியார் வீடு.** காலம்:—**மறுநாள் காலை**

பாத்திரங்கள்:—**முதலியார், ராமன், காமு, அய்யர்.**

[முதலியார் வந்து உட்காருகிறுர்.]

**முதலியார்:** டேய் ராமா.

**ராமன்:** என்னுங்க எஜமான்?

**முதலியார்:** போய் ராமாயணத்தைக் கொண்டுவாடா.

**ராமன்:** நேத்துதானுங்களே கொளுத்துனேன்.

**முதலியார்:** என்ன சொன்னே?

**ராமன்:** அம்மாதான் கொளுத்தச்சொன்னுங்க.

**முதலியார்:** அம்மாதான் இருக்காங்களே ஆட்டுக்குட்டி. டேய், நீ போய் அம்மாவை நான் வரச்சொன்னதாகச் சொல்.

**ராமன்:** சரிங்க எஜமான்.

[முதலியார் எழுந்து கோபமாக உலாவிக்கொண்டிருக் கிறார். காமு வருகிறுள்.]

**முதலியார்:** ஏன் காமு, ராமாயணத்தைக் கொளுத்தச்— சொன்னியாமே?

**காமு:** ஆமப்பா. தமிழர்களை தாழ்த்திக்கூறும் நூல் தமிழன் வீட்டில் இருக்கலாமா?

**முதலியார்:** (தலையில் அடித்துக்கொண்டு) கருமம், கருமம். இதை காசிக்கு போனுல்தான் தொலைக்க முடியும்.

**காமு:** அப்பா, இதற்காக நீங்கள் காசிக்கும் போகவேண் டாம். காஞ்சிக்கும் போகவேண்டாம். கம்பரசம் சில டோஸ் பருகுங்கள். கருமம் காற்றிலே கலந்துவிடும்.

**முதலியார்:** என்ன உளருகிறுய்?

**காமு:** ஒன்றும் உளரவில்லை. கம்பன் காவியத்திலே நிறைந் திருக்கும் காமக் கருத்தையும், கண்மூடித் தனத்தையும் கவனியுங்கள் என்றுதான் சொல்கிறேன்.

**முதலியார்:** காமு, நீ இதிகாசத்தை இகழ்கிறுய். அப்புறம் புகவான் கோபங்கொண்டாரானுல் உனக்கு நரகந்தான் கிட்டும்.

**காமு:** நரகமா? அதை நீங்கள் நம்பிக்கொண்டிருக்கிறீர் களா? அப்பா, அதெல்லாம் சுயநலவாதிகளின் பேனுவின் சிருஷ்டி.

**முதலியார்:** அத்துமீறி பேசுகிறாய்.

**காமு:** முட்டாள்தனத்தைப் போக்க முயல்வதா?

**முதலியார்:** நீ என் மகளல்ல.

**காமு:** அறிஞர்கள் அப்படித்தான் சொல்கிறார்கள்.

**முதலியார்:** சித்ரவதை செய்கிறாய்.

**காமு:** இல்லை சீர்திருத்துகிறேன்.

**முதலியார்:** கொலை செய்து விடுவேன்.

**காமு:** கோர்ட்டிலே நிற்க வேண்டும்.

**முதலியார்:** என்னிடம் பணம் இருக்கிறது, பாதகம்நேராது

**காமு:** பணத்தைக்கண்டு பல்லை இளிக்கும் காலம் பறந்து விட்டது.

**முதலியார்:** உன்னை என்னதான் செய்வது?

**காமு:** உங்களுக்கு என்னதான் தோன்றுகிறது?

**முதலியார்:** சீ, இனி என் முகத்திலேயே விழிக்காதே.

[என்று கோபத்தால்தாக்கப்பட்டு தலையை தாழ்த்திக் கொண்டு போய் உட்காருகிறார். அய்யர் வருகிறார்.]

**அய்யர்:** முதலியார்வாள். ஏன் குழந்தையின்மீது கோபம்?

**முதலியார்:** யாரது? ஓ சாமியா? வாங்க, வாங்க. நீங்களே கேளுங்க நியாயத்தை?

**அய்யர்:** விஷயமென்ன சொல்லும்?

**முதலியார்:** இவ, ராமாயணத்தைகொளுத்திவிட்டு, கேட்டா கண்ட கண்ட காரணங்களெல்லாம் சொல்றாள்.

**அய்யர்:** ஒரு ராமாயணத்தைக் கொளுத்தினதனாலே உலகத்திலுள்ள எல்லா ராமாயணத்தையும் கொளுத்தினதாக அர்த்தமோ? சரிதான் விடும். அதுக்கு ஒரு சாந்தி செய்தா சரியா போயிடுது.

**காமு:** உன்னைப்போன்ற மடையர்கள் அப்படித்தான் கருது கிறார்கள். (என்று சொல்லிவிட்டுப் போகிறாள்)

**முதலியார்:** பேச்சை பாருங்க சாமி.

**அய்யர்:** அதெல்லாம் அந்த பாலுவின் போதனை. இருக்கட்டும். அந்தக் கூட்டத்தைக் கூண்டோடு ஒழித்து விடுகிறேன்.

**முதலியார்:** எங்கே, இரண்டு நாட்களாய் உங்களை இந்தப் பக்கமே காணோம்?

**அய்யர்:** ஊரில் இருந்தால்தானே வருவேன்? உமக்காகப் பெண் பார்க்கப் போயிருந்தேன்.

**முதலியார்:** (ஆச்சரியமாய்) பெண் பார்க்கவா? கிடைத்தாளா? அழகு எப்படி?

**அய்யர்:** அதற்கென்ன குறைவு? எல்லாம் என் பொண்ணைப்போலவே இருக்கிறது.

**முதலியார்:** பேசி முடித்துவிட்டீர்களா?

**அய்யர்:** என்ன முதலியார்வாள் இப்படிக் கேட்கிறீர்? இந்த அண்ணாசாமி போயுமா காரியம் முடியாமலிருக்கும்.

**முதலியார்:** நான் பெண்ணைப் பார்க்க வேண்டாமா?

**அய்யர்:** நாம் போவதா? வேண்டுமானால் நாளைக்கிபெண்ணை இங்கு அழைத்து வர்றேன்.

**முதலியார்:** அப்படியே செய்யுங்கள்.

**அய்யர்:** இதற்குப் பரிசம் பத்தாயிரம் ரூபாய்கள் தர வேண்டுமே?

**முதலியார்:** இதோ (செக் எழுதி) இந்தாருங்கள் செக்

**அய்யர்:** (செக்கை வாங்கிக்கொண்டு) பெண்ணோடு இங்கு வந்து சேருகிறேன். [என்று போகிறார்.]

# காட்சி 21.

இடம்:—தாஸி வீடு காலம்:—காலை

பாத்திரங்கள்:—அய்யர், அபாரம்.

[தாசி அபாரம் தன்னுடைய அதிர்ஷ்டத்தை நினைந்து பாடிக்கொண்டே அலங்கரித்து கொள்கிறாள். அய்யர் வருகிறார்.]

**அய்யர்:** என்ன அபாரம், வீடு ஒரே அமர்க்களமாயிருக்கே?

**அபாரம்:** எல்லாம் உங்களுக்காகத்தான்.

**அய்யர்:** அப்படிச் சொல்லு.

(என்று கட்டிலில்போய் உட்காருகிறார்)

**அய்யர்:** உன் வீட்டுக்கு வரணும்ணு நேக்கு ரொம்பநாளா ஆசைதான். ஒய்வு கெடைக்கலே. இன்னிக்கித்தான் கெடைச்சுது. இப்படியே வந்தேன்.

**அபாரம்:** உயர்ந்த ஜாதியிலே பிறந்த உங்களுக்குத் தேவடியாள் வீட்டுக்குவர பிரியம் இருக்காதே?

**அய்யர்:** நன்னா சொன்னே! நீங்கள் தேவர் அடியார்கள். நாங்கள் தேவர் பிரதிநிதிகள். மேலும் உங்கள் சேவையை பகவான் நேரேவந்து ஏற்றுக்கொள்ள முடியாது. ஆதலால் ஆண்டவன் பிரதிநிதிகளாகிய எங்களுக்குத்தான் உங்கள் சேவையை ஏற்றுக்கொள்ள உரிமையுண்டு நீங்களும் சேவை செய்யவேண்டும். அது உங்கள் கடமை

**அபாரம்:** பகவான்கள் கோபம்கொண்டால்?

**அய்யர்:** எந்த பகவான்கள் யோக்கியர்களாய் இருக்கிறார்கள் என்மீது கோபம் கொள்ள?

**அபாரம்:** அப்படிண்ணு எல்லோரும் அயோக்கியர்கள்— என்கிறீர்களா ?

**அய்யர்:** ஆமாம். தேவராஜன் இந்திரன் இருக்கானே, அவனுக்கு இந்திராணி என்ற மனைவி உண்டு. அவளைவிட்டுட்டு பல் பொண்களை விரட்டிண்டு திரிஞ்சானும் தெரியுமா ?

**அபாரம்:** அதுக்கு ஏற்ற தண்டனைகளைப் பெற்றார் என்று கதைகள் கூறுகின்றனவே ?

**அய்யர்:** எல்லாம் மக்களை ஏமாற்ற எழுதப்பட்ட கதைகள்

**அபாரம்:** சரிதான்.

**அய்யர்:** அபாரம், பரந்தாமன் இருக்கானே, அவன்மட்டும் யோக்கியனா என்ன ? பச்சைக்கிளிகள்போல் பாமா, ருக்மணி என்ற இல்லாள்கள் இருக்க அவன் கோபிகா ஸ்திரீகளுடன் குழலூதி கூத்தாடினானும்.

**அபாரம்:** மனதில் மையலின்றி புரிந்த மாயலீலைகளாமே ?

**அய்யர்:** ஆமாம். செய்த குற்றத்தை மறைக்கக் கூறும் வழிகள்.

**அபாரம்:** அதை கண்டு பிடிக்கவில்லை மக்களின் விழிகள்.

**அய்யர்:** அபாரம், இன்னும் கேள். பார்வதியென்ற பாரியாள் இருக்க பரமசிவன் கங்கையென்றொரு கள்ள ஸ்திரீயை முடியில் தாங்கி மூன்று லோகமும் சுற்றி வந்தானும். பூலோகத்தைக் காப்பாற்றுகிறேனென்று

**அபாரம்:** சரியான காமாந்தகாரன் போலிருக்கு.

**அய்யர்:** சந்தேகம் இல்லை. மனைவிகளுடன் இருக்கிற அவர்களே ஆபாசமான காரியங்களைச் செய்திருக்கிறார்களென்றால் மனைவியில்லாத நான் ஏன் செய்யக்கூடாதண்ணே ?

**அபாரம்:** நல்லா செய்யுங்க. எனக்கு வேண்டியது காசு.

**அய்யர்:** கவலையே படாதே. வேண்டியது தர்றேன். நேரம் ஆகுது. உம், சீக்கிரம் கொடு கன்னத்திலே.

[என்று அய்யர் கேட்டதும் அபாரம் அவர் அருகில் அமர்ந்து முத்தங்கொடுக்கப் போகிறாள்.]

## காட்சி 22.

**இடம்:—முதலியார் வீடு** காலம்:—**மாலை**

பாத்திரங்கள்:—**பாலு, முதலியார், விறகு வெட்டி.**

[வீட்டின் வாயிற்படியில் விறகு வெட்டி நிற்கிறான் முதலியார் வீட்டினுள்ளிருந்து வெளியே வருகிறார்.]

**முதலியார்:** டேய் இந்தா கூலிப்பணம்.

**விறகு வெட்டி:** (பணத்தை வாங்கிப்பார்த்து) ரெண்டு ரூபா தானுங்களே இருக்கு.

**முதலியார்:** நீ செய்த வேலைக்கி இது போதும் போடா.

**விறகு வெட்டி:** எஜமானே, ஆறுநாளா பொழுதெல்லாம் ஓயாமெ வேலே செஞ்சிருக்கேன். அதனாலே பேசுனபடியே நாலு ரூபா கொடுத்தூடுங்க.

**முதலியார்:** எல்லாம் இன்னொரு சமயம் வாங்கிக்கொள்ளலாம் போ.

**விறகு வெட்டி:** இன்னொரு சமயம் சாப்புட்டுக்கலாம் பேசாமெ இருண்ணு என் வயிறு கேட்கமாட்டேங்குதுங்களே ?

**முதலியார்:** என்னடா கதை சொல்றே ? ஒரு நாளைக்கி சாப்புடலேண்ணா உயிரா போயிடும் ?

**விறகு வெட்டி:** அப்படி நீங்க நினைக்கிறீங்களா ?

**முதலியார்:** நான் எதுக்கடா நினைக்கனும்? இல்லாதவன் தானே சோறு இல்லையென்று பல்லை இளிக்கணும்.

**விறகு வெட்டி:** மாட்டான். உண்மையாய் உழைக்கிறவன் பிச்சை போடுங்களென்று பிறரை ஒருநாளும் கேட்கவே மாட்டான்.

**முதலியார்:** உண்மை உழைப்பாளிகள் இந்த உலகத்திலே ஏது?

**விறகு வெட்டி:** உங்களைப்போல ஒழுங்கா ஊதியம் தாராத முதலாளிகள் இருக்கும்போது உண்மைஉழைப்பாளிகளின் உயிர்களுக்கு இந்த உலகத்திலே வேலை ஏது?

**முதலியார்:** கேலி பேசுகிறாயா காலி?

**விறகு வெட்டி:** காலி.........செய்த வேலைக்கிக் கூலி கேட்பவஞ காலி?

**முதலியார்:** உன் வாய் மதம் வரையற்று வார்த்தைகளை வீசுகிறது.

**விறகு வெட்டி:** எனக்கா வாய்மதம்?

**முதலியார்:** (அசட்டுச் சிரிப்பு) சற்று பொறு. முடிவு தெரியும்.

[என்று கோபமாக உள்ளேசென்று சவுக்கை எடுத்து வருகிறார்.]

**முதலியார்:** அடே அற்பனே. கேள், தலை நிமிர்ந்து கேள். இந்த சவுக்கின் நுனி அதற்கு முடிவு கூறும்.

**விறகு வெட்டி:** அதற்கு நியாயம் வழங்க போதிய ஞானம் இல்லிங்களே?

**முதலியார்:** இல்லையா?

விறகு வெட்டி: ஆம். இது அனியாயத்தின் அவதாரம். அதிகார வர்க்கத்தின் ஆயுதம் ஒருதலைப்பட்சமாய்த் தீர்ப்பு கூறியே பழக்கம்.

முதலியார்: சீ, அதிகம் பேசாதே. உடல் புண்ணுகி விடும், போ.

விறகு வெட்டி: என் கூலியைக் கொடுங்க. கும்பிடு போட்டு கிட்டு போகிறேன்.

முதலியார்: (சிரிப்பு) கூலி இந்தா.

[என்று சவுக்கால் அடிக்கிருர்]

விறகுவெட்டி: ஐயோ, அக்ரமம், ஆணவம். இதைக்கேட்பாரில்லையா? ஐயோ, ஐயோ.

[என்று கதறுகிருன். அவ்வழியே வந்துகொண்டிருந்த பாலு இக்காட்சியைக்கண்டு அருகில் ஓடுகிருன்]

பாலு: அடிக்காதே, நிறுத்து.

முதலியார்: (அசட்டு சிரிப்பு) நீ யாரடா, என்னைத்தடுக்க ?

பாலு: நான் முதலாளிகளின் மூர்க்கத்தனத்திற்கு முற்றுப் புள்ளி வைக்க முயலுபவன்.

முதலியார்: முட்டாள். உன்னுல் முடியுமா முதலாளிகளை எதிர்க்க ?

பாலு: முடியாதென்பது எங்களுக்கில்லை. இது எமது முதல்வர் பெரியாரின் முத்துமொழி.

முதலியார்: பெரியார். அவன் யாரடா சிறியார் ?

பாலு: உம்மைப்போல் சுயநலம், சுரண்டல், ஏகாதிபத்யம் என்ற தீக்குணங்களைக் கைக்கொண்டுள்ள எத்தர்களின் இடையே அவர் சிறியார். தொல்லை நேரினும் துணிந்து

உழைக்கும் தொழிலாளர்க் கூட்டத்திடையே அவர் பெரியார். இந்நாட்டின் அவையில் அவர் புரட்சிவீரர், புத்துலக சிற்பி என்று புகழப்படுகிருர் எங்கள் தலைவர் ஈ வெ. ரா.

**முதலியார்:** வெண்தாடி வைத்திருக்கும் அந்த வீண்பேச்சுக் காரனையா சொல்கிருய்? அவனையும், உன்னையும் இந்த உலகத்திலிருந்தே பிரித்து விட்டால்?

**பாலு:** என்ன நடக்கும் தெரியுமா?

**முதலியார்:** என்னடா நடக்கும்?

**பாலு:** உங்கள் பிணம் தரையிலே கிடக்கும்.

**முதலியார்:** இந்த தடித்தனத்தை செய்ய தைரியக்காரர்கள் தரணியிலே இருக்கிருர்களா?

**பாலு:** இருக்கிருர்கள். உங்களால் உயிருடன் வாட்டி வாட்டி வதைக்கப்பட்ட உழவர்கள், தொழிற்சாலையிலே சலியாது சம்மட்டிப்பிடித்து வேலைசெய்யும் சமதர்ம வீரர்கள், மதவெறி கொண்ட மடையர்களால் தாழ்த்தப்பட்டோர்என்று அலட்சியப்படுத்தப்படும் ஆதித்திராவிடர்கள். இன்னும் அவர் உழைப்பை உணர்ந்த பல்லோர் வீறிட்டு எழுவார்கள். அவர்களின் ஆயுதங்கள் அணுக்குண்டுகளாக மாறும் உங்கள் வர்க்கத்தை அழிக்க என்பதைத் தெரிந்து கொள்ளும்.

**முதலியார்:** புரட்சியை எழுப்புவார்களா போக்கிரிகள்? அதை இப்பொழுதே பார்த்து விடுகிறேன்.

[என்று சவுக்கை விசிறிக்கொண்டு அடிக்க முன் வருகிருர்.]

**பாலு:** (சவுக்கைப் பிடுங்கிக்கொண்டு) இப்பொழுது என்ன சொல்கிறீர்?

முதலியார்: டேய் கோவிந், ஹரி, மணி, ராமா எல்லோரும் ஓடி வாங்கடா. (ஒருவரும் வராதது கண்டு) எங்கே தொலைந்து போய்விட்டான்கள்? கூலிக்கு மாரடிப்பவர்கள்

பாலு: அப்பேர்பட்டவர்களுக்குதானே நீ ஆதரவளிப்பாய்?

முதலியார்: அதிகப்பிரசங்கி. கையிலே சவுக்கு கிடைத்து விட்டதென்று சமர்த்தியமாய் பேசாதே உங்கள் இருவரையும் சாகடிக்க என் கைத்துப்பாக்கித் துடிக்கிறது.

பாலு: சுடுவது தானே?

முதலியார்: அது என் இரும்புப்பெட்டியிலே......

பாலு: பதுங்கியிருக்கிறதா? போய் எடுத்துவாரும்.

முதலியார்: புத்திசாலிகள்.

[என்று சொல்லிவிட்டு உள்ளே போக ஒய்யாரமாகத் திரும்புகிறார் முதலியார். பாலு அடிக்கிறான்.]

முதலியார்: ஐயோ, அடிக்கிறாயே?

பாலு: இதுதான் புத்திசாலிகளின் வேலைகள். அடிக்கி அடி பழிக்கிப் பழி. வாங்கிக்கொள்ளும்.

[என்று அடிக்கிறான். முதலியார் அடியைத் தாங்க முடியாமல் கீழே விழுகிறார்.]

பாலு: நண்பா, வா போகலாம்.

[விறகு வெட்டியை அழைத்துக்கொண்டு போகிறான்]

★

# காட்சி 23.

இடம்:—தோட்டம் காலம்:—மாலை

பாத்திரங்கள்:—பாலு, காமு

[காமு வருத்தமாக ஒரு பெஞ்சின்மீது அமர்ந்திருக்கிறாள். பாலு வருகிறான்.]

**பாலு:** (காமுவின் அருகில் வந்து) காமு, காமு. (பேசாதது கண்டு, அருகில் அமர்ந்து) காமு, கவலையைப்போக்க கணக்கற்ற மலர் மங்கைகள் மோஹனப்புன்னகை பொழிந்து நிற்கும் இந்த இடத்தில், உள்ளத்திலே இருக்கும் உன்னத காதலைக் கிளறிவிட்டுக் காதல் கீதம் பாடத் தூண்டும் தென்றற்காற்று வீசும் இச்சமயத்தில் உன் உடலில்மட்டும் துக்கம் எப்படிப் புகுந்துக்கொண்டது? சொல், பேச மாட்டாயா?

**காமு:** ஆஹா! கொஞ்ச வந்து விட்டீர்களா? இரண்டு மூன்று நாட்களாய் எங்கே போயிருந்தீர்கள்?

**பாலு:** ஓஹோ? நான் இங்கு வரவில்லை யென்பதற்காகத் தான் இவ்வளவு கோபமாக பேசாமலிருந்தாயோ? காமு, நான் வரமுடியாததற்கு காரணங்கள் இருக்கின்றன.

**காமு:** அப்படியென்ன முக்கியமான காரணங்களோ தெரியவில்லையே?

**பாலு:** சொல்கிறேன் கேள். ஆண்டவன் பெயரைச்சொல்லி அடாத காரியங்களைச் செய்துவரும் ஆண்டி ஒருவனைச் சீர்திருத்தினேன், அடுத்தபடியாக அறியாமை இருளில் சிக்கித்தவித்த ஒருவரை பகுத்தறிவாளராக்கினேன்.

**காமு:** போதும், நிறுத்துங்கள் உங்கள் வீரப் பிரதாபத்தை.

**பாலு:** ஏன் காமு, நான் செய்ததில் ஏதாவது தவறு இருக்கிறதா?

**காமு:** இல்லை. நீங்கள் சீர்திருத்தத்தை எங்கள் வீட்டில் புகுத்தவில்லையென்பதற்காகத்தான் நிறுத்துங்களென்றேன்

**பாலு:** நினைக்காதே அப்படி. சமயம் பார்த்துக்கொண்டிருந்தேன் இன்று கிடைத்தது.

**காமு:** என்ன செய்தீர்கள்?

**பாலு:** இந்த தோட்டத்திற்கு வந்துகொண்டிருக்கும்போது உன் தந்தை ஒரு விறகு வெட்டியிடம் வேலையை வாங்கிக் கொண்டு பேசினபடி கூலியை கொடுக்காமல் வாதாடி அவனைச் சவுக்கால் அடித்ததைப்பார்த்தேன். நான் ஓடி தடுக்க முயன்றேன். என்மீதும் பாய்ந்தார். விடுவேனா நான்? அவர் கையிலிருந்த சவுக்கைப் பிடுங்கிக்கொண்டு சரியாக அடித்துத்தள்ளிவிட்டு விறகு வெட்டியை அழைத்து வந்து பாக்கிக்கூலி இரண்டு ரூபாயையும் கொடுத்து அனுப்பி விட்டு இங்கு வந்தேன்.

**காமு:** இதற்கெல்லாம் அவர் அசையமாட்டார்?

**பாலு:** அப்படியா?

**காமு:** ஆமாம். என் கண்ணீரைக்கண்டும் கவனியாதவர் போல் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறாராம் அவர்.

**பாலு:** வாலிபம் திரும்பிவிட்டதா?

**காமு:** தங்கமாத்திரைகள் சாப்பிடுகிறார்.

**பாலு:** தாது புஷ்டிக்கா? பைத்தியக்கார மனுஷன்.

**காமு:** போலி விளம்பரத்தை நம்பும் ஏமாளி.

**பாலு:** கோமாளி ஒருவன் கூட இருக்கிறனல்லவா?

**காமு:** அவர்கள் நாசமாய்ப் போகட்டும். நாம் எத்தனை நாட்களுக்குத்தான் இப்படி இருப்பது?

**பாலு:** எப்படி இருக்கவேண்டும்?

**காமு:** கல்யாணம் செய்துகொள்ளவேண்டும்.

**பாலு:** கழுத்திலே தாலி கட்டினல்தான் கல்யாணமா? கல்யாணம் செய்துகொண்டு, பிறகு நடுத்தெருவிலே விட்டுவிடவில்லையா வீணர்கள் பலர். பதட்டங்கொள்ளாதே. எண்ணிப்பார் நம்மைச் சுற்றியுள்ள விரோதிகளை.

**காமு:** சரிதான். காலத்தை நோக்கிக் காத்திருப்போம். நீங்கள் வாருங்கள் கோவிலுக்கு.

**பாலு:** எதற்காக?

**காமு:** உங்களை நான் அடைந்தது அம்பிகையைப் பலநாள் தொழுததின் காரணத்தால்தான். ஆதலால் இன்று நாம் இருவரும் சேர்ந்து சென்று அவளை தெரிசிக்கவேண்டும்.

**பாலு:** நீ புத்திசாலித்தனமாக நடந்துகொண்டதற்கு அவள் பொறுப்பா? என்னமோ, இதில் எனக்கு நம்பிக்கையில்லை

**காமு:** நம்புங்கள் என்னை. நடவுங்கள் தடை சொல்லாமல்.

**பாலு:** இதற்கு விடை சொல்ல ஆரம்பித்தால் உன் விழிகளிலே நீர் ததும்பும் வா, போகலாம்.

[இருவரும் போகிறார்கள்]

★

# காட்சி 24.

இடம்:—**அம்பாள் சந்நிதி** காலம்:—**இருட்டும் சமயம்**

பாத்திரங்கள்:— **குருக்கள், அபாரம், பாலு, காமு.**

[அபாரம் பிணங்கிக்கொண்டு நிற்கிருள். குருக்கள் அருகில் போய் சமாதானப்படுத்துகிருன்.]

**குருக்கள்:** அபாரம். வைரமாலே வாங்கித்தாலேண்ணு இப்படி கோவிச்சுக்கறே? நான்தான் என் ஆம்படையாள் தாலி முதல் சொத்தெல்லாம் நோக்குத்தான்னு பலதடவை சொல்லி இருக்கேனே? இன்னுமா சந்தேகம் தெளியலே? அப்படிண்ணு சொல்லு. இன்னிக்கே எல்லாத்தையும் உன் பேருக்க்கே எழுதி வச்சூடுறேன்.

**அபாரம்:** உண்மையாகவா?

**குருக்கள்:** சத்தியமாக. எடு பேப்பரையும், பேனவையும்.

**அபாரம்:** ஆஹா! நீங்கதான் என் ஆசை ராஜா.

**குருக்கள்:** அப்படிண்ணு ஒ்ண்ணு கொடு.

**அபாரம்:** ஒண்ணு என்ன? ஓராயிரம் தரேன்.

**குருக்கள்:** அடேயப்பா. ஒரு கன்னந்தாங்காது. இதுலே பாதி, இதுலே பாதி கொடு.

**அபாரம்:** ஆகட்டும்.

**குருக்கள்:** அங்கே வா போகலாம்.

**அபாரம்:** தேவி கிட்டயா?

**குருக்கள்:** அவ கண்ணைத்தொறந்துகிட்டா பார்க்கப்போரு? சும்மா, பயப்படாமெ வா.

[என்று தாவலியின் கையைப்பிடித்து இழுத்துப்போகிறான். இருவரும் அம்பாளின் முன்னிலையில் உட்காருகிறார்கள்.]

**குருக்கள்:** கன்னங் துடிக்குது. நடக்கட்டும்.

[தாவலி முத்தங்கொடுக்கப்போகிறாள். பானுவும் காமுவும் வந்து விடுகிறார்கள்.]

**பானு:** ஏ காமாந்தகார நாய்களே. அம்பாள் சந்நிதியை அந்தப்புறமாக்கிக் கொண்டீர்களா அறிவிலிகளே? நீதான் அவள் அர்ச்சகனா? உன் அக்ரமங்களைப்பார்த்துக்கொண்டு அசையாமலிருக்கும் அவள்தான் அகில லோகத்தையும் ஆதரிக்கும் அநாதரக்ஷகியா? இங்குதான் பக்தி வெள்ளம் பெருகுகிறதா? இங்குதான் முக்திக்கு அனுமதிச்சீட்டு அளிக்கப்படுகிறதா? முட்டாள்களே. சொல்லுங்கள்,—சொல்லுங்கள். ஏன் மரம்போல் நிற்கிறீர்கள்? உழைப்பாளிகள் பலர் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி குந்த நிழலின்றிக் கூவிச்சாகையிலே உங்கள் கற்பனையில் உருவான கருங்கல் கடவுள்களுக்கு கணக்கற்ற விழாக்கள். கோடிக்கணக்கிலே மான்யங்கள். வெளவால்கள் வாழ வனப்புள்ள மண்டபங்கள். இந்த பொதுச்சொத்தை உரிமை பாராட்டி உட்கார்ந்துக்கொண்டு சாமி, பூதமென ஊரை ஏய்த்து உடலை வளர்க்க ஒரு கூட்டம். இந்த புரட்டைமெய்யென நம்ப பல பொய்ப்புராணங்கள். அதை அறியாமல் பலர் கண்மூடித்தனமாய் கணக்கற்ற காசுகளைக் காணிக்கைகளாகக் கொண்டு வந்து கொட்டுகிறார்களே! ஐயோ, என்று இந்த அறியாமை அழியுமோ? இன்றே அழியும். நடப்பது மக்களாட்சி. இனி உங்கள் மந்திர தந்திர வேலைகளெல்லாம் மறையவேண்டியதுதான்.

(கோரச் சிரிப்பு) மடப்பள்ளியில் வேலை செய்யும் உனக்கு மகிழம்பூ அத்தர். தூ. பிச்சை எடுக்கும் கைகளுக்கு இச்சை கொடுக்கும் இரத்தின மோதிரங்கள். கடவுள் பெயரால் கொள்ளையடித்த காசுக்கு கழுத்திலே தங்க உத்திராக்ஷ மாலை. கழட்டிவை கீழே.

[அய்யர் பயந்து கொண்டு நகைகளையெல்லாம் கீழே கழட்டி வைக்கிறான்.]

**பாலு**: அடே, ஆலயங்களை எப்படி நிர்வாகம் செய்யவேண்டுமென்று எங்களுக்குத் தெரியும். போ, வெளியே.

[அய்யர் ஓட்டம் பிடிக்கிறான் அதைக்கண்டு பாலு சிரிக்கிறான். அய்யரின் உருவம் மறைந்ததும் தாஸியிடம் பேசுகிறான்.]

**பாலு**: சகோதரி, ஏன் உனக்கு இந்த ஈனத்தொழில்?

**அபாரம்**: நான் தாஸி.

**பாலு**: அப்படியென்று ஒரு குலத்தை அந்த ஆண்டவன் படைக்கவில்லை

**அபாரம்**: படைக்கவில்லையா?

**பாலு**: ஆம். இந்த குலம், கோத்திரம், உயர்வு, தாழ்வு என்பனவெல்லாம் பாதியிலே இந்நாட்டில் புகுந்த பஞ்சதாரிகளின் பகற்கொள்ளை ஏடுகளால் எழுந்தவைகள்.

**அபாரம்**: இருக்கலாம். ஆனால்.........

**பாலு**: ஆனால் என்ன?

**அபாரம்**: நாங்கள் வாழவேண்டாமா?

**பாலு**: வேண்டும். அதற்காக கற்பை விற்பதா?

**அபாரம்**: வேறு வழி?

**பாலு:** மடமையிலிருந்து நீ விழி. மன்னுதி மன்னர்கள் பலர் மணிமேகலையின் மலருடலைத் தழுவ மண்டியிட்டுக் கெஞ்சியபொழுது முடியாதென்று வெறுத்து விரட்டிய அவள் வாழவில்லையா ? உலகம்புகழும் உத்தமியாக வாழ்ந் தாள். நன்ருக சிந்தித்துப் பாருங்கள். உங்களை ஆஸ்தியால் அதிகாரத்தால், சமூகத்தால், அடிமைகளாக்க முடியாது. நீங்களும் மற்றவர்களைப்போல் மனதுக்குப் பிடித்தவனை மணந்து வாழலாம். வாழவேண்டுமென்றுதான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதைத்தான் இன்றைய அறிஞர் கள் அறிவுறுத்துகிருர்கள். அது அவசியம் அமுலுக்கு வரும். அதற்கு முன்பே நீங்கள் சீர்திருந்தி விடுங்கள்.

**அபாரம்:** அண்ணு, அண்ணு, என் கண்கள் திறந்துவிட்டன. இனி நான் மணஞ்செய்து கொள்வது மட்டுமல்ல, மற்ற என் மக்களை நன்மார்க்கத்தில் திருப்ப நாளும் பாடுபடுபவ ளாகவும் ஆவேன்.

**பாலு:** அதுதான் நல்லது இந்தா, இதை உன் திருமணச் செலவுக்கு வைத்துக்கொள்.

[என்று அய்யரின் நகைகளைக் கொடுக்கிருன் ]

**அபாரம்:** கோயில் சொத்தாயிற்றே ?

**பாலு:** இல்லை. கொள்ளையடித்த சொத்து.

**அபாரம்:** கொள்ளையடித்ததா, இல்லையே ?

**பாலு:** ஆம். இதை உருவாக்கிய உழைப்பாளிகள் பலர் உணவின்றி ஊரிலே சாகையில் தேரிலே வருவான் தெட் சுஷிணுமூர்த்தி தெரிசிப்போம் வாருங்களென்று குடும்பத் தைக் கூட்டிக்கொண்டு பலர் தேடிவந்துகொடுத்த சொத்து. அதை ஆண்டவனிடம் சேர்க்காமல் தன் சொகுசுக்காகச்

செலவழித்துக்கொள்வது சுரண்டலில்லையா? அதற்குக் கொள்ளையென்ற மாறுபெயரில்லையா?

**அபாரம்:** உண்டு. இப்பொழுதுதான் உணர்ந்தேன் உண்மையை.

**பாலு:** இந்தா, இப்பொருளை விற்பதால் கிடைக்கும் பணத்திற்கு உன் திருமணத்தின்போது ஏழைகளுக்கு ஆடையும் அன்னமும் வழங்கு.

[என்று நகைகளைக் கொடுக்கிறான்.]

**அபாரம்:** (நகைகளை வாங்கிக்கொண்டு) தங்கள் விருப்பப்படியே செய்கிறேன். (என்று போகிறாள்)

**பாலு:** காமு, இப்பொழுதாவது கோவில் திருவிளையாடல்களை தெரிந்துகொண்டாயா?

**காமு:** தெரிந்து கொண்டேன். வாருங்கள் வெளியே போகலாம்.

[இருவரும் போகிறார்கள்]

## காட்சி 25.

இடம்:—**முதலியார் வீடு** காலம்:—**இரவு**

பாத்திரங்கள்:— **அய்யர், முதலியார், கோமு, முத்து.**

[முதலியார் உலாவிக்கொண்டே யிருக்கிறார். அய்யர் பெண்ணுடன் வருகிறார்.]

**அய்யர்:** முதலியார்வாள், இதுதான் பொண். கவனித்துக் கொள்ளும். நான் போய் வர்ரேன்.

[என்று சொல்லிவிட்டு அய்யர் போய் விடுகிறார். கோமு வெட்கத்தால் முதலியாரின் முகத்தைப்பார்க்

காமல் நின்று கொண்டிருக்கிறாள். முதலியார் ஒய்யார நடை நடந்து கோமுவின் அருகில் போகிறார்.]

**முதலியார்:** பெண்ணே கூச்சப்படாதே. உன் பெயரென்ன சொல்.

[என்று கோமுவின் புஜங்களைத் தொடுகிறார். அவள் முதலியாரின் பிடியை உதறித் தள்ளிவிட்டு சற்று விலகிப்போய் நின்று கொள்கிறாள்.]

**முதலியார்:** புதுப்பொண்ணு முறுக்கு பண்ணுது, இருக்க வேண்டியதுதானே. (என்று மறுபடியும் கோமுவிடம் சென்று) பெண்ணே, என் முகத்தைப் பார்க்கப் பிடிக்கவில்லையா? இதோ, என் மீசையைப்பார் எலுமிச்சைப் பழம் நிற்கும். என் முடுக்கு நடையைப்பார் உன் முகம் மலரும். என் அடுக்கு மொழிகளைக்கேள் உனக்கு ஆசை பிறக்கும். எங்கே, உன் பெயரைச்சொல்லு, பிரியமாய் பேசு.

[என்றுமறுபடியும் கோமுவின்புஜங்களை பற்றுகிறார்]

**கோமு:** சீ, கிழக் காமக் குரங்கே.

[என்று அவர் பிடியிலிருந்து தப்பி விலகிப்போய் நின்று கொள்கிறாள்.]

**முதலியார்:** ஆஹா! அவள் கோபிக்கும்பொழுதே எனக்குக் குதூகலம் உண்டாகிறது. இன்னும் கொஞ்ச ஆரம்பித்து விட்டால் இக்குவலய நினைப்பே எனக்கு அற்று விடும். பார்ப்போம் முயற்சி செய்து. (என்று அவள் அருகில் சென்று) பெண்ணே, மோகத்தை எழுப்பும் என் கண்ணே உன் அன்னநடையிலே அழகைக்காண்கிறேன் நீ சொன்ன மொழியிலே குயிலின் குரலைக் கேட்கிறேன். எங்கே உன்

பவளவாய் திறந்து முத்துப் பற்களால் ஒரு மோஹனப் புன்னகை செய்.

[இவ்வார்த்தையைக் கேட்ட கோமு எட்டிப்போய் நின்று கொள்கிருள்.]

**முதலியார்:** (பின்தொடர்ந்து சென்று) ஏ, பச்சைக்கிளியே என் இச்சைதீர ஒரு கொஞ்சும்மொழி வீசு.

**கோமு:** காசு இருக்கிறது என்ற கர்வத்தினுல் பேத்தி போன்றவர்களே பெண்டாக்கிகொள்ள நினைக்கிருய் பித்தா?

**முதலியார்:** ஆத்தா, மூடுவாயை. அனுப்பினேன் பத்தாயிரம் உனக்கு, செய்யாதே என்னிடம் பிணக்கு.

**கோமு:** எனக்கு வந்து சேரவில்லை. போய் கேள் கொடுத்தவரிடம்.

**முதலியார்.** ஆ! என்னசொன்னுய்? காசைவாங்கிக்கொண்டு சாகசம் செய்கிருயா தாஸிபோல்?

**கோமு:** தன்மானமற்ற தடியனே, யாரைப்பார்த்துச் சொல்கிருய் தாசியென்று?

**முதலியார்:** உன்னைத்தாண்டி.

**கோமு:** என்னையா? ஏ பயனற்ற சக்கை, எண்ணிப்பார் உன் போக்கை.

**முதலியார்:** அடக்கடி உன் நாக்கை. சுடுசொல் வீசுவதால் தணியாது என் வேட்கை.

**கோமு:** பெண்ணென்ருல் பேயுமிறங்கும்.

**முதலியார்:** வேதாந்தம் பேசாதே வேசி. தாசி சில மணி நேரங்களுக்கு இன்பமளிக்க இன்னது வேண்டுமென்று கேட்டு வாங்கிக்கொள்கிருள். நீயோ வாழ்நாள் முழுதும்

இன்பந்தர என்னிடம் ரொக்கம் பெற்றிருக்கிறாய் மொத்தமாய்.

**கோமு:** சாமர்த்தியமாய் பேசிவிட்டோமென்ற நினைப்போ?

**முதலியார்:** சாகசக்காரி, சல்லாபத்திற்கென்ன சொல்கிறாய் இப்போது?

**கோமு:** அப்போதே சொன்னேனே அறிவு வரவில்லே.

**முதலியார்:** வம்புக்காரி. வார்த்தைகளை வளர்க்காதே.

**கோமு:** நீ என் பிணத்தைக்கூட நுகர முடியாது.

**முதலியார்:** பார்க்கலாம் அதை.

[என்று முதலியார் பலவந்தம் செய்ய முயல்கிறார்.]

**கோமு:** (அவர் கைகளுக்கு சிக்காமல்) ஐயோ, ஐயோ என்னைக் காப்பாற்றுவாரில்லையா — காப்பாற்றுவாரில்லையா?

[கதறுகிறாள்.]

**முத்து:** (வந்துகொண்டே) அப்பா, என்னகாரியம் செய்யத் துணிந்தீர்கள்?

**முதலியார்:** டேய் முத்து, இதில் ஈடுபடாதே. இது என் சொந்த விஷயம்?

**முத்து:** (அசட்டுச்சிரிப்பு) சொந்த விஷயம். பிரியமில்லாப் பெண்ணை பிடித்திழுப்பது சொந்த விஷயம் வயது வந்த மகனை வைத்துக்கொண்டு வனிதை ஒருவளை வம்பு செய்து காமக்கூத்தாட நினைப்பது சொந்த விஷயம். மலரைக் கசக்கி முகர முயல்வது சொந்த விஷயம். தமிழ்நாட்டிலே வளர்ந்து, தமிழ்நாட்டு நாகரீகத்தையே நசுக்க முயல்வது சொந்த விஷயம். அப்பா, உங்களுக்குப்பயித்தியமில்லையே?

**முதலியார்:** பாவி. பெற்ற அப்பனுக்கே பெருந் துரோகம் செய்கிறாய்.

**முத்து:** கடமைக்குப் பொருள் துரோகம் என்று காட்டும் அந்த அதிசய அகராதியை எங்கேயப்பா வாங்கினீர்கள்?

**முதலியார்:** அனுபவமென்னும் கடையில்.

**முத்து:** இருக்காது. தன்னலமென்னும் குப்பை மேட்டில் பொறுக்கியிருப்பீர்கள். அதை அறிவென்னும் தீப்பொறிகளால் பொசுக்கி விடுங்கள். (கோமுவிடம் வந்து) பெண்ணே, நீ,வருந்தாமல் போ.

**கோமு:** ஆபத்தில் செய்த உதவியை ஆயுள் உள்ளவரை மறக்கமாட்டேன். வருகிறேன்.

[என்று வணங்கி போகிறாள். முத்துவும் போக எத்தனிக்கிறான்.]

**முதலியார்:** டேய் முத்து, இன்றோடு நீ என் மகனென்பதை மறந்தேன்.

**முத்து:** அதை உலகம் ஒப்புக்கொள்ளாது.

[என்று சொல்லிவிட்டு முத்துபோகிறான். முதலியார் அவன் சென்ற திக்கை விழி வாங்காமல் பார்த்து நிற்கிறார்.]

## காட்சி 26.

இடம்:—அண்ணுசாமி அய்யர் வீடு காலம்:—இரவு

பாத்திரங்கள்:—அய்யர், ஆதித்திராவிடப்பெண், கோமு.

**அய்யர்:** (ஆதித்திராவிடப்பெண் மறைவான இடத்திலிருந்து வெளிவராதது கண்டு) வாடி............அட சும்மா வாடி நான் எழுந்திருந்தாதான் வருவியாக்கும் (என்று சொல்லி எழுந்து) இந்த பாழாய்ப்போன வெட்கம்ணு ஒண்ணு

பெண்கள் கூட்டத்தின் கூடுகளுக்குள்ளே புகுந்துகொண்டு அவர்களை நாசமாக்குது. (சொல்லிவிட்டு மறைவிடத்திற்கு போகிறார்) எல்லாத்துக்கும் நான் இருக்கேன். பயப்படாமெ வாடி.

[என்று சொல்லி அவள் கையைப்பிடித்து இழுத்து வருகிறார்.]

**ஆதித்திராவிடப் பெண்:** ஐயய்யோ.

**அய்யர்:** ஏண்டி சத்தம் போடுறே?

**பெண்:** நான் தீண்டப்படாத சாதியாச்சுங்களே. இதை உங்க ஜனங்கள் யாராவது பாத்துட்டா என்ன ஆவறது?

**அய்யர்:** ஒண்ணும் ஆகாது. பங்கம் இல்லாத அங்கம் இருந்தா தங்கம்னு தாவப்பாப்பாங்க அவுங்களும். வா போகலாம் கட்டிலுக்கு

[என்றுசொல்லி அவளை அழைத்துப்போய் கட்டிலில் உட்கார வைத்து விட்டு அவரும் அருகில் உட்காருகிறார். கோமு வந்து விடுகிறாள்.]

**கோமு:** (அக்காட்சியைக்கண்டு) அப்பா.

[அய்யர் மகளைப் பார்க்கிறார். ஆதித்திராவிடப் பெண் எழுந்து ஓட்டம் பிடிக்கிறாள்.]

**அய்யர்:** (கோபத்தோடு) கோமு, நீ இங்கே ஏன் வந்தாய்?

**கோமு:** உங்கள் அட்டகாசங்களை அம்பலப்படுத்த.

**அய்யர்:** ஆணவம் அளவுக்கு மீறுகிறது.

**கோமு:** இனி உங்களுக்கு அவமானந்தான்.

**அய்யர்:** உதவாக்கரை, உளராதே, என் கோபத்தைக் கிளராதே.

**கோமு:** படிப்பது இராமாயணம், இடிப்பது பெருமாள் கோவில் என்ற கொள்கையைத் தாங்கள் மறந்துவிடுங்கள்.

**அய்யர்:** உபதேசம் செய்கிருயா?

**கோமு:** உண்மையைச் சொல்ல விரும்புகிறேன்.

**அய்யர்:** உனக்கென்னடி தெரியும்?

**கோமு:** வேதங்கள், புராணங்கள், வெறும் காகிதக்குப்பைகள். மக்களின் முன்னேற்றத்தை தடுக்கும்முட்டுக்கட்டைகள் என்று எனக்குத் தெரிந்துவிட்டது.

**அய்யர்:** உனக்குத் தெரிந்தால் பலன்?

**கோமு:** உண்டு. பாலைவன மலர், சேற்றிலே முளைத்த செந்தாமரை, முள்ளில் ரோஜா, சிப்பியில் உதித்த முத்து, நாகம் கொடுத்த மாணிக்கம் என்றெல்லாம் என்னைத் தமிழர்கள் புகழ்வார்கள்.

**அய்யர்:** கனவு காண்கிருயா?

**கோமு:** இல்லை. தமிழர்களின் நினைவைச் சொல்லுகிறேன்.

**அய்யர்:** நல்ல பாம்புகளுடன் நட்பு வேண்டாம்.

**கோமு:** விரோதிகளின் பொருளின்மீது வெறுப்பு கொள்வதுதானே?

**அய்யர்:** வெட்டிக் கேள்வி. ஆரியத்தின் வேருக்கு வெந்நீர் பாய்ச்சுவான்களாம்.

**கோமு:** சந்தேகம் வேண்டாம். வீரன் சிவாஜியின் வெற்றிக் கொடியைத் தாழ்த்தியது யார்? அழியாப் புகழ் பெற்ற அலெக்ஸாண்டரின் ஆவியை அழித்தது யார்? சேர நாட்டின் பெருமையை சிதைத்தது யார்? தஞ்சையை ஆண்ட தமிழரசர்களைத் தவிக்கவிட்டது யார்? மண்டலம் புகழ்ந்த

மகாத்மா காந்தியை மடித்தது யார்? என்று தெரிந்து விட்ட பிறகு ஆரியப் பூண்டிலே தணலைக் கொட்டாமல் தண்ணீரையாப் பாய்ச்சுவார்கள்?

**அய்யர்:** குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பே.

**கோமு:** நலத்தைத் தேடிக்கொடுக்க முயல்பவளுக்கு இந்த பட்டமா? சரி.

**அய்யர்:** நாயே.

**கோமு:** நன்றியில் நாய்தான் நான். அப்பா, பஞ்சத்துக்கு பயந்து தஞ்சம் என்று ஓடிவந்த நம்மை அன்புடன் அழைத்து ஆதரித்து அன்னமிட்ட தமிழகத்தைக் கன்ன மிட்டுவரும் உங்களை மிருகவர்க்கத்திலும் சேர்க்கமுடியாம லிருக்கிறதே என்று வருந்துகிறேன்.

**அய்யர்:** கோமு, நீ இப்படியெல்லாம்பேசுவதை நம்மவர்கள் கேட்டுவிட்டால் உன்னை ஜாதிப்பிரஷ்டம் செய்து விடுவார்கள்.

**கோமு:** பீதி அடையமாட்டேன்.

**அய்யர்:** நீ நாதியற்றவளாகி விடுவாய்.

**கோமு:** புத்தியிருந்தால் பிழைத்துக்கொள்ளலாம்.

**அய்யர்:** முடியாது. எத்திவாழ்பவர்களுக்கே இந்நாடு இடம் தரும்.

**கோமு:** வரட்டு ஜம்பம் வேண்டாம். வாள் வருகிறது வஞ்சகச் செயல்களுக்கு. வாது பேசாமல் வந்து விடுங்கள் நேர்மையான வழிக்கு.

**அய்யர்:** கூரிய வாள் குயுக்தியுடன் போட்டியிட முடியாது.

**கோமு:** என்று குதூகலமடையாதீர். நீங்கள் குயுக்தியால் சாதிக்கப் போவதென்ன?

**அய்யர்:** வாள்வரும் பின்னே, ஓட்டம் பிடிப்போம்முன்னே.

**கோமு:** சபாஷ். அப்படிச் செய்தால் நீங்கள் உயிர் தப்பலாம். புறமுதுகு காட்டி ஓடுவோரை தமிழ் மரபினர் ஒன்றும் செய்வதில்லை.

**அய்யர்:** (அசட்டுச்சிரிப்பு) கோமு, ஆரியத்திலே அவதரித்த உனக்கு மட்டும் தமிழகம் இடந்தருமா?

**கோமு:** தயங்காமல் தரும். சூது, சுயநலம், சுரண்டல் என்ற தீக்குணங்களை கைவிட்டால் கண்யமாய் வாழலாம் எவரும் தமிழ் நாட்டில்.

**அய்யர்:** கோமு, நீ நினைப்பது எதுவும் நடக்காது.

**கோமு:** என்ற இறுமாப்பு வேண்டாம். இன உணர்ச்சி எழுந்து விட்டது. இனி நடக்கப்போவதை நான் குறிப்பிட்டுக்கூற முடியாது. இது ஞாபகமிருக்கட்டும்.

[என்று சொல்லிவிட்டு கோமு போய் விடுகிறாள்' அதை அய்யர் அலட்சியமாய் நினைத்துக்கொண்டு போகிறார்.]

## காட்சி 27.

இடம்:—**முதலியார் வீடு.** காலம்:—**காலை**

பாத்திரங்கள்:—**காமு, முத்து, முதலியார்.**

[முத்து, கையில் ஒரு பத்திரிகையுடன் "காமு, காமு' என்றழைத்துக்கொண்டே வருகிறான்.]

**காமு:** (ஓடிவந்து) ஏனண்ணா?

**முத்து:** காமு, நான் B. A. பரீட்சையில் தேர்ச்சி பெற்று விட்டேன். இதோ, இந்தப் பத்திரிகையில் என் பரீட்சை நம்பரைப்பார். (என்று பத்திரிகையைக் கொடுக்கிறான்)

**காமு:** (பத்திரிகையைப் பார்த்து விட்டு) 3333 ஆ, முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்கிருயே ?

**முத்து:** ஆமாம் காமு. இனி சிறிதும்தாமதியாமல் கல்யாண ஏற்பாடுகளை செய்யச் சொல்லவேண்டும்.

**காமு:** கமலாதானே பொண்ணு ?

**முத்து:** அதிலே வேறே சந்தேகமா ? அவளேதான்.

**காமு:** அப்பா அனுமதி தருவாரோ ?

**முத்து:** கேட்டுப்பார்ப்போம்

[இச்சமயத்தில் முதலியார் வருகிருர்]

**காமு:** அதோ, அப்பாவும் வந்துவிட்டார்.

[என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிருள்]

**முத்து:** (முதலியார் அருகில் சென்று) அப்பா, நான் B. A. பாஸ் செய்து விட்டேன்.

**முதலியார்:** சந்தோஷம்.

**முத்து:** சந்தோஷ சமயத்திலே ஒரு சங்கதியைச் சொல்ல விரும்புகிறேன்.

**முதலியார்.** என்ன அது ?

**முத்து:** கல்யாணம் செய்துகொள்ள வேண்டும்.

**முதலியார்:** நான்தானே ? ஆகட்டும், செய்து கொள்கிறேன் கூடிய சீக்கிரம்.

**முத்து:** உங்களைப்பற்றிக் கேட்கவில்லை. நான் மணஞ்செய்து கொள்ளவேண்டும்.

**முதலியார்:** அதுக்குள்ளே என்னடா அவசரம்? பொண்ணு எந்த மூலை முடுக்கிலே கிடக்குதோ, போய் தேடிப்பிடிக்க

வேண்டாமா? அப்படி தேடிப்பிடித்தாலும் என்மனசுக்கு பிடித்தமா இருக்கவேண்டாமா?

**முத்து:** உங்களுக்கு அந்த சிரமமே இல்லாமல் செய்து விட்டேன்.

**முதலியார்:** பெண்ணை நீயே தேடிக்கொண்டாயா?

**முத்து:** படித்தவனுக்கு அழகு அதுதானே?

**முதலியார்:** அவ யாருடா உன் மனதைக் கவர்ந்தவள்?

**முத்து:** கமலா.

**முதலியார்:** யார், கமலாவா? நம்ம வீட்டில் இருந்த வேலைக்காரியா?

**முத்து:** ஆம். அந்த கண்ணுக்கலங்காரிதான். கனவான்கள் வீட்டில் வாழ்க்கைப்படத் தகுதியுள்ளவள்தான்.

**முதலியார்:** தடிப்பயலே, போயும் போயும் அந்த பிச்சைக் காரியின்மீதா பிரியங்கொண்டாய்?

**முத்து:** அப்பா, பிச்சைக்காரியும் பெண்தானே? அந்த பிர்மாதானே அவளையும் படைத்தார்.

**முதலியார்:** ஆமாம். அதற்காக ஜாதியிலே தாழ்ந்தவளை செல்வத்திலே குறைந்தவளைக் கல்யாணம் செய்து கொள் வதா?

**முத்து:** அப்பா, இன்பமான வாழ்க்கையைநடத்த ஜாதியும் பொருளும் அவசியமா? நன்முக ஆலோசித்துப்பாருங்கள்.

**முதலியார்:** காலிப்பயலே, கற்றவித்தையை என்னிடமே காட்டுகிருயா?

**முத்து:** அப்பா.

**முதலியார்:** அடிவயிற்றில் நெருப்பைக்கொட்டாதே. போ என் உயிர் இருக்கும்வரை உன் எண்ணப்படி ஒன்றும் நடவாது.

[என்று கோபமாகப் போகிறார். முத்து துக்கத்தால் தாக்கப்பட்டு நிற்கிறான்]

## காட்சி 28.

இடம்:—**அய்யர் வீடு** காலம்:—**காலை**

பாத்திரங்கள்:—**அய்யர், இன்ஸ்பெக்டர் நாணு, கோமு.**

[அய்யரும், இன்ஸ்பெக்டரும் உட்கார்ந்திருக்கிறார்கள்]

**கோமு:** என் உயிர் இருக்கும்வரை உங்கள் எண்ணப்படி ஒன்றும் நடவாது.

[என்று கோபமாகப் போய்விடுகிறாள்]

**அய்யர்:** ஏய் நாணு, அவ பேச்சை நீ பொருட்படுத்தாதே. இந்தா முன்னூறு ரூபாயுக்குச் செக். வைத்துக்கொள். எப்படியும் கோமுவை உனக்கேக் கல்யாணம் செய்து வைக்கிறேன். கவலைப்படாமெ போய்வா.

**நாணு:** (எழுந்து) உங்களை நம்பிதான் இருக்கேன்.

**அய்யர்:** நானும் உன்னை நம்பிதான் இருக்கேன்.

**நாணு:** மோசம் செய்யமாட்டேன்.

**அய்யர்:** என்னையும் அப்படியே நெனைச்சிக்கோ.

**நாணு:** அப்பொ, நான் போய்வரட்டுமா?

**அய்யர்:** சரி, போய் வா.

[நாணு போகிறான்]

# காட்சி 29.

இடம்:—தோட்டம் காலம்:—மாலை

பாத்திரங்கள்:—காமு, பாலு, முதலியார், இன்ஸ்பெக்டர், அய்யர், போலீஸ்

[காமு ஒரு மேடைமீது வருத்தமாக உட்கார்ந்திருக்கிருள். துப்பாக்கி வெடிக்கிறது. பாலு, பாலு என்று சொல்லிக்கொண்டே காமு தரையில் சாய்கிருள். அவள் மார்பிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடுகிறது. சிறிது நாழி கழிந்தது பாலு வருகிருன். பிணக் கோலத்தைக் காண்கிருன். கதறுகிருன்.]

பாலு: ஆ! மார்பிலே இரத்தம் கொலை, கொலை. என் உயிர் காதலி தற்கொலை செய்து கொண்டாள். இருக்கவே இருக்காது. அவள் மங்கைகளுள் மாணிக்கம். சமூகத்தின் தூற்றலுக்கும், பெற்ருேரின் பிடிவாதத்திற்கும் பயப்படாதவள். எதிர்த்து நின்று போராடுபவள். வஞ்சகன் எவனே செய்த சூழ்ச்சியால் என் காதலி வெட்டுண்ட மரம்போல் வீழ்ந்து கிடக்கிருள். பஞ்சணையிலே புரண்ட பசும்பொன் மேனியாள் பாழுந்தரையிலே பிணமாகிக் கிடக்கிருள் நான்தான் இனம் பிரிந்த மானைப்போல் ஏங்கித் தவிக்கப் போகிறேன். ஐயய்யோ, காமு, காமு, உன்னைக் கலப்பு. மணம் செய்து கொண்டு உலகிலே பாட்டாளியும், பணக்காரனும் ஜாதிபேதமின்றி, மதபேதமின்றி, உயர்வு, தாழ்வு என்ற பேதமின்றி எல்லோரும் சமதர்மமாய் வாழலாம் என்பதை நிரூபிக்க நினைத்தேன். மேலும் விதவைகளுக்கு இன்ப உணர்ச்சியுண்டு, அவர்களும் இன்பமான இல்லறத்தை நடத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டி, சமூ

கத்தின் கொட்டத்தை அடக்கியோட்டி, உலகின் சீர்திருத்தத்திற்கு ஒரு உதாரண ஜோடியாய் இருந்து உன்னதமான வாழ்க்கையை நடத்தலாமென்று அளவிலா ஆனந்தங் கொண்டிருந்தேன். ஆனால் கடைசியில் என்னைக் கதிகலங்கும்படி செய்துவிட்டு கண்களைமூடிக்கொண்டாய். இடித்து விட்டாய் என் மனக்கோட்டையை. மடித்து விட்டாய் என் கொள்கையை. காமு, காமு, உன் கொஞ்சும்மொழிகளைக்கேட்டு நான் குதூகலிப்பது எந்நாள்? உன் பொன் மேனியைப் பார்த்து நான் பூரிப்பது எந்நாள்? ஒருநாளும் இல்லை. இனி என் வாழ்க்கையிலும் ருசியில்லை. காமு, காமு...

[என்று பிணத்தின்மீது விழுந்து அழுகிறான். சப்-இன்ஸ்பெக்டர், போலீஸ், அய்யர், முதலியார் எல்லோரும் வருகிறார்கள்.]

இன்ஸ்பெக்டர்: டேய் பாலு, பாசாங்கு செய்யாதே. எழுந்திரு.

[இன்ஸ்பெக்டரின் குரலைக்கேட்டு பாலு எழுந்து அனைவரையும் பார்க்கிறான். பிரமித்து நிற்கிறான்.]

அய்யர்: கொலைகாரப்பயலே.

பாலு: ஐயய்யோ. எனக்கா இந்தப்பட்டம்? கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தை உடையவன் என்று காமுவினால் காதலிக்கப்பட்ட எனக்கா இந்தப்பட்டம்? காமுவைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்று கருதி வந்த எனக்கா இந்தப் பட்டம்? ஐயா, இன்ஸ்பெக்டர் ஐயா, இவர்கள் என்மீது வீண்பழியைச்சுமத்துகிறார்கள்: நீங்கள் அதை நம்பாதீர்கள். அறிவை காசுக்கு அடகு வைக்கா

தீர்கள். பதவியை பாழ்செய்து கொள்ளாதீர்கள். உண்மையைக்கூறுகிறேன் கேளுங்கள். நியாயப்படி நடவுங்கள்.

**இன்ஸ்பெக்டர்:** எதுடா உண்மை?

**பாலு:** நான் வழக்கம்போல் காமுவைச் சந்திக்க தோட்டத்திற்கு வந்தேன். என்றுமில்லாதபடி, காமு, இன்று தரையிலே படுத்துக்கிடக்கிறாளே, காரணம்என்னவோ தெரிந்து கொள்ளலாமென்று அருகிலே சென்றேன். மார்பிலே இரத்தம் ஆறுகப் பெருகுவதைக் கண்டேன். எனக்கு கை கால் ஓடவில்லை. அருகிலே உட்கார்ந்து அழைத்தேன். பேசவில்லை. மூச்சும் விடவில்லை. இதைக்கண்டு எனக்கு துக்கம் அதிகரித்தது. அவள்மேல் விழுந்து அழுதேன். நீங்களும் வந்தீர்கள். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். நான் நிரபராதி என்பது உண்மை.

**முதலியார்:** இன்ஸ்பெக்டர் சார். இவன் நல்லவனைப்போல் நடித்து நம்மை ஏமாற்றப் பார்க்கிறான். ஸ்டேஷனுக்கு இழுத்துப்போய் கொடுப்பதைக் கொடுத்தால் தானே விஷயத்தைக் கக்குகிறான்.

**அய்யர்:** ஆமாப்பா நாணு. முதலியார் சொல்றபடி செய்.

**இன்ஸபெக்டர்:** ஏய் 144. இவனை ஸ்டேஷனுக்கு இழுத்துப் போ. 209, நீ பிணத்தை பரிசோதனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்.

[என்று இன்ஸ்பெக்டர் சொல்லிவிட்டு அய்யர், முதலியாருடன் நடக்கிறான் அவ்விடத்தை விட்டு. பாலு கையில் விலங்கை மாட்டி இழுத்துச் செல்கிறான் போலீஸ்.]

★

## காட்சி 30.

இடம்:—முதலியார் வீடு காலம்:—காலை

பாத்திரங்கள்:— முதலியார், முத்து, இன்ஸ்பெக்டர், போலீஸ்

**முதலியார்:** (உலாவிக்கொண்டே) என் குலப்பெருமையைக் குலைக்க முயன்ற குட்டியும், மட்டியும் ஒழிந்தார்கள். வாயாடி முத்து ஒருவன் இருக்கிறனு? அவனை வீட்டிலிருந்து விரட்டி விடுவேன் என மிரட்டினுல் அடங்கி விடுவான், பின்பு நான் இட்டதே சட்டம். நான் நடத்துவதே நியாயம். என் வாழ்வும் புத்துயிர் பெற்று விளங்கும்.

[என்று சொல்லி சிரிக்கிறுர். துப்பாக்கிவெடிக்கிறது]

**முதலியார்:** ஆ, ஆ (மார்பிலே கையை வைத்துக்கொண்டு) ஏ பாழுந்தெய்வமே, நான் ஒன்று நினைக்க, நீயொன்று நினைத்து விட்டாய். என் ஆசையிலே மண்ணைக் கொட்டி விட்டாய்.

[என்று சொல்லிக்கொண்டே தரையில் சாய்கிறுர். சிலமணி நேரங்கழித்து வெளியூர்சென்றிருந்த முத்து வருகிறுன். தந்தையின் நிலையைப்பார்க்கிறுன். துக்கத்தால்தாக்கப்பட்டு துடித்துவிழுகிறுன். அழுகிறுன்]

**முத்து:** ஆ! இரத்தம், இரத்தம். என் தந்தை தற்கொலை செய்துகொண்டாரா? அல்லது தறுதலை எவனுவது செய்த சூழ்ச்சியா? அப்பா, அப்பா, உலகம் தெரியாத உதவாக்கரைகளிடம் தெர்ப்பைப் புல்லைக்காட்டி சுட்டு எறிந்துவிடுவேனென்று சுகம் அனுபவிக்கும் சோம்பேரிகளுடன் நட்பு கொள்ளாதீர்கள் என்று நவின்றதைக் குற்றமாக எடுத்துக் கொண்டீர்களா? அல்லது ஆண், பெண் என்ற பிரிவைத் தவிர வேறில்லை ஜாதியில் என்ற உண்மையைக் கைக் கொண்டு வீரவாழ்வு வாழ்ந்து வந்த நம் முன்னேர்களின்

பண்பை வளர்க்க வேண்டுமென்பதற்காக கலப்பு மணம் செய்து கொள்ள அனுமதி தரும்படியாக தங்களிடம் வாதாடினேனே அதைக் குற்றமாக எடுத்துக்கொண்டீர் களா? அல்லது பணபலமிருக்கிறதென்று பல அக்ரமங் களைச் செய்தால் ஆணவத்தை அழித்துவிடுவார்கள் அறி வாளிகள் என்று நாட்டின் நடப்பை நான் உங்களுக்கு எடுத்துக்கூறினதைக் குற்றமாக எடுத்துக் கொண்டீர்களா? எதைக் குற்றமாக எடுத்துக்கொண்டு கோபங் கொண்டு கொலை செய்துக்கொண்டீர்கள்? அப்பா, அப்பா, (அழு கிருன். சற்று நேரங்கழித்து) என் தந்தையின் மரணத் திற்கு காரணம் நான் இல்லை. மடமை அவரை மடித்து விட்டது. நண்பனின் கொடுமை அவரைக் கொன்றுவிட் டது. ஆம், ஆம். அதுதான் உண்மை. இதோ இப்பொ ழுதே போய் என் உப்பைத்தின்று கொழுத்து விட்டு எனக்கே தீங்கு செய்த தடியனை திண்டாட வைக்கிறேன்.

[என்று சொல்லிவிட்டு எழுந்துபோகப் போகிருன். இன்ஸ்பெக்டர் அவனைத் தடுத்து நிறுத்துகிருர்.]

இன்ஸ்பெக்டர்: டேய் நில்லுடா. கொலை செய்து விட்டு எங்கே தப்பியோடப்பார்க்கிருய்?

முத்து: ஐயய்யோ. இதென்னய்யா அநியாயம்? நான் நான்கு நாட்களாய் ஊரில் இல்லை சார். இப்பொழுதுதான் வந்தேன். வீட்டில் நுழைந்ததும் இந்த பரிதாபமான காட் சியைக்கண்டேன். என்னை நம்புங்கள் சார்.

இன்ஸ்பெக்டர்: அதிகம் பேசாதே. டேய் 144 அழைத்து வா இவனை.

[போலீஸ், முத்துவுக்கு விலங்கிட்டு அழைத்துப் போகிருன்.]

# காட்சி 31.

இடம்:—**கோர்ட்** காலம்:—**காலை**

பாத்திரங்கள்:—**பாலு, முத்து, ஜட்ஜ், அய்யர், இன்ஸ்பெக்டர், போலீஸ், ஜூரிகள், கமலா, சோமு.**

**கிருஷ்ணசாமி அய்யர்:** (எழுந்து) கனம் கோர்ட்டார் அவர்களே! இதோ, இங்கு குற்றவாளிகளாக நிற்கும் முத்து, பாலு இவர்கள்மீது தொடரப்பட்டிருக்கும் வழக்கு மிகவும் சிக்கலானது.

**பாலு:** இதை நான் மறுக்கிறேன். கனம் கோர்ட்டார் அவர்களே! நீங்கள் நீதியின் உருவம். ஆண்டியையும், அரசனையும் ஏக காலத்தில் கூண்டிலேற்றி விசாரணை செய்து நேர்மையான தீர்ப்பு அளிக்கும் அதிகாரம் படைத்தவர்கள். குறிப்பாக நம் நாட்டில் சில கூட்டம் அர்த்தமில்லாமல் கூச்சல் போடுகிறது. காலத்திற்கேற்ற கருத்துகளை எடுத்துரைப்பவர்களை, உடல் ஓடாக இளைத்தாலும் ஓயாது உழைக்கும் பாட்டாளிகளை, செல்வச்செருக்கால், வஞ்சக செயலால், வாயில் வந்தபடியெல்லாம் பேசி அவர்களை தூசியென்று கருதி, தூய்மை உள்ளங்களை உடையவர்களை துரோகிகள் என்று துர்பிரசாரம் செய்வதல்லாது அபாண்டமான பழியைச்சுமத்தி அழித்துவிட வேண்டுமென்று கோர்ட்டுக்கு அழைக்கிறது அந்தகூட்டம். இதைக்காணும் பழமைப்போதையில் இருக்கும் நடுத்தர மக்கள் அவர்களைத் தவறுதலாக குற்றவாளிகளெனக் கருதுகிறார்கள். அப்படிக் கருதுபவர்களின் போதையைப்போக்கவேண்டியவர்கள் நீங்கள். அவ்விதமிருக்க, வாங்கின காசுக்காக பொய்யை மெய்யென்றும், மெய்யை பொய்யென்றும்

வாதாடும் சில வக்கீல்களுள் ஒருவரான இவர் தங்களின் தீர்ப்பு தெரியுமுன்னரே எங்கள் இருவரையும் குற்றவாளிகளென எப்படித் தீர்மானித்துக் கூறலாம் என்பதை மறுபடியும் மறுப்பதுடன் மானநஷ்டம் உண்டாகிறதென்றும் தங்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**வக்கீல்:** அப்படியானல் உங்களை என்னவென்றுசொல்வது?

**பாலு:** குற்றவாளிகளென நினைக்கப் படுபவர்களென்று— சொல்லியிருக்கவேண்டும்.

**நீதிபதி:** பாலு சொல்வதுதான் சரி.

**வக்கீல்:** அப்படியானல் தவறுதலுக்கு மன்னிக்கவும். கனம் கோர்ட்டார் அவர்களே! நம் நாட்டில் பெண்கள் ஒரு முறை கல்யாணம் செய்துகொண்டு கணவன்களை இழந்துவிட்டால் மறுபடியும் அவர்கள் கல்யாணம் செய்துகொள்ளவோ, இன்பமான வழிகளில் செல்லவோ கூடாது. நம் இந்துமத தர்மப்படி அவர்கள் அலங்காரத்தை அகற்றி அழகைக் குறைத்துக்கொண்டு மொட்டையடித்து முக்காடிட்டுக்கொள்ளவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் அவர்கள் வெளியில் சென்று வாலிபர்களின் விழிகளுக்கு விருந்தளிக்கக் கூடாது. உடலைக்கொழுக்க வைக்கும் உணவுப்பொருள்களை உண்ணக்கூடாது. உடல் நோகாமலிருக்க உள்ளம் உவகையில் ஆழ்ந்திருக்க, பழைய நாட்களில் பதியுடன் கொஞ்சிக் குலாவியது கண்முன் காட்சியளிக்க பருவ கால உணர்ச்சியை அதிகப்படுத்திக்கொண்டிருக்க பஞ்சணையில் படுத்துறங்காமல் பாழும் தரையில் பழுதடைந்த பாயில் பகவானை நினைந்தவாறே படுத்துருண்டு நாள்டைவில் இன்பஉணர்ச்சியே இல்லாதுசெய்துகொள்ளவேண்டும். அப்படிச் செய்தால் அடையலாம் மோக்ஷம்.

அல்லது அடுத்த பிறவியிலாவது இந்தத் துன்பம் தொலைய லாம்.. அவ்விதம் நமதுகோட்பாடுகள் இருக்க திடீரென்று முளைத்த பகுத்தறிவாளர்கள் அறிவுக்கு வேலை தருகிறோமென்று எதற்கெடுத்தாலும் மறுப்பு கூறி சீர்திருத்தம் வேண்டுமென்று வாதாடி விதவைகளுக்குக் கல்யாணம் செய்துவைக்கவேண்டும். வாடிக்கிடக்கும் அவர்கள் வாழ்க்கையை வளமுள்ளதாக்கவேண்டும் என பிரசாரம் செய்து சில கைம்பெண்களை அற்ப போக வாழ்க்கையில் தள்ளினார்கள். பலரைத் தள்ளப்பார்க்கிறார்கள். அதனால் அந்தப் பேதைப்பெண்களுக்கு போறிஞர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் தேடிக்கொடுப்பது நரகம். நாசமாக்கப்படுகிறது நம் சாஸ்திர சம்பிரதாயம். மோசமான வழிகளில் மக்கள் செலுத்தப்படுகிறார்கள், புதுமையைப் பரப்பும் பகுத்தறிவாளர்களால். அவர்களுள் ஒருவர்தான் பாலு. இவர் திவான்பதூர் வீரநாத முதலியாரின் சூது வாதறியா இளம் விதவை மகளைச்சந்தித்து ஏதேதோ பேசி, மனதில் மையலை எழுப்பி, மறைவாக காமக்கூத்தாடி வந்தனர் சில நாள். பின்பு ஏதோ மனக்கசப்பு இருவரிடையே ஏற்பட்டதால், முதலியாரின் மகள் காமுவை, பாலு கொன்றுவிட்டார். அந்த இடத்திலேயே பிடிபட்டார். இதுதான் இவர்மீது சாட்டப்படும் முக்கியமான முதல் குற்றம். இரண்டாவதாக என்னவென்றால், பகவான்கள் பல அவதாரங்கள் எடுத்து திருவிளையாடல்கள் புரிந்த நம் திவ்ய நாட்டிலே, கலியுகம் உதித்ததும் கடவுள்கள் நம்மீது கருத்தைச்செலுத்தவில்லை காரணம்?. நம்முள் சிலர் புதுமை போதையிலே ஆழ்ந்து ஆண்டவர்களைத் தடித்தாண்டவராயர்கள் என்றும் தன்மானமற்றவர்கள் என்றும் ஏசி வருகிறார்கள். மகத்தான ஆபத்து உண்டாகும் என்பதை

மறந்து. அவ்வித ஆபத்து அணுகி சிலர் செய்த பிழைக ளுக்காக பலர் பலியாக்கப்படாமலிருக்க, பகவான்கள்மேல் உள்ள பக்தியை மறந்து இருப்பவர்களுக்கு மறுபடியும் ஞாபகமூட்டவேண்டி, குறைந்திருப்பவர்களுக்கு நிறைந்து இருக்கும்படிச் செய்யவேண்டி பாடுபடும் மதத்தை வளர்க் கும் மகான்களே, ஆண்டவர்களுக்கு அர்ச்சனை செய்யும் அந்தணர்களை மனம் நோகப்பேசி, அடித்து அவர்களின் ஸ்தானத்திலிருந்து விரட்டியதும் குற்றமாகக் கருதப்படு கிறது பொதுமக்களால். மூன்றாவதாக சுமத்தப்படும் குற் றம் யாதெனில், ஆண்டவன் அளித்த அதிர்ஷ்டத்தினால் ஆஸ்தியைச் சேர்த்த முதலாளிகளை ஏழைகளின் வயிற்றில் அடித்து, அடித்து பணத்தை மூட்டைக்கட்டிசேர்த்தீர்கள். உங்கள் வர்க்கத்தையே ஒழிக்கவேண்டும் என்று பலரைத் தூண்டினார், தூஷித்தார், அதற்கான ஆக்க வேலைகளை செய்தார். ஆதலால் இவரைத் தண்டிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறார்கள் முதலாளிகள். அடுத்தப்படியாக அவர் அருகில் நிற்கும் முத்து B. A. வரை படித்தவர். திவான்பகதூர் வீரநாத முதலியாரின் ஒரேமைந்தர். அவர் தன் ஆஸ்தியையும், அந்தஸ்தையும் இந்துமதக்கோட்பாட் டையும், வேதங்களின் போதனைகளையும் மறந்து தாழ்ந்த ஜாதியில் உதித்த ஒரு பெண்ணை, அதுவும் தன் வீட்டி லேயே வேலை செய்து கொண்டிருந்தவளை காதலித்து விட் டாராம். போகட்டும். காளைப்பருவம், காமவிகாரம், கண் தெரியவில்லை. நடந்தது நடந்துவிட்டது. அதற்கு என்ன செய்வது? நம்பினவளை மோசம் செய்யக்கூடாது. வாஸ் தவம். அதற்கு என்ன செய்யவேண்டும்? அவள் ஜீவ னத்தை நடத்த ஏதாவது ஒரு தொகையைக் கொடுத்து அவளை விலக்கிவிடவேண்டும். அதை விட்டு மண்குடிசை

யிலே வாழ்பவளை மாடிவீட்டுக்கு அழைத்துவந்து பவளத்துக்கு வழியில்லாதவளுக்கு பவுன் நகைகளைப் பூட்டிவிட்டு கந்தையைக் கட்டுபவளுக்கு கராய்ச்சிப்பட்டு புடவையைக் கட்டிவிட்டுக் கல்யாணம் செய்து கொண்டு கனவான்கள் கூட்டத்தோடு ஒட்டிவாழ வேண்டுமென்றால் முடியுமா? காரித்துப்புவார்கள். கண்டதெல்லாம் பேசுவார்கள் காலமெல்லாம் அவர்கள் என்று முத்துவின் தகப்பனுர் எவ்வளவோ எடுத்துச்சொன்னாராம் பையன் கேட்கவில்லையாம் உன்னால் நம் குலத்துக்கே அவமானம் இந்த லோகத்தில். அந்த லோகத்தில் மீழ முடியாத நரகம்தான்கிட்டும் என்று கதறினாராம். பையன் நாஸ்திகம் பேசினாராம். நான் இருக்கும்வரை நீ ஒன்றும் செய்ய முடியாதென்று கடிந்துக் கொண்டாராம் தந்தை. கடைசியில் அப்பாவைத்தொலைத்தால்தான் நம் எண்ணம் நிறைவேறும் என்று பெற்ற தகப்பனையே கொன்றுவிட்டார் இந்த முத்து. இப்படிப் பட்டத் தவறுதலானக் காரியங்களைச்செய்ய முத்துவைத் தூண்டியவர் பாலுதான். காரணம்? முத்துவின் காதலி கமலா பாலுவின் தங்கை. இது ஊரறிந்த விஷயம். பாலுவுடன் சேர்ந்து, அவரின் கொள்கைகளைப் பின்பற்றியதால் முத்துவும் கொலைகாரராகக் கருதப்பட்டு குற்றவாளியென கோர்ட்டிலே நிறுத்தப்பட்டிருக்கிறார். பொதுவாக கனம் கோர்ட்டார் அவர்களிடம் நான் வேண்டிக்கொள்வது யாதெனில், தொன்று தொட்டு நம் நாட்டில் நடந்துவரும் பழக்க வழக்கங்களை அழித்துத் தலைகீழ் மாற்றம் செய்ய வேண்டுமென்று போராடும் கூட்டத்தைக் கூண்டோடு ஒழித்து நம்நாட்டின் பண்டைய பெருமைகளை நிலைநாட்ட வேண்டும். இல்லையேல் நம்நாடு வீணாக சீர்குலைந்துபோகும். ஆதலால் அரசாங்கம் அந்த நாஸ்திகக்கூட்டத்தின் போக்

குக்குத் தடை உத்திரவு விதிக்க வேண்டும். அதைச் சட்ட பூர்வமாக்க வேண்டும். அதற்கு தாங்கள் இவ்வழக்கிற்குத் தரும் நல்ல தீர்ப்பு அரசாங்கத்தாருக்குத் தூண்டுகோலாக இருக்கவேண்டும் இத்துடன் என்வாதம் முடிந்துவிட்டது இனி எதிர்க்கட்சி வக்கீல் வாதாடலாம்.

**பாலு**: எங்களுக்கு வக்கீல் இல்லை.

**வக்கீல்**: அப்படியானால் உங்களுக்கு வெற்றியில்லை.

**பாலு**: அதைப்பற்றிக் கவலையில்லை.

**நீதிபதி**: மிஸ்டர் ஐயர். வீண் வார்த்தைகள் பேச இது இடமில்லை.

**வக்கீல்**: மன்னிக்கவும். (உட்காருகிறார்)

**பாலு**: சமூகமென்னும் சங்கிலியால் கட்டுண்டு கதறிப்புலம்பிக்கொண்டிருக்கும் விதவைகளுக்கு விடுதலைதேட முயன்றது என்குற்றமா? கனம் நீதிபதி அவர்களே தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். நீங்கள் பலநாடுகளின் பழக்க வழக்கங்களைப்பற்றி படித்திருப்பீர்கள். எந்த நாடுகளிலேனும் சமூகத்தின் பெயரால் கொடுமைகள் நடக்கின்றனவா? ஆண்கள் ஆயுள் உள்ளவரை அவரவர்களின் இஷ்டம் போல் எத்தனைத் திருமணங்கள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். பெண்கள் ஒரே ஒரு தடவைதான் மணப்பெண்ணாக திகழலாம் என்ற முறை நம் நாட்டைத்தவிர வேறு எங்காவது நிகழ்வதாக கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஏதோ சிறுவன் உளறுகிறான் என்று சினம் கொள்ளாதீர்கள். பண்டைய சரித்திரத்தை நினைவுக்குக் கொண்டு வாருங்கள். ஆதித்தமிழர்கள் சாதியால், சமூகத்தால் கட்டுண்டு வாழ்ந்தார்களா? இல்லவேயில்லை. அவர்கள் ஒன்றே

ஜாதி, ஒருவனேதேவன் என்ற உண்மையை கைக்கொண்டு வீரவாழ்வு வாழ்ந்து வந்தனர். அதை அழிக்க வேதங்கள், புராணங்கள், மதங்கள், கற்பனைக் கடவுள்கள் தோற்றுவிக் கப்பட்டன சோற்றுத்துருத்திகளால். பின்பு உபன்யாசம் புழுகுக்கு புத்தியை பலி கொடுத்தவர்களிடையே புராணங் கள், வேதங்கள் புகுந்தன மதங்கள், கற்பனைக் கடவுள்கள் தங்கள் வேலையைத் தொடங்கின. அதற்குக் கட்டுப்படாது கத்திகளைத் தூக்கியவர்களிடையே ஆரியக் கட்டழகிகள் தள்ளப்பட்டார்கள். தயங்காது தாழ்பணிந்தார்கள் தமிழர் களில் பலர் அதிக அழகுப் பாவைகளைப் பார்த்திராததால். கத்திகளைச் சுழட்டிய சிலர் வீரர்களின் முடிவை எய்தினர் தன் மானத்தைக் காத்துக்கொள்ள என்றால், மதப்புயலை, மனித வர்க்கத்திற்கு வேண்டாதசெயலை கிளப்பியது யார்? தண்டிக்கப்பட வேண்டியவர்கள் யார்? தகர்த்தெறியப்பட வேண்டிய கொள்கைகள் எவை? எண்ணிப்பாருங்கள். இன்னமும் சொல்கிறேன் கேளுங்கள். நெற்றியிலே விபூதி பட்டை, கழுத்திலே உத்திராக்ஷக்கொட்டை, இடையிலே நாலுமுழ காவிக்குட்டை, காலிலே பாதரக்ஷக்கட்டை— அணிந்து பகலிலே, பாமரர்கள் மத்தியிலே பகவான்களின் பராக்ரமங்கள், பல பல திருவிளையாடல்கள்பற்றி பலமான பக்திப் பிரசங்கம் செய்வார்கள். அவர்களையே பாதி இராத்திரியில்பார்க்கப்போனால் போகத்துக்கு தங்கபஸ்பம் தாகத்துக்குப் பலநாட்டுப் போதைச்சரக்குப் போட்டுக் கொண்டு உடலிலே அத்தர் வாடை, கண்களிலே போகச் ஜாடை வீச காரிகைகளின் குழுவிலே நின்று கொக்கோக லீலா விநோதங்களைப்பற்றி எடுத்துரைக்கும் கோமாளிக் கூட்டமா பக்தியை பரப்பும் மகான்கள்? நீங்களே யோசி யுங்கள். இவர்களால் நம் நாட்டில் அறிவு பெருகுகிறதா?

ஆராய்ச்சி வளர்கிறதா? அல்லது ஆண்டவன்கள்மீதுதான் அன்பு அதிகமாகிறதா? ஒன்றும் இல்லை. அப்படியிருக்க மக்களை அடிமுட்டாள்தனத்தால் அமிழ்த்தி அலங்கார வாழ்க்கை நடத்தும் அயோக்யர் கூட்டத்தின் கபடச் செயல்களைக் கண்டித்தது என் குற்றமா? இன்னும் கூறு கிறேன் கேளுங்கள். நம் முன்னோர்கள் அமைத்த ஆலயங் களிலே ஆடல், பாடல், அரங்கு, கல்வி நிலையம், ஆட்சி மன்றம், சிற்ப—ஓவிய காட்சிசாலை, மருத்துவ இல்லம்! முத லியவைகளை அமைத்து அனைவரும் ஏற்றத் தாழ்வின்றி அவைகளில் பலன் பெறலாமென்றிருந்தது. ஆனால் இன்று அதே ஆலயங்களிலே கலவிச்சாலை, சோறுவிற்கும் இல்லம், காசு சேர்க்கும் கணக்கற்ற விழாக்கள், கொடுமைக்கூட்டங் கள் அமைத்து ஆனந்த வாழ்வு நடத்துகிறது ஒரு கூட்டம் அதைக்கண்டு ஆதித்தமிழர் பாம்பரையினர் நடுங்கிக்கிடக்க வேண்டுமென்றால் நடக்குமா? காலம் மாறிய பின்பு. சொல்லுங்கள். நீதிபதியவர்களே, நானும் முதலியார் மகள் காமுவும் உள்ளன்போடு காதல் வாழ்க்கையை நடத்தி வந்தோம். வழக்கம்போல் ஒருநாள் காமுவைச் சந்திக்க தோட்டத்திற்குச்சென்ற நான் அவள் அங்கே கீழே படுத் திருப்பதைக் கண்டு அருகில் சென்று கவனித்தேன். மார் பில் இரத்தம் வடிந்தவண்ணம் இறந்து கிடந்ததைக் கண் டேன். கதறி விழுந்தேன். சிறிது நாழியில் அய்யர், முதலி யார், இன்ஸ்பெக்டர் முதலியவர்கள் வந்து என்னைக்கைது செய்தார்கள். நான் ஒன்றும் அறியாதவன் என்று அலறி னேன். மனம் இறங்கவில்லை. அவ்வளவுதான் உண்மை. கடைசியாக உங்களைநான் வேண்டிக்கொள்வது யாதெனில் தமிழர்கள் தன்மானத்துடன் வாழவேண்டுமென்பதற்காக இவ்வழக்கிற்கு ஒரு நல்ல தீர்ப்பு தாருங்கள் என்பதே

யாகும். அதனால் நாட்டை நாசமாக்கும் கண்மூடிக்கொள் கைகளைக் கொன்றொழித்தவர்களாவீர்கள். உங்கள் புகழ் உலகம் உள்ளவரை ஓங்கி நிற்கும்.

[இருவரின் வாதங்களையும் கேட்ட நீதிபதி சட்ட புத்தகத்தைப் புரட்ட ஆரம்பிக்கிறார்.]

**பானு:** கனம் நீதிபதியவர்களே! உங்கள் கரங்களில் இருக்கும் சட்டப்புத்தகம் தமிழ் நாட்டின் பண்பை ஒட்டி எழுதப்பட்டதல்ல. நம் நாட்டில் வந்து புகுந்த தன்னலக்காரர்களால் தயாரிக்கப்பட்டது. ஆதலால் அதைப்புரட்டுவதில் பலனில்லை. உங்கள் சிந்தனைக்கு வேலை கொடுங்கள். ஒரு நல்ல தீர்ப்பு தாருங்கள். நாட்டின் போக்கை திருத்துங்கள்.

[பானுவின் பேச்சைக்கேட்ட நீதிபதி சட்ட புத்தகத்தை மூடி வைக்கிறார். ஒருபுறமிருந்து கமலாவும் மற்றொரு புறமிருந்து கோமுவும் ஓடி வருகிறார்கள்.]

**கமலா:** கனம் நீதிபதியவர்களே! நிரபராதிகளை தண்டிக்காதீர்கள், தண்டிக்காதீர்கள்.

**கோமு:** பானுவும், முத்துவும் குற்றமற்றவர்கள். தண்டிக்காதீர்கள். நிறுத்துங்கள்.

**நீதிபதி:** பெண்களே, நீங்கள் யார்?

**கமலா:** நான் பானுவின் தங்கை. முத்துவின் காதலி

**கோமு:** நான் அண்ணாசாமி அய்யரின் மகள். முத்துவை காதலிக்கிறேன்.

[இவ்வார்த்தையைக் கேட்டதும் அய்யரும், இன்ஸ்பெக்டரும் ஆச்சர்யத்தில் ஆழ்தல்]

**நீதிபதி:** உங்களுக்கு இவ்வழக்கைப்பற்றி ஏதாவது உண்மைகள் தெரியுமா?

**கோமு:** தெரியும். அதோ, என் தந்தை அண்ணுசாமி அய்யர் இருக்கிருரே, அவர் ஒரு பேராசைக்காரர் பிறரின் பொருளேச் சூழ்ச்சி செய்து சுரண்டுவதில் மகா கெட்டிக்காரர் இதைத் தெரிந்துகொள்ளாமல் வீரநாத முதலியார் இவரை அந்தரங்கக் காரியதரிசியாக வைத்துக்கொண்டார். முதலியார் பல அக்ரமங்களேச் செய்தார் என் தந்தையின் பேச்சைக்கேட்டு. இப்படியிருக்க என் தந்தை முதலியாரிடம் பத்தாயிரம் ரூபாய்களே யாங்கிக்கொண்டு மானத்தை காற்றில் பறக்கவிட்டுவிட்டு என்னே விபசாரத்திற்கு அனுப்பினர். அந்த ஈனத்தொழிலே விரும்பாத என்னே முதலியார் பலவந்தம் செய்யத்தொடங்கும்பொழுது, இதோ நிற்கிருரே முத்து இவர்தான் என்னே அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றி அனுப்பினர். அன்றையிலிருந்து முத்துவின் மீது எனக்கு காதல் பிறந்தது. மற்றவர்களுக்கு அவர்மீது கோபம் உதித்தது. இது இவ்விதமிருக்க, பல தடவைகள் முதலியார் மகள் காமுவினல் அவமானப்படுத்தப்பட்ட என் அப்பா அவளேக் கொன்றுவிட்டால்தான் நமக்குச் சௌகரியம் கிடைக்கும் என்றெண்ணி சப் இன்ஸ்பெக்டர் நாணுவைத் தன் வசப்படுத்திக் கொண்டதுமல்லாமல் என்னே அவருக்குக் கல்யாணம் செய்து தருவதாகவும் ஆசைகாட்டி சமயம் பார்த்து காமுவைக் கொன்றுவிட்டு இன்ஸ்பெக்டர் உதவியால் பாலுவைக் கைதுசெய்து விட்டார். அன்றைய தினம் என் தந்தை தனக்கு செய்த பேருதவிக்காக இன்ஸ்பெக்டருக்கு ஐயாயிரம் ரூபாய்கள் கொடுத்திருக்கிருர். அதற்கு ஆதாரம் இந்த டைரியில் இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் காமுவைக் கொன்ற போலீஸ் இலாகா துப்பாக்கியும் இருக்கிறது. பாருங்கள்.

[என்று சொல்லி நீதிபதியிடம் டைரியையும், துப்பாக்கியையும், கோமு கொடுக்கிறாள். நீதிபதி அவைகளைப் பார்வையிடுகிறார் நீதிபதி துப்பாக்கியையும், டைரியையும் பார்வையிட்ட பிறகு]

**கோமு:** கனம் நீதிபதியவர்களே! முதலியார் கொலை செய்யப்பட்டதும் இன்ஸ்பெக்டர் தயவினால் தான். முதலியார் கொலைசெய்யப்பட்ட சமயத்தில் முத்து ஊரிலில்லை என்பதற்கு ஆதாரங்கள் இருக்கின்றன. ஆதலால் இவர்கள் இருவரும் ஒரு குற்றத்தையும் அறியாதவர்கள். தயை புரியுங்கள்.

**நீதிபதி:** தீர்ப்பு நாளை கூறப்படும். கோர்ட்டு கலையலாம்.

## காட்சி 32

இடம்: **வீதி,** காலம்: **மறுநாள் பிற்பகல்**

பாத்திரங்கள்: **மன்னார்சாமி, பங்காருசாமி**

**மன்னார்சாமி:** வாங்க சார், எங்கே போயிட்டு வர்ரீங்க.

**பங்காருசாமி:** ரீடிங் ரூமுக்குப் போயிட்டு வர்ரேன்.

**மன்னார்சாமி:** முதலியார், காமு கொலை வழக்கைப்பற்றி என்ன தீர்ப்பு ஆயிருக்கு?

**பங்காருசாமி:** நல்ல தீர்ப்பு தான் சொல்லியிருக்காங்க.

**மன்னார்சாமி:** என்னமா சொல்லியிருக்காங்க?

**பங்காருசாமி:** பாலுவையும், முத்துவையும் விடுதலை செய்திருக்காங்க. அய்யருக்கும், இன்ஸ்பெக்டருக்கும் தூக்குத் தண்டனை தந்திருக்காங்க.

**மன்னூர்சாமி:** நீதிபதி செய்தது ரொம்ப சரி சார். நானும் இந்த நல்ல தீர்ப்பைத்தான் எதிர்பார்த்தேன்.

**பங்காருசாமி.** எல்லாம் நம்ம மனம் போலவே நடந்துவிட்டது. இனி தமிழ் நாடு விழித்துக்கொள்ளும்.

**மன்னூர்சாமி:** சிறிதும் சந்தேகமில்லை.

**பங்காருசாமி:** அப்பொ, நான் ஹோட்டல் வரைக்கும் போயிட்டு வர்ரேன் சார்.

**மன்னூர்சாமி:** சரி. போய் வாங்க.

**பங்காருசாமி:** நீங்களும் வாங்களேன், போய் காபி குடிச்சிட்டு வரலாம்.

**மன்னூர்சாமி:** வேண்டாம் சார். இப்பொ தான் குடிச்சிட்டு வந்தேன். நீங்க போயிட்டு வாங்க.

[என்று சொல்லிவிட்டுப் போகிறார்]

**பங்காருசாமி:** ஆசாமிக்கி செலவு வைக்கலாம்ண்ணு பார்த்தேன். தப்பிச்சுக்கிட்டுப் போயிட்டான். என்ன செய்யறது? இன்னும் எவனாவது சிக்குறானாண்ணு பார்ப்போம்.

[என்று சொல்லிவிட்டுப்போகிறான்.]

★

# காட்சி 33

இடம்:— முதலியார் வீடு காலம்:— மறுநாள் காலை

பாத்திரங்கள்: முத்து, கோமு, கமலா, பாலு.

[முத்து, கமலா, கோமு, மூவரும் மாலை அணிந்து கொண்டு மணக் கோலத்துடன் நிற்கிறார்கள். அவர்களைப்பார்த்து பாலு பேசுகிறான்.]

**பாலு:** முத்து. இரண்டு பெண்டாட்டிக்காரன்பாடு திண்டாட்டம் என்று திண்ணைத்தூங்கி ஆண்டிகள் பாடியதை கவனத்துக்குக்கொண்டுவராமல் மூவரும் கருத்தொருமித்து கண்யமாய் வாழுங்கள். நான் என் லட்சியங்களை நாட்டில் பரப்புவதற்காக எஞ்சியிருக்கும் வாழ்நாளை அர்ப்பணித்து விட்டேன். இனி சுற்றுப்பிரயாணம். உயிர் உள்ளவரை உங்களை அடிக்கடி வந்து சந்திக்கிறேன். கவலையைவிட்டு இருங்கள்.

[என்று சொல்லிவிட்டு பாலு போகிறான். மூவரும் பாலுவுடன் சென்று வெளியிலே நின்று அவன் உருவம் மறையும் வரை விழிகளை வேறு பக்கம் திருப்பாமல் உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.]

முடிந்தது.

பார்க்கப் பரவசமளிக்கும்

**பாரீஸ் வைரங்கள் !**

கண்களைக் கவரும்

**கனகா வைரங்கள் !**

மற்றும் பலவிதமான கலர் கற்கள்
எங்களிடம் தோடு & பேசரி
ரகங்களில் கிடைக்கும்



தயாரிப்பவர்

**T. S. தங்கவேலு பிள்ளை,**

பெரிய கடைவீதி, திருச்சிராப்பள்ளி.



காதுகளை அலங்கரிக்கும்

**கமலா வைரங்கள் !**

மாதுகளை மகிழ்விக்கும்

**கிருஷ்ணு வைரங்கள்**

என்று ஓதும் மொழிகளின்
உண்மை அறிய
ஒருமுறை விஜயம்செய்யுங்கள் !

தயாரிப்பவர் :

**A. கிருஷ்ணன்,**

சின்னகம்மாளத் தெரு, திருச்சி.

மக்களின் வாழ்வு சுழல்வது
விதியினாலா? மதியினாலா?

என்ற

சிக்கலை அறுத்து உண்மையை
அம்பலப்படுத்த

M. G. ராமச்சந்திரன், M. R. சந்தானலக்ஷ்மி,
M. M. மாரியப்பா, T. S. பாலையா,
M. N. நம்பியார், V. N. ஜானகி,
லக்ஷ்மிபாய் நடிக்கும்

# "ஸ்வர்ண மாலா"

துரிதமாகத் தயாராகிறது!

ஸ்டுடியோ:- ரத்னா, சேலம்.

டைரக்ஷன்:- S. நொடானி.

குடும்பத்துடன்

## தஞ்சாவூர் வாருங்கள் ?

பாமரர்களும் பண்டிதர்களும் பன் முறைகள் பார்த்துப் பயன் பெற பாவலர் தந்துள்ள

**பராசக்தி**

அறியாமை இருளில் சிக்கித் தவிக்கும் அருந் தமிழ் நாட்டினரைக் கடைத்தேற்ற கருணாநிதி தந்துள்ள அறிவுச்சுடர்கள்

**மந்திரி குமாரி**
**ஒரே முத்தம்**

பெண்ணே பெரியவள் ஏன்? விளக்கமான பதில் தருகிறது வெங்கடாசலத்தின் பேனா பெற்ற

**பெண்**

பணம் செய்யும் திருவிளையாடல்களை திருத்த நாதன் உருவாக்கிய

**பணப் பேய்**

வாழ்க்கையில் இன்பம் பெற வழிகாட்டும்

**சாந்தி**

நாட்டை நாசமாக்கும் நச்சுக் கொள்கைகளை நசுக்க வேலன் எழுப்பியுள்ள

**சூறாவளி**

இன்னும் பல அறிஞர்களின் எழுத்தோவியங்கள் தயாராகின்றன!

நடிப்பவர்கள்:

## ஸ்ரீ தேவி நாடக சபையார்

முகாம்:

தஞ்சை இராமநாதஞ் செட்டியார் ஹால்

உரிமையாளர்: கே. என். இரத்தினம்

நிர்வாகி: கே. என். வைத்திநாதன்

அழகான ஆபரணங்கள் செய்வதற்கும்

அசல் பிரகாசிப்பிற்கும்



வைரங்களின் ஜொலிப்பிற்கும்

# புரு மார்க் வைரங்கள்

சிறந்தது

* * * * * * தயாரிப்பவர் * * * * * *

## பாலகிருஷ்ண நாயுடு,

பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

---

## நல்ல வளையல் வேண்டுமா ?

புதிய தினுசுகளில் **பெயர் வளையல்**
மற்றும் உங்களுக்குப் பிரியமான
வகைகளில் **வளையல்கள்**
தயார்செய்து தருகிறோம்.

## R. P. சாமி & பிரதர்ஸ்,

சின்னகம்மாளத் தெரு, திருச்சி.

இனி வெளிவரவேண்டிய
நமது மகத்தான வெளியீடுகள்!

தோழர் D சுந்தரம் எழுதிய

**காதல் பாதை**

**வெற்றி**

**திரு சி. பி. சிற்றரசு எழுதிய**

சிந்தனைக்கு விருந்தளிக்கும்
சிறந்த நாடகங்கள்

**கணவனல்ல**

**இரத்தத் தடாகம்**

**சேரனாட்டதிபதி**

**கௌரிவாணன்**

**மதி**

விவரங்களுக்கு :-

**ஔவை நிலையம்,**

**காரை போஸ்ட்,**

**திருவானைக்கோயில் வழி, திருச்சிராப்பள்ளி ஜில்லா**

ஆடவர் புகழும் ஒன்று

அணங்குகள் மகிழும் ஒன்று

அசல் சரக்கு அடி பணியும் ஒன்று

அழகை அதிகப்படுத்தும் ஒன்று

அணிகலன்களை சிறக்கவைக்கும் ஒன்று

அகிலம் போற்றும் ஒன்று

?

# " அருண "

## ஸ்டார் வைரங்களே!

தயாரிப்போர்:—

M. P. செல்லப்ப செட்டியார் &

T. N. குப்புசாமி செட்டியார்

பெரிய கடைவீதி, ★ திருச்சிராப்பள்ளி.

தலை வெட்டி சிந்தாமணியின்
தொடர்ச்சி

# அன்பழகன் ஆட்சி



ஆசிரியர்:
ஆசைத்தம்பி

எரிமலைப் பதிப்பகம்
துறையூர், திருச்சி ஜில்லா